# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் ; நான் மதியாதன
மானுட வாழ்வில் இலே.

மாலை - II ஆடி — 1925 காசு - 4


## புதிய இந்தியா.

### (கிளிக் கண்ணிகள்)

சின்னஞ் சிறிய மகள்,
சிங்காரச் செல்வ மகள்,
எந்நெஞ் சினிக்கும் மகள் — கிளியே,
எங்கள் நவ இந்தியாவே. (1)

பண்டோர் முதுக் கிழவி,
பார்க்கெல்லாம் தாய்க் கிழவி,
கண்டோர் தொழும் கிழவி — கிளியே,
காலம் கடந்தனளே. (2)

இந்நாள் முளைத் தெழுந்து,
எங்கள் மனம் படர்ந்து,
அன்னாள் இளங் கொடி போல் — கிளியே,
ஆனந்தக் கூத்தாடுமே. (3)

எங்கள் தருமத் தல்லி,
எங்கள் அருமை மகள்,
எங்கள் அரசி அவள் — கிளியே,
எல்லாம் அவள் எமக்கே. (4)

பாதம் பணிந்திடுவோம்,
பரிந்துச்சி மோந்திடுவோம்,
ஏதும் அவள் பணியே — கிளியே,
என்றும் உழைத்திடு வோம். (5)

உயிர்ப்ப தவள் பொருட்டே,
உண்ப தவள் பொருட்டே,
பயிர்ப்பு படிப்புகள் எல்லாம் — கிளியே,
பயில்வ தவள்பொருட்டே. (6)

சிறக்க அவள் நலங்கள்,
சீர்க்க அவள் பெருமை,
இறக்கவும் அஞ்சோ மடி — கிளியே,
எல்லாம் எமக்கவளே. (7)

எம் தாய், மகள், இறைவி,
எல்லாம் எமக் கவளாய்த்
தந்தான் தனிமுதலே — கிளியே,
சன்ம சாபல்யம் இதே. (8)

அன்னை அடி பரவி,
ஆசை மகள் வளர்த்து,
பின்னை உலகுக் கெலாம் — கிளியே,
பேரரசி ஆக்குவமே. (9)

தோண்மைந் துடைய வரேல்,
தொல் கிழவி மக்களெனின்,
ஆண்மை எமக்குள தேல் — கிளியே,
ஆணை யிது, தப்பா தடி! (10)

—அமுதகவி.

## புராதன காலத்து வித்தியார்த்திகள்

("பாலபாரதி"யில் ஆசிரியர் வ. வே சு. ஐயர் எழுதியது.)

இந்தியாவில் பூர்வ காலத்தில இந்திய மாணவர்கள் குரு குலத்தில் எவ்வாறு வசிததுக கல்வி கற்பிக்கப்பெற்று வந்தார்கள் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இநதியாவில் பூர்வத்தில் மனிதர்கள, பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற ஆசிரமங்களை வருத்து முறைபெற அனுஷ்டானத்திற் கொண்டு வந்திருநதார்கள். இக் காலத்தில் இவ்வனுஷ்டானம் பெயர் மாத்திரையிலிருந்து வருகிறது.

தழைகளினுலும், மரக் கொம்புகளினுலும், மரம் அடர்நத தோப்புகளிலும், காடுகளிலும் வீடுகள செய்துகொண்டு பெரிய வர்கள் முற்காலத்தில் வசிபபதையே ஆசிரமம் என்று கூறிவந்தார்கள். ஆசிரமம் என்றதற்கு உண்மையான பொருள, வீடு அல்லது குடிசையென்று சொல்வது பொருததமானதாகாது.

'ஆசிரமம்' என்ற வடமொழிப் பதம் 'மிக்க சிரமமேற் கொண் டுழைப்பது' என்று பொருள் படுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு ஒரு வழியில் கஷ்டப்பட் டுழைப்பதற்கே, ஆசிரமம் என்று சொல்லப் பெறுவதாகும்.

மனிதன், கர்மம, யோகம், ஞானம் என்ற மூன்று வகைகளில் கஷ்டப்பட்டுழைக்கிறான். ஒருவன் செய்யும கர்மமே தர்மமாகும். மற்றொரு விதத்தில் கவனிபபோமானால் தர்மமே கர்மமாகும். மனிதன் தன் சக்தியை விருத்தி பண்ணுவதற்கு யோகம் செய் கிறான. சந்நியாச ஆசிரமம் மேறகொண்டு மனிதன் தன் ஞானத் தைப் பெருக்கிக் கொள்ளுகிறான. ஆகவே, கர்மம், தர்மம், ஞானம் என்னும் மூன்றினையும் பெற மனிதன பிரமசரிய ஆசிர மத்தில சிரமம் மேற்கொண்டுழைக்க வேண்டியவனுகின்றான்.

பிரமசரியாசிரமம் — பிரமசரியம் என்னும் பதத்திலுள்ள பிரம்ம் என்னும் பதம் தததுவம என்று பொருள்படும். தத்துவம், உண்மை, சத்தியம் என்னும் சொற்களெல்லாம, ஒரே அர்த்தத் தைக் கொடுக்கும். உண்மையான தத்துவப் பொருளையறிய, பிரம சரிய ஆசிரமமே அடிப்படையானதாகும். பூர்வ காலத்து மாண வர்கள் ஒவ்வொருவரும் ஒரே உண்மைப் பொருளையே அறிய விரும்பிக் குருகுலத்திற் புகுந்து, ஆசாரிய சுசுருஷை மேற்கொ ண்டு, ஒரே பொருளை அறிந்து கொள்வதிற பெரிதும் முயன்றார் கள். தற்போதைய படிப்பு இபபடிபபட்ட தன்று. வயிற்றுப் பிழைப்புக்காக ஏறபட்டது என்பது தெளிவாயிருக்கிறது. ஆகை யால், பூர்வ குருகுல வாசப் படிபபுக்கும் இக்காலத்துப் படிப்புக்கும் இடையில மிமப வித்தியாசங்க ளிருப்பதில் ஆச்சரிய மொன்று மில்லை. முற்காலத்தில குருகுலத்தில் ஆசிரியர்களாக வந்த மாந் தர்கள் இயற்கையிற் சிறந்த உபாத்திமார்களாகவே இருந்தார்கள் என்னத் தடையில்லை. ஒவ்வொரு உபாத்தியாயரும், தாய் கற்பிப் பதுபோல் நிதர்சனமாய் நடந்து காட்டுவார்கள. உபாத்தியாயர் கள் தமக்கேயன்றிப் பிறருக்கே உபாத்திமார்க ளாவார்கள். பூர்வ காலத்து மாணவர்கள் ஒவ்வொருவரும ஒவ்வொரு விஷயத்தினை ஐயந்திரிபற அறிவதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத் திப் பயன் பெற்று வந்தார்களெனபதற்கு உபநிஷத்து வாக்கியா னங்கள் பலவிருக்கின்றன.

பூர்வகுருகுலபதிகளும் குருகுலங்களும்——பூர்வ காலத்தில் மாண வர்களுக்கு வித்தியாபயியாசம் செய்வதற்கென்றே கங்கணம் கட் டிக்கொண்டுநின்ற ஆசிரியர்கள், குலபதிகள் என்றழைக்கபபட் டார்கள். இபபடிபபட்ட குலபதிகள் பலர் பல்லாயிரம மாணவர் களின் சங்கியைகளைத் தம்கீழ் கொண்டவர்களாய், இடங்கள் தேர

றும் இருந்தனர். கிரகஸ்தர்கள் பலபேர் நெருக்கமாய் வஸிக்கும் கிராமங்களின் எல்லையின் ஒதுக்குப் புறத்திலேயே பூர்வகுருகுலங்கள் ஸ்தாபிதம் அடைந்திருந்தன. தற்காலத்திய படிப்புக்கேற்பட்ட பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்ட ஏராளமான தொகை செலவாவது போல் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டத் தொகை அதிகம் வேண்டியிருந்ததில்லை. தற்கால கல்விச் சாலைகளுக்கென்று வேண்டும் மூலதனம்போல் அக்காலத்திய குருகுலங்களுக்கு மூலதனம் ஏராளமாய் வேண்டி யிருந்ததில்லை. பீர்வீக காலத்தில் குலபதியின் அல்லது குருகுலத்தின் ஆசாரியனின் சத்தியமே அக் குருகுலத்திற்குற்ற பெருத்த மூலதனமா யிருந்தது. குருகுலத்தில் பயிலும் பிள்ளைகளும் இக் காலத்துக் கல்விசாலைப் படிப்புக்குச் செலுத்தும் விசேஷமான கட்டணம்போல் கட்டணமும் செலுத்தத் தேவையா யிருந்ததில்லை. ஒவ்வொரு குடும்பத்தினின்றும் மாணவர்களைக் குருகுலத்திற்கு அனுப்பியே தீரவேண்டுமென்னும் கட்டுப்பாடும் அக்காலத்தி லிருந்தது. தகப்பன் பிள்ளைக்குத் தேவையான யோக்கியதை யுடையவனா யிருப்பினும், அவனும் தன் பிள்ளையை குருகுலத்திற்கே யனுப்பவேண்டுமென்ற நியதி அக்காலத்திலிருந்து வந்தது. குருகுலத்தில் படிக்கும் பையன் அரசன் மகனாயினும ஏழையின் மகனாயினும், ஒரே விதமாகவே நடத்தப் பெற்று வந்தான் என்பதற்குஆதாரங்கள் வேதப் புத்தகத்தில் காணக் கிடைக்கின்றன. குருகுல வாஸியான வித்தியார்த்திகள் எவராயினும் பிக்ஷை யெடுத்துக் குருநிவேதனம் செய்து, அவருத்திரவு பெற்று உண்ண வேண்டுமென்ற நியமம் அக்காலத்திய குருகுலங்களில் ஏற்பட்டிருந்தது. ஆகவே அக்காலத்துக் குருகுலங்களில் ஏற்பட்ட மாணவர்களின் போஜன விடுதிகளின் பொருட்டு பணச் செலவு ஏற்பட்டதில்லை. கிரகஸ்தர்கள் வஸிக்கும் கிராமங்களுக்கருகே குருகுல பாடசாலைகள் ஏற்பட்டிருந்தபடியால் மாணவர்கள் தம் முனைவிற் சென்று கஷ்டப்படாமல் பிக்ஷை யேற்றுக் குருகுலங்களிற் கொண்டுவந்து வயிறு நிறையச் சாப்பிட்டுக் கவலை யில்லாமல் கற்று வந்தார்கள். இதனாறிக் குருகுலங்கள் ஒவ்வொன்றிற்கு எண்ணிறந்த பசுக்கள்உண்டு. இப்பசுக்களின் பால் தயிர் நெய் முதலியன இக் காலம்போல் பணம் சம்பாதிப்பதற் சென்று மாற்றப்படுவ தில்லை. பசுக்களினின்று கிடைக்கும் பால் தயிர்களெல்லாம் மாணவர்களைப் போஷிப்பதற்கே உபயோகப்பட்டு வந்தபடியால், அக்காலத்திய மாணவர்கள், தேசக் கட்டுடையவர்களாயும், பூர்ணாயுசை யுடையவர்களாயும், மூளை பலமுள்ளவர்களாயும், தம்மாசிரியர் போன்ற குணமும், கல்வியும் நிரம்பப் பெற்றவர் களாயுமிருந்ததாக அறியக் கூடியதா யிருக்கின்றது. உத்தாலகன் என்றும் ஆருணி யென்றும் பெயர்

பெற்ற ஆசாரிய சிரேஷ்டன கல்வித்துறையிற் கரை கண்டவர் என்று உபநிஷத்து வாக்கியங்கள் கூறுகின்றன. இவருக்கு சுவேத கேது என்ற திருக்குமார னொருவ னிருந்தான். அக் குமாரனை உத்தாலகன் தனனிடமே வைத்திருந்து கல்வி கற்பிக்காமல், மற்றொரு ஆசாரியனிடமே கல்வி கற்க அனுப்பித்தான் என்று அறிவதிலிருந்து, குருகுலத்தில் ஒவ்வொரு பிள்ளையும் குருகுலத்திலேயே கட்டாயம் போய்ப் பயின்று வரவேண்டும் என்று நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்த தென்பது தெளிவாய்த் தெரிகிறது.

பிரமசரிய வாழ்க்கை—குலம், இனம், மந்தை, கூட்டம் இவை யாவும் ஒரு பொருள் குறிக்கும் பதங்களாகும். பிராணிகளின கூட்டத்தை மந்தை யென்றோம். பட்சிகளின் கூட்டத்தைப் பட்சிஜாலம் என்றழைக்கிறோம். அப்படியே மாணவர்களின் கூட்டத்தை, மந்தையை, அல்லது இனத்தைக் குருகுலம் என்றழைக்கிறோம். உலகத்தின் சேவைக்கு இச சிஷ்யக் கூட்டங்களில்லாமல் முடியாது. இச சிஷ்யக் கூட்டங்களெல்லாம் பிரமசரிய ஆசிரமத்தை மேற்கொண்டவர்களா யிருந்தார்கள். உலகத்தில எதிர்காலத்தில் நேரக்கூடிய கஷ்ட சுகங்களைச் சகித்துக் காரியங்கள் செய்யத் தக்கவாறு இம் மாணவர்கள் குருகுலத்தில் தகுந்த பயிற்சி பெறுகிறார்கள். உலகத்தில மனப்பதைகளுக்கு ஏற்பட்ட வியாதிகளைத் தீர்க்க இவர்கள் குருகுலத்தில பயிற்சி பெறுகிறார்கள். கஷ்டப்படுபவர்களைக் கை தூக்கவும், ஆறுதல் சொல்லவும், அசாத்தியமான காரியங்களைப் புத்தி வன்மைகொண்டு சாத்தியமான காரியமாகச் செய்யவும், இவை போலவன பிறவற்றிலும் இவர்கள் செவ்வையாய்ப் பயிற்சி பெறுவதனால், இவர்கள் குருகுலம விட்ட பிறகாலத்தில் உலக உபகாரிகளாய் மாறுகிறார்கள். இப்படிப்பட்ட பிரமசாரிகளையே, இக் காலத்தில் இச்சா சேவகர்கள் (வாலண்டியர்கள்) அல்லது வாலிப சாரணர்கள் என்று பெயர் கொடுத் தழைக்கிறோம். இப் பிரமசாரி ஆசிரமத்தை மேற்கொண்டவர்கள், அ வயதிலிருந்தோ அல்லது பன்னிரண்டு வயதிலிருந்தோ உச வயது வரையில பழகவேண்டும். பிரமசரிய விரதம் பூண்டவர்கள், தினந்தோறும் காலையில் ச மணிக்கு எழுந்திருக்க வேண்டும். எழுந்திருந்து அவசியமான காலைக் காரியங்களைப் பார்த்தபின், உ-இ மணி சாவகாசமளவு, நம்முடைய சக்தியைப் பெருக்கிக் கொள்ளவேண்டி, ஆயிரம் காயத்திரிக்குக் குறையாமல், ஜெபம் செய்யவேண்டும். பின் சுமார் கூ-இ மணிக்குத்தான், இம் மாணவர்கள் தம் ஆசிரியரிடம் சென்று கல்வி ஆரம்பிக்க வேண்டும்.

குருகுலக் காலவரையறை.—பூர்விக காலத்தில மாணவர்களெல்லாரும் சுமார் ஐந்து மாத காலவளவுதான், தாம் ஆசாரியரிட

பிருந்து கல்வி பயின்று வந்தார்களென்ன வேண்டியிருக்கிறது. மீதியான ஏ மாஸ காலங்களையும் பிரமசாரிகள் தமது இல்லங்களில் பெறறோர்களுடன் வேறு காரியங்களைப் பார்த்து வநதனர் என்பது தெளிவாயிருக்கிறது. பூர்வகாலத்துக் குருகுலங்கள் யாவும் சிராவண மாஸம் என்று சொல்லப் பெறுகிற ஆடி, ஆவணி, மாஸங்களில், பூர்வீக அநுஷ்டானமாகிய பௌர்ணமி தினததில் திறக்கப் படுகின்றன. இது விஷயததை ஞாபகப் படுத்துவதற்காகவே தான், தற்காலத்தில் பிராமணாகள சிராவண உபாகர்மத்தை வைத்துக் கொண்டாடி வருகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படிச் சிராவண பௌர்ணமியில் திறநத வேதபாடசாலை மூடும் தினம, அடுதத தை மாதத்தில் வரக்கூடிய புஷ்ய நக்ஷத்திரம் சேர்ந்த பௌர்ணமி தினம என்று வேதத்திலிருந்து கூறும் ஆதாரத்தினுலறிகிறோம். ஆனால் தற்காலத்தில வேதாரம்பம் செய்யும தினத்தைப் பிராமணர்கள கொண்டாடுவதை நாம் பார்க்கிறோமே யொழிய, பள்ளிக்கூடம் மூடும் தினமாகக் கருதப் படுகிறதை, புஷ்ய பௌர்ணமி தினத்தைக் கொண்டாடப் பார்த்த திலலை. இதிலிருந்தும், தறகாலத்தில் பிராமணர்கள், சிராவண பௌர்ணமியிலேயே பள்ளிக்கூடத்தைத் திறநததாகப் பாவனை பண்ணி, அவறை தினமே மூடும் அனுஷ்டானத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்க ளெனத தெரிகிறது. தற்காலத்து ஆசாரியர் களுக்கு ஏற்படடிருக்கும் வேதனம்போல் பூர்வீக ஆசிரியர்கள் வேதனம் பெறுவதிலலை. குருகுலத்தை மூடி மாணவர்களுக்கு ரஜாக்கொடுத்த ஏழுமாத காலத்தில, ஆசிரியர்கள் வருஷத்திற்குத் தேவையான வருமானததைக் கிரகஸ்தர்களிடமிருநது பெறுகிறார் கள். ரஜாவில் குலபதிகளிருக்கும் ஏழு மாஸ காலமும, தேவதைகள் விழித்துக் கொண்டிருக்கும் உத்தராயண காலமாகையால், தேவதைகளைத் திருப்தி பண்ணிவைக்க வேண்டி, அநேக யாகங் களும யக்ஞங்களும் புண்ணிய காரியங்களும் நடைபெறும். இச் சமயத்தில ஆசிரியர்கள் தம் குடும்ப ரக்ஷணத்திற்கு உரிய பொருள்களைத் தேடிக்கொள்வார்களாகவே, உபாத்தியாயர்கள் அக் காலததில் தனியாகவே தனம் யாதொனறும் பெறவில்லை.

விவாக காலம்—பிரமசாரிகள் அ முதல் உச வயது வரையில குருகுலத்தில் விததியாபபியாசம் பண்ணவேணடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தபடியால, இந்த வயது வரையில் மாணவனுக்குக் கலியாணமாவதில்லை. அக் காலத்தில் பிரமசரிய ஆசிரமம் கழித்தே கலியாணம செய்விக்கும விதி நிர்ப்பநதமாயிருந்ததனுல், பாலிய விவாகம் என்ப திருந்த திலலை. "குருகுல வாஸததைச செவ்வையாய் முடித்து, ஆசாரியரிடமிருந்து உத்தரவு பெற்றவன், ஸ்நாதகன் என்னப் படுவான். ஸ்நாதகன் என்னும் பதம், ஸ்நாநம்

பண்ணினவன் என்று பொருள் படும். இவ்வாறு பிராமணர்கள் குருகுலத்தில் வித்தியாப்பியாசத்தை முடித்து, ஸ்நாதக விருதத்தைப் பூர்த்தி செய்யும் வழக்கம் பிரமசாரியின் கலியாண காலத்தின் பூர்வாங்கமாக அனுஷ்டிக்கப் படுவதை நாம இன்றும் பார்க்கிறோம். இதிலிருந்தும், பழைய சம்பிரதாயத்தில் பூர்விகர்கள் அனுஷ்டித்து வந்த விரதம் மறந்து போகாமல், இன்றும் கொண்டாடுகிறாற் போல் தோன்றுகிறது.

பிரம ஸ்திரீகள்—வாலிபர்கள் பூர்வ காலத்தில், குருகுலத்திற் சேர்ந்து வித்தையிற் பயிற்சியடைந்தமை போன்று, பிரமஸ்திரீகளாகப் பெண்களும், அதே குருகுலங்களில் பூர்வ காலத்து ஸ்திரீகளும் பிரமசாரிணிகளாக விருந்து ஆசாரியரிடமிருந்து கல்வி பயின்று வந்தார்கள் என்பதற்கு வேதத்தில் பிரமாணங்கள் பலவற்றைக் காணலாம. புருஷர்களுக்கு பிரமசரிய ஆசிரமத் துவக்கத்தில், யக்ஞோபவீதம் தரிப்பித்து உபநயனம் செய்வித்தது போல், வேதகாலத்தில் பிரமசாரிணிகளும நடத்தப்பட்டார்கள் என்று வேதங்களில சொல்லப்பட்டிருக்கின்றன. வேதகாலத்தில், ஸ்திரீகளுக்கு, இப்போது நாயகனே ஆசாரியனாகும் வழக்கம் போல், ஏற்பட்டிருந்ததில்லை. ஸ்திரீகளும் உபநயனம் செய்விக்கப்பட்டுப் பெற்றோர்கள் வீட்டில் 'தமக்குத் தக்க வரன்கள் அகப்படும் வரையிலும் கலியாணமில்லாமல்' வேதாப்பியாசம் செய்து வந்தார்கள என்பதற்கு வேதத்திலிருந்து எண்ணிறந்த 'ஆதாரங்கள் கிடைக்கின்றன. வேத காலத்தில பிரமஸ்திரீகள் பலர் உபநயனம் செய்விக்கப் பெற்றுக் குருகுலவாஸத்தை விஸ்தாரமாய்ச் செய்து மேமபட்டிருக்கிற தன்மையை ருக்வேத மந்திரத்ரஷ்டாவாகிய ஆம்பிரிணி போன்ற சிறந்த ஸ்திரீகளின் பெருமையிலிருந்தும் அறிய இடமிருக்கின்றது. ருக்வேதத்தில் மட்டும் மந்திரத்ரஷ்டாக்களாகப் பன்னிரண்டு நாரீ மணிகள் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே நவ நாகரீகம் மிக்க தற்காலத்தில், ஸ்திரீகளுக்கு உபநயனத்தையும் பிறவற்றையும் விவாக காலத்தில செய்து எல்லாக் காரியங்களுக்கும் ஸ்திரீக்குப் புருஷனை ஆசாரியனாக நியமிக்கும் தற்போதைய விதிக்கு வேதத்தில் சிறிதும் ஆதாரமே யில்லை. ஆகவே பூர்வ காலத்திய ஸ்திரீ சுதந்திரம் ஏற்பட்டு, பிரமசாரிகள் போல ஸ்திரீப் பிரமசாரிணித்துவம ஏற்படுகிற வரையில், ஸ்திரீகளின் பால்ய விவாகத்தைத் தடுக்க இடமேற்படாது.

உபநயத்தின் பொருள்—உபநயனம் என்ற ஸம்ஸ்கிருத பதம், ஒரு மாணவனுக்குப் பூணூலைத் தரிப்பது என்ற பொருளைக் கொடுக்காது. உபநயனம என்பது, அ வயதுக்கு உட்பட்ட மாணவனைக் கல்வி கற்க வேண்டி. அவனை ஆசிரியனருகிற் கொண்டு சேர்ப்பதாகும். பூர்விகத்திய மாணவன் கல்வி கற்கத் தொடங்கு

முன் சிற்சில ஸம்ஸ்காராதிகளை ஆசாரிய முகமாய்ப் பெறவேண்டி உபநயன கர்மாவை முன்னோர்கள் ஏற்படுத்திருக்கிறார்கள். இவ் வுபநயன கர்மாவை, இக் காலத்தில் செய்யும் வழக்கம் போன்று ஊரை ஒன்று கூட்டிப் பணச் செலவுடனும் விசேஷ ஆரவாரத் துடனும் செய்து கடன்பட்டவர்களில்லை. உபநயனம் செய்வித்தல் என்றால், மாணவனின் பெற்றோன், தன்னுடைய குமாரனை அழைத்துக்கொண்டு குருகுல ஆசிரியனை சமீபிப்பதாம்! ஆசாரி யன் சமீபம் சென்ற மாணவன் உலர்ந்த ஸமிதை அல்லது விறகை மரியாதையாக அவர் கையிலிடுகிறான். ஆசாரியன் அந்த ஸமிதையை ஆதரத்துடன் பெற்று, தன் முன்னே ஜ்வலிக்கும் அக்கினி மீது மந்திர உச்சாரணத்துடன் வைக்கிறான். இந்தக் கிரியை முடிந்து, ஆசிரியன் மாணவனுக்கு ஒரு பூணூலை அடையாளமாகத் தரிப் பித்துக் காயத்திரி மஹா மந்திரத்தை உபதேசிக்கிறான். பூணூலை இப்படித் தரிப்பித்து ஆசாரியன் தன்னருகில் சேர்த்து மாணவக் கூட்டத்தில அவனை ஒருவனுக்கிக் கொள்வதையே உபநயனம் என்கிறார்கள். உபநயனம் என்றால அருகில் சேர்ப்பது என்று பொருள் படும். ஆசாரியனருகில் மாணவனாகச் சேர்ந்து அங்கீ கரிக்கப்படுதே உபநயனம் என்ற பதத்தின் அர்த்தமாகும். வாலிப சாரணர் கூட்டத்தில் சேர்க்கச் சில வாக்குமூலங்கள் வாங்கியபின் அக் கூட்டத்தில் சேர்ந்தவனாகப் பிறர் நினைக்க சிவப்புநிறத துணியினடையாளத்தைத் தரிப்பிப்பது போன்றதொரு அடை யாளமே, பிரமசரிய மாணவனுதற்குப் பூணூலை அடையாள மாகத் தரிப்பித்தது என்று கொள்ளினும் தவறாகாது.

பூர்வ காலத்தில ஸ்திரீ புருஷர்களுக்கு ஒருசேர பிரமசரிதம், கிருகஸ்தம், வானபிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு ஆசிரமங் களையும அனுஸரிப்பதற்கு அனுகுணமாகச் சகல வித்தைகளையும் ஆசாரியர்கள் குருகுலத்தில் இவர்களுக்குக் கற்பித்துவந்தார்கள்; பிரமசரியம் தவிர பின் மூன்றுள்ள ஆசிரமங்களில் முயன்று சித்தி பெறுவதற்குப் பிரமசரிய ஆசிரமமே அக்காலத்தில் அடிப் படையான ஆசிரமமாயிருந்தது. மூன்று பிற ஆசிரமங்களுக்குத் தேவையான சகல விஷயங்களையும் பூர்வ காலத்து மாணவர்கள் பிரமசரிய ஆசிரமத்திலேயே பழக்கம் பெற்று வந்தார்கள். பிற ருக்கு உபகாரம் செய்வதற்கும், ஊரில் துர்ப்பிக்ஷம் வந்தால் நீக்குவதற்கும், நோயாளிகளுக்குப் பரிகாரம் செய்வதற்கும், மூன் ஆலோசனையுடன் மந்திரிகள் போல காரியங்கள் செய்யப் பழகு வதற்கும் அடிப்படை ஆசிரமமாயிருந்தது பூர்வ காலத்துப் பிரம சரிய ஆசிரமமேயாகும். ஆனதால் தான் சிறந்த குருகுலவாஸத் தில் பூர்ணகாலமிருந்து பயின்று கிரகஸ்தம் முதலிய ஆசிரமம்


(320 - ம் பக்கம் பார்க்க)

# ஸயாம் நாடு

## வெள்ளையானைப் பிரதேசம்

(228-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பண்டிதர் ஸ்ரீ. வி. சுப்பிரமணிய ஐயர், திருவண்ணாமலை.



ஞ்ஞாபுக்கு 1913-ம் வருஷத்தில் விஜயஞ் செய்த வித்பா என்ற பெயரையுடைய இளவரசரின் தயவினாலும், இந்நாட்டிலுள்ள பிரிட்டிஷ் கான்ஸல் ஜெனரலின் உதவியினாலும், ஸயாம் தேசத்துப் பொன் நாணய மாற்று விகிதத்தை நான் நன்கறிந்து கொண்டேன். இளவரசராகிய வித்பா மன்னரின் கீழுள்ள உத்தியோகஸ்தரின் உதவியினால், பாங்காக்கு பட்டணத்திலுள்ள பிரதானமான கோயில்களெல்லாவற்றிற்கும் சென்று பார்த்து வந்தேன். பாங்காக்கு பட்டணத்தின் ஐந்தில் ஒரு பாகத்தில் கோயில்களும், அவற்றைச் சேர்ந்த பௌத்த வித்தியா மடாலயங்களும் நிறைந்திருக்கின்றன. வர்ணமிட்ட சிறு களிமண்ணோடுகள் மாற்றி, கூரையின் சரிவுகளில் கண்ணாடி மணிகள் தொங்குவது மிகவும் அழகிய காட்சியைத் தருகின்றது. கோயில்களின் வாயிற்படிக் கதவுகளின் உட்புறங்களில் நலமி வெள்ளி வேலைப்பாடுகளும் தந்த வேலைப்பாடுகளும் நிறைந்து, இராமாயண கதைகளைப் பற்றிய சித்திரங்கள் விசித்திரமாய்ச் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன. சக்கிரி அரண்மனையின் உட்புறத்தில் நவரத்தின கசிதமான புத்த விக்கிரகத்தின் அழகிய ஆலயத்தை நாங்கள் பார்த்தோம். இம்மாதிரியான விக்கிரகம் பூமண்டலத்திலேயே இஃதொன்றே தான் என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரியான ஸயாமியர்களுடைய கோயில்களை, ஸயாமியர்கள் தங்கள் உயிராகப் பெரிதும் மதித்துப் போற்றிவருகிறார்கள். ஸயாமியர்களில் இராஜா முதல் கீழ்க்குடியானவன் வரையில் ஒவ்வொருவரும், தம் வாழ்நாட்களில் ஒரு பாகத்தில், சந்நியாசியாக மாறி இக்கோயில்களைச் சேர்ந்த மடாலயங்களில் வசிக்க வேண்டியவர்களாக விருக்கிறார்கள். இம் மடாலயங்கள் பல வேளைகளில் வித்தியா பீடங்களாக விருக்கின்றன. ஸயாமியக் குழந்தைகள் இவ்விடங்களிலேயே தம்முடைய ஆரம்பக் கல்வியை அப்பியாசம் செய்கிறார்கள். விசேஷப்பயிற்சி பெற்றவர்கள், சில மடாலயங்களில் பாலி பாஷையை அப்பியசிக்கப்

பெறுகிறார்கள். பாங்காக்கு பட்டணத்தில் சுதீசுதணலயம் என்ற ஒரு கோயி லுள்ளது. இதனைப் பிராமணர்களின் ஆலய மென்றும் சொல்லுகிறார்கள். இக்கோயிலில் விஷ்ணு கணேசர் போன்ற இந்தியத் தெய்வங்களின் விக்கிரகங்கள் எண்ணிறந்த உள்ளன. அவர்கள் இப்போது பௌத்த மதத்தினராயிருந்த போதிலும், இக் கோயிலிலுள்ள குருக்கண்மார்கள் பிராமணர்கள் என்றே அழைக்கப் பெறுகின்றனர்.



கம்போடியர் அனமீயர் ஷான்

ஸ்ரீ சோகன் ராஜ வேதி—மஹா வித்துவானெனப்படும் பௌத்த சந்நியாசியாகிய சோகன் ராஜ வேதி யென்பவரிடம் நான் சிறிது காலம் பேசும் பாக்கியத்தையும் பெற்றேன். அவர் வசிக்கும் மடாலயம் மிகவும் ருசிகரமாயும், சுசிகரமாயும் அழகாயு மமைந்திருந்தது. இம் மடாலயத்தில் விசித்திரமான பல புத்த விக்கிரகங்கள் காணப்பட்டன. ஸ்வர்ண பூமி என்று அழைக்கப் பெறும் ஸயாம் தேசத்தில், அசோகன் காலத்தில், இந்தியாவிலிருந்து சோனகதீரர், உத்தர தீரர் என்ற இரு சந்நியாசிகள் வந்து, ஸயாம் தேசத்தினரைப் பௌத்தர்களாக்கினர் என்று, அம் மஹா வித்துவான் என்னிடம் சொன்னார். அசோக மன்னன் காலத்திலிருந்த மௌகலி புத்தரின் சிஷ்யர்களே மேற் கூறிய சோன கதீரரும் உத்தர தீரர்களுமாவர், இந்தியாவுடன் ஸயாம் தேசத்தினருக்கு மௌரிய ராஜவம்சத்தவர்கள் காலத்துக்கு முன்னமே முதற் கொண்டே சம்பந்த மிருந்ததாக, மேற் கூறிய வித்துவான் என்னிடம் கூறினார். ஸயாமியர்கள் தேகத்தின் நரம்புகளில் இந்திய இரத்தமும் சீனரத்தமும் கலந்திருக்கிறதென்று இப்புத்த மதக் குருக்கள் என்னிடம் கூறினார். ஸயாம் தேசத்தில் ஹினா

யம புத்தமதம் பரவியிருக்கிறது. மஹாயன புத்தமத மென்றாலும் பிராமணமத மென்றாலு மொன்றுதான் என்று மேற் கூறிய புத்த மதக் குருக்கள் கூறினார். நான் மேற் கூறிய விஷயங்களைப் பேசி, பின் அவரிடமிருந்து விடைபெறறுக் கொண்டேன்

சூளாலங்காரன் ஸர்வ கலா சாலை—அரசன் பெயர் வைத்துச் சூளாலங்காரன் ஸர்வ கலா சாலை யொன்று சமீபத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இச் சர்வ கலா சாலைப் புரொபஸர்களும் பிரசங்கி களும் ஸயாமிய கனவான்களே யாவார். ஆயினும் இவர்கள் ஐரோப்பாவிலேயே வித்தைப் பயிற்சி பெற்றவர்கள். அமெரிக்கா விலும் கல்வி பயின்ற இவர்கள், வித்தியார்த்திகளுக்கு ஸயாமிய பாஷையிலேயே கல்வி போதிக்கிறார்கள். காண்டாபரி ஸர்வகலா சாலையில் பி. ஏ. பட்டம் பெற்ற ஸாக்கால் என்ற இளவரசர், ஸர்வ கலா-சாலையின் அமைப்பின் முக்கிய பாகத்தில் சிறநத செல்வாக் குடையவராய், ஸர்வகலாசாலை மாணவர்களுக்கு தாத்காலிக மாய் பொது ஜன வரவு செலவு சாஸ்திர வித்தையைப் பயிற்றி வருகிறார். ஸயாமிய பாஷையில் பொது ஜன கணித சாஸ்திரத் தைப் பற்றிப் பிரசங்கம் செய்வதில தமக்கு யாதொரு சிரமும் ஏற் பட்ட இலலை யென்று அவர் என்னிடம் கூறினார். ஸயாம் பாஷை யில் வியாபார முறைகளைக் குறிக்கும்,தொழில் முறைப் பதங்களெல் லாம் சீன பாஷையிலிருந்து எடுத்தாளப் படுகின்றன. பாஷாந்திர மான வார்த்தைக ளெலலாம் ஸம்ஸ்கிருதத்தி லிருந்தோ பாலி பாஷையிலிருந்தோ எடுத்துக் கையாளப் படுகின்றன. இதன்பிறகு என்னிடம் தேசத்தின் வரவு செலவு சம்பந்தமான விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாய்ப் பேசிக் கொண்டிருந்தார். தறகாலத்திற் கேற்ற முறையில தேசத்தின் அபிவிருத்திகளைச் செய்ய விசேஷ வருமானம் வேண்டியிருக்கிற தென்று அவர் கூறினா. ஆனாலும் தேசத்தின் கிலவரிப பளுவைக் குறைக்கும் நோக்கமும் இரா ஜாங்கப் பிரசனைகளில ஒன்றாயிருநது வருவதாகவும், அவர் கூறி னார். ஸயாம போன்ற கீழ் நாட்டுப் பிரதேசங்களில வருமானவரித் திட்டம் அனுபவத்திற்கு ஒத்ததா யில்லை. வடபாகத்து ரெயில்வே பாதையில, தேசத்திற்குச் சிறிது இலாபம் கிடைக்கும் என்று இளவரசர் கூறினார்.

புஸ்தக சாலை—கீமார் ஏகாதி பத்தியம்—பாங்காக்கிலுள்ள வஜ்ர ஞவ°புத்தகசாலை இராஜாங்கத்தின் சிறந்த புத்தகசாலை; பார்க்கத் தக்கது. தென்னிந்தியாவின் பழைய கிரந்தலிபியி லியன்ற ஏட்டுப் பிரதிகள் இபபுத்தகசாலையில் ஏராளமாய் வைத்துக் காப்பாற்றப் பட்டிருக்கின்றன; இவைக ளெல்லாம் ஸயாம் தேசத்தின் வடபிர தேசத்திலிருநது தருவித்து வைக்கப்பட் டிருக்கின்றன. பிரெஞ்சு மஹாவித்துவான் புரொபஸர் காக்டெஸ் என்பவர் இப்புத்தக

சாலையின் தலைவராய் விளங்குகிறார். பூர்வீக காலத்துக் கிமார் ஏகாதிபத்தியத்தார் தகவல்களைப்பற்றி இம்மஹா வித்வான் வெகுகாலமாய் ஆராய்ச்சி செய்துவண்ணமா யிருக்கிறார். பூர்வ காலத்தில் கிமார் ஏகாதிபத்தியத்தார்தாம், இந்து சீனா தீபகல்பம், மலேயா தீபகல்பம் முழுவதும், ஹிந்து நாகரிகத்தைக் கொண்டு வந்து பரப்பினார் என்று, சரித்திரத்திலிருந்து அறிகிறோம். தென்கீழ் இந்தியாவிலிருந்து இந்து சீன தீப கல்பத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் குடியேறினவர்களால், கிமார் ஏகாதிபத்தியம் ஸ்தாபிக்கப் பட்டதாகு மென்றும், மேற்கூறிய பிரெஞ்சு புரொபஸர் என்னிடம் கூறினார். இந்து சீனா தீப கல்பத்தின் மத்திய பாகத்தில் இப்படித் தென்கீழ் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் பல்லவ ராஜ வம்சத்தவர்களாக இருக்கவேண்டு மென்று, அங்கு காணப்படுகிற பல்லவ பழைய சம்பிரதாய வழக்கங்களிலிருந்தும்



பேயாடிகள் பொய்முகம்

அறியக் கூடியதாயிருக்கிறது. அங்கே காணப்பெறும் கல்வெட்டுக்க ளெல்லாம் பூர்வகாலத்துத் தென்னிந்தியக் கிரந்தலிபிக ளாகவே யிருக்கின்றன. இச் சிறந்த வலிமையுள்ள பிராமண ஏகாதிபத்தியம் அங்கு ஆயிரம் வருஷங்கள் நிலைத்திருந்து அடிக்கடி சீனர்களின் இடைவிடாத எதிர்ப்பினாலும் படைப்பினாலும் இராஜாங்கம் சீர் குலைந்து போனதாகத் தெரிகிறது. பூர்வத்தில் இங்கு அரசு செலுத்தின கிமார்கள் சிறந்த கட்டடங்கள் கட்டுவதில் வல்ல சிற்ப சாஸ்திரவல்லுனர் என்றும் தெரிகிறது. கம்போடி

யாப் பிரதேசத்தி லுள்ள ஆங்கோர் விஷ்ணு ஆலயம், உலகத்தி லுள்ள பெருத்ததோர் கோயிலாகும். இந்தியாவின் மற்றொருசிறந்த பெரிய சரித்திரம் இன்னும் எழுத வேண்டியிருக்கிற தென்று, புரொபஸர் காக்டெஸ் என்னிடம் கூறினார். எல்லாராலும் மறந்து விடப்பட்ட கிமார் ஏகாதிபத்திய சரித்திரம் அதாகும். பிரெஞ்சு வித்தியார்த்திகள் இந்த இராஜாங்க சரித்திரத்தை எழுதத் தொடங்கி யிருக்கின்றனர். வித்தியார்த்திகளும், பிரெஞ்சு இந்திய வித்தியார்த்திகளோடு ஒத்துழைத்து இதனைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஸயாம் இராஜாங்கம், கிமார் இராஜாங்கம் சிர்குலைந்ததி லிருந்தும் ஆக்கப்பட்ட தேவர் இராஜாங்க மாகும என்று, புரொபஸர் காக்டெஸ் என்னிடம் கூறினார். பூர்வகாலத்துக் கிமார் அரசாங்கத் தாரிடமிருந்தே தமது சம்பிரதாயங்கள் ஆசாரங்கள் நடவடிக்கைகள் வித்தை முதலாக, தற்காலத்தில் ஸயாமியர் ஆசரித்து வருகிறார்கள் என்னலாம். இந்தியாவில் சமீப காலத்தில் தேச சஞ்சாரம் செய்து விஷய ஆராய்ச்சி செய்து வருகிற ஸ்ரீ கார்ப்பிலிஸ் என்ற மாதினை இப்புஸ்தக சாலையில் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். இவ்வம்மை நம் கவிவாணர் இரவீந்திர நாத தாகூரினை சிறப்பாகப் போற்றிக் கொண்டாடுபவருள் ஒருவராவர்.

இந்திய ஸயாமிய கல்வி முறைகள்—இந்தியக் கல்விப் பயிற்சிக்கும் ஸயாமியக் கல்விப் பயிற்சிக்கும விசேஷ ஒற்றுமைகளிருப்பதை எவரும் எளிதில் அறியலாம். ஸயாமிய அக்ஷரங்க ளெல்லாம இந்தியர்களின் அட்சரங்களே பாகும் என்பது கவனிக்கத் தக்கது. இந்திய நீதிகளும், பழமொழிகளும் அடிக்கடி ஸயாமிய புஸ்தகங்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக, வித்யா இளவரசர், சிறந்த கவி வாணராய் விளங்குபவர், நள தமயந்தி சரித்திரத்தை ஸயாமியக் கவிகளில் புனைந்து,பொதுஜனங்கள் கொண்டாடுமாறு எழுதியிருப்பதே இதற்குக் காரணமாகும. இராஜாங்கத்தி லுள்ள நாமதேயங்க ளெல்லாம் இந்தியப் பெயர்களாகவே யிருக்கின்றன. அரசனது நாமதேயம் மஹா வஜ்ராயுத ஆறுவது இராமன் என்றும்; இராணியின் பெயர், இந்திர சக்தி ஸசி என்றும், பெயர்கள் முறையே பூண்டிருக்கிறார்கள். ஸயாமிய ஜில்லாக்க ளெல்லாம்,ஸௌராஷ்டிரம், மஹாராஷ்டிரம் விஷ்ணு லோகம் முதலிய பல பெயர்களைக் கொண்டு விளங்கின்றன. இருந்தாலும், இந்நாமங்களை ஸயாமியர்கள் தமக்கேற்றவாறு ஒருவிதமாய் உச்சாரணம் செய்து கொள்ளுகிறார்கள். ஹிந்து எவர் போனாலும், ஸயாமியர் வீட்டில் வித்தியாசமில்லாமல் சேர்ந்து பழகிச் சுயமா யிருக்கிறார்கள் நானும் இந்துக்களின் பாஷை நடையுடை பாவனைகளைப் பற்றியு , அவற்றின் ஒற்றுமை நயங்

களையுமாற்றி இந்திய ஸயாமியர் கனவான்கள் நிறைந்த சபையென்றிலும், பின்னும் பாங்காக்கு நகரின் மஹா விஷ்ணு கோயிலிலும் பிரசங்கமொன்று செய்து, அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன்.

அரசமுறை—ஸயாமில அரசர் யதேச்சாதிகாரம் செலுத்துபவராயிருக்கிறார். அரசர்க்கு ஆலோசனை சொல்ல ஸேனுபதி என்ற சிறந்த சபையுண்டு. அந்தச் சபையில் உள்நாட்டு மந்திரிகளில் தலைவர், வியாபார மந்திரி, யுத்தமந்திரி முதலியவர்கள் அங்கத்திவர்களாவார்கள். முன்னரசர் மாட்சிமை தங்கிய சூளாலங்கார அரசனும், தற்போதைய ஆருவது இராமராஜனும் நவநாகரிகத்தில் சிறந்து விளங்கும் ஸயாம் தேசத்தை முன்னுக்குக் கொண்டு வந்தவர்களென்று சொல்லவேண்டும். சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஸயாம் தேசம் முற்போக்கடைந்து, இந்த நவீன நிலைமைக்கு முன்னேறிய விதம் மிகவும் ஆச்சரியகரமானது.



ஸயாமியர் சாப்பிடுதல்

ஆரம்பக் கல்வி முறை—ஸயாம் தேசத்தில் சமீபத்தில் தான் கட்டாய ஆரம்பக் கல்விமுறை அனுஷ்டானத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இத்தேசத்திலுள்ள எண்ணிறந்த பௌத்த மடாலயங்களின் உதவியினால் கட்டாயமான ஆரம்பப் படிப்பை

ஸயாமில் புகுத்த வெகு சுலபமாயிற்றென்ன வேண்டும். இப்போது தான் இது அனுஷ்டானத்தில் கொண்டு வந்திருக்கிறபடி



ஸயாம் அரசர்

யால், இதன் முடிவுகளையும் பலன்களையும் பற்றித் துணிந்து உடனே ஒன்றும் சொல்லிவிட முடியாது.

படைப்பயிற்சி— ஸயாமிய தேச சேனைகள், தற்காலத்திய ஐரோப்பிய முறையைப் பின்பற்றிப் பயிற்சி செய்விக்கப் பெறுகின்றன. படைப் பயிற்சி விஷயத்தில் அரசர் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார். ஸயாமில் படைப் பயிற்சியைச் செய்விக்க, காட்டுப் புலிப்படையைச் சேர்த்ததே, தற்காலத்திய அரசர், சிம்மாசன மேறினபோது முதலில் செய்த முதல் காரியமாகும். சென்ற பத்து வருஷங்களாக, கட்டாயப்படைச் சேவகம் இராஜாங்கத்தில் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஸயாமியர்களில் 21 வயது வந்த தேகக் கட்டுள்ள ஒவ்வொரு ஸயாமியச் சிறுவனும், இரண்டு வருஷம் படைப் பயிற்சியைக் கட்டாயம் பெற வேண்டும். பின்னால் அவன் ரிஸர்வ்படையில் சேர்க்கப்பெறுகிறான். படைப்பயிற்சியில் தவிர, ஸயாமியர்கள் அடங்கி நடத்தல், தேசாபிமானம், தன்னல மறுப்பு, நியாயம், பிறரிடத்தில் பழகு முறை முதலிய சிறந்த முறைகளில் பயிற்றப்பட்டு, தேசிய முறையில் தேர்ச்சி யடைகிறான்.

ஆகாய விமானப் பயிற்சி— ஸயாமியர்கள் ஆகாய விமானப் பயிற்சியில் மிகவும் சிறந்து விளங்குகிறார்கள். இத்தேசத்தினைப் போல, ஆகாய விமானப் பயிற்சியில் சிறந்தவர் பூமண்டலத்தி லில்லையென்பது ஸயாமிய சரித்திரம் விளக்கும். ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த நாள் முதலாக, ஸயாம தேசத்தில், உள்நாட்டு ஆகாயவிமானப் பயிற்சியும், சேனா சமூக ஆகாய விமானப் பயிற்சியும் ஆரம்பமாகி, இவ்விஷயத்தில் இத்தேசத்தவர் கியாதி யடைந்துவிட்டார்கள். ஸயாம் தேசத்தின் கீழ்நாட்டுப் பிரதேசத்தில், 1920-ஆம் வருஷ முதல், ஆகாய விமான மூலமாய்த் தபால்களைக் கொண்டுபோகும் வழக்கம் ஆரம்பமாயது. 1931-ம் வருஷத்தில் ஸயாம தேசத்தில பெருவாரி நோய்கள் உண்டானபோது, டாக்டர்களையும், மருந்து சாமான்களையும் நோயுற்ற இடங்களுக்கு ஆகாய விமான மூலமாய்க் கொண்டு போனார்கள். ஆகாய விமானங்கள் உள்நாட்டுச் சாமான்களால் கட்டப்படுகிற தன்மையிலிருந்து, ஸயாம் தேசம் ஆகாய விமானப் பயிற்சியில் எவ்வளவு சிறந்து விளங்குகின்றதென்பது தெளிவாகிறது. ஆகாயவிமானப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள், ஸயாமிலேயே எண்ணிறந்தன ஏற்பட்டிருக்கின்றன. இவற்றிலே பயின்றவர்களே, ஸயாம் தேசத்தில் கட்டப்பட்ட ஆகாயவிமானங்களிலே ஏறிச்செலுத்துவதிலிருந்தும், இத்தேசத்தியார் ஆகாயத்தை வென்றுள்ள விதமும் தெளிவாகிறது. இப்படி இத்தேசப் பிரயாணத்தை முடித்து, நான் பினாங்கு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தேன்.

# கைவல்லியாசிரமம்

## பிராணாயாம முறை

ஸ்ரீ. R. அனந்த கிருஷ்ண சாஸ்திரி,
சாந்திநிகேதனம்



ஆரியர்களின் முதல் சட்டம் சரீரத்தை விருத்தி செய்து, வெகு பலத்துடன் கூடியிருப்பதே. சரீரத்திற்கு வியாதி முதலானவைகள் வந்தால், இந்திரிய பலங்கிடையாது; அதில்லாவிட்டால், மனோபல மில்லை; மனோபல மில்லாவிட்டால், ஆத்ம பல மிருக்கமாட்டாது; ஆத்ம பல மில்லாதவர்களை, ஆரியர்கள் தங்கள் கூட்டத்திலிருந்து விலக்கிவிடுகிறதுவழக்கம். அப்படி விலக்கப்பட்டவர்களுக்கு அனாரியர்களென்று பெயர். ஆகையால், சரீர பலத்தைச் சரிபாக விருத்தி செய்து, மரண பரியந்தம் அசக்தி யுண்டாகாமலிருக்க, நம்முன்னோர்கள் நல்ல நடத்தையையும், ஸாத்விக ஆகாரத்தையும், பிராணாயாமத்தையும் அனுஷ்டித்து வந்தார்கள். ஆகையால் நம்பூர்விகர்கள் தீர்க்காயுஸ் உள்ளவர்களாயும், வியாதியற்றவர்களாயும், ஞானிகர்களாயு மிருந்தார்கள். காலக்கிரமத்தில் இந்த அனுஷ்டானங்கள் தவறிச் சரீர பலங்குறைய, மற்றப்பலங்களும் குறைந்து விட்டன. இப்பொழுது, நம் பாரதகண்டத்திலிருக்கிறவர்களைப் போல் சரீர பலமற்றவர்கள் மற்றத் தேசங்களில் காணமுடியாது. இவ்விதமான மாதா பிதாக்களிடமிருந்து உண்டாகிற குழந்தைகளும், பிறந்து கண்ணால் பார்க்கிற சக்தி வந்தவுடன், கண்ணுக்குக் கண்ணாடி போடும்படி நேரிடுகிறது; நம் ஆரியர்களுடைய கண் பார்வை வெகு பலமா யிருந்தபடியினால், கண் கண்ணாடியை உபயோகப்படுத்த வில்லை; ஸம்ஸ்கிருதத்தில் கண் கண்ணாடிக்குப் பெயர்கிடையாது. இவ்விதம் பலமற்றவர்களுக்குக் குழந்தைகள்பிறக்கும்பொழுது, அவர்களைக் காட்டிலும் இன்னும் பலக் குறைவான குழந்தைகள் பிறக்கிறார்கள். இவ்விதமாக நடந்து வந்தால், இன்னும் சில காலத்துக்குள் வரப்போகிற ஜனங்கள் மனுஷியத் தன்மையில்லாமல், ஆடுகள் மாதிரி குறுகி, அல்ப வாழ்வும் வியாதிகளுடன் கூடியும், துக்கமும் உடையவர்களாவார்கள். இதை நிவர்த்தி

செய்ய, நாம் முயற்சி செய்ய வேண்டியது ஆவசியம். நாம் ஸ்வ ராஜ்யம் அடையுமுன், சரீர ஸ்வராஜ்யத்தை அடைவது அவசிய மென்று, நம்மவர்களில் சில அபிமானிகள், அநேக இடங்களில் சரீரத்தை விருத்தி செய்ய, சில ஆசிரமங்களை ஸ்தாபித்திருக்கிறார் கள். அவற்றில் மேல் கூறியிருக்கிற கைவல்லிய ஆசிரமமானது, ஒரு முக்கியமான பள்ளிக்கூடம். இது, புனாவிலிருந்து பம்பாய்க்குப் போகும் வழியில் மலையுச்சியில் சுமார் 3000 அடிக்குமேல், லோனு வாலா என்கிற இடத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இது புரா தன சரித்திரப் பெயர் பெற்றது. இதற்குச் சமீபத்தில் எட்டாவது நூற்றாண்டில் செய்யப்பட்ட வெகு ஆச்சரியத்தை யுண்டு பண்ணு கிற புத்தக் குகைகளிருக்கின்றன. இப்பொழுது சித்திரத்தில் பெயர் பெற்ற ரவிவர்மா படம் அச்சடிக்கிற ஸ்தலமும், இதற்குச் சமீபத்தி லேயே யிருக்கிறது. இந்த ஆசிரமம் தேசாபிமானி தாதா என்கிற வரானவர். வித்யு சக்தி (Electricity) உண்டாக்கக் கட்டியிருக்கிற பெரிய ஏரிக்கரைச் சமீபம். இந்த ஆசிரமத்தை நடத்தி வருகிறவர் ஒரு பெரிய யோகி. இங்கிலீஷ் சாஸ்திரங்களிலும் பெயர்பெற்றவர். இந்த மகானுடைய முக்கிய கோரிக்கையாவது, தத்வ சாஸ்திரப் பிரகாரம் எக்ஸ்ரே (X Ray) வைத்து பிராணாயாமம் முதலா னதுகள் செய்து வருகிறவர்களுடைய சரீரத்திலிருக்கிற கருவி களின் அபிவிருத்தியைப் படமெடுத்து, அவர்களுடைய விருத்தி யைப் பிறர்களுக்குப் பத்திர மூலமாகக் காண்பிப்பது ஒன்று; இரண்டாவது, பிறகு இவ்விதமாக அநுஷ்டித்து வருகிறவர்களை, தேசந் தேசமாக அனுப்பி, பள்ளிக்கூடங்களில் படிக்கிற சிறு பை யன்களுக்குப் பிராணாயாமம் கற்றுக் கொடுத்து, சரீர பல முண் டாக்குதல்; மூன்றாவது, இப்பொழுது புத்தி வேலை செய்து ஜீவித்து வருகிறவர்களில் அநேகர், அஜீர்ணத்தினால் சாப்பாடு ஜரியாமல், மலச்சிக்கலினால் கஷ்டப்படுகிறதை நிவிருத்தி செய்தல். இவரின் அநுஷ்டானம், நம் பூர்விக சாஸ்திரத்தையே சார்ந்திருக் கிறது.

அனுஷ்டானத்தின முறை—நம் தர்ம சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஒவ்வொரு கிரியைசெய்யுமுன், பிராணாயாமம் செய்யச் சொல்லியிருக்கிறது; இதில்லாமல், ஒரு கிருத்தியமும் ஆரம்பிக்க முடியாது. ஆகையால் பிராணாயாமஞ் செய்ய வேண் டியது ஆவசியம். அந்த அப்பியாச மிராவிட்டால், சரீரம் பலமாக விராது. பிராணாயாமம அப்பியாசஞ் செய்பவர்கள் யாவரும், கால மே எழுந்திருந்தவுடன், கைகால் முதலானவற்றைச் சுத்தி செய்து கொண்டபின், (ஸ்நானஞ் செய்கிறது அவரவர்களுடைய இஷ்டம்) தங்கள் வீட்டில் நல்ல காற்று ஓடுகிற இடத்தில, கிழக்கு அல்லது வடக்கு முகமாக ஒரு சுத்தமான இடத்தில் சவுக்கத்தை விரித்து

உட்காரவேண்டியது. பலகை, மான்தோல் முதலானவை பிறர் உபயோகப்படுத்தாமலிருக்கிறது கிடைத்தால், அவைகளையும் உபயோகப்படுத்தலாம. பிறகு, இரண்டு கால்களையும ஒன்றின் மேல் ஒன்றாகப் போடவேண்டியது; இதை பத்மாசனம் என்று சிலர் கூறுவதுண்டு. இப்படி உட்கார்ந்தால், முதுகுவளையாமல் நேரே சரீரம் கம்பு மாதிரி நிற்கும். (வயிறு பெருத்திருக்கிறவர்க்கு, பத்மாசனம் போட முடியாது. இதை அப்பியாசஞ் செய்தால், கிரமமாக வயிற்றின்பருமன் குறைந்து போகும். வயிறு பெருத்தல்(obesity) சகல வியாதிகளுக்கும் காரணம் என்று தெரிந்த விஷயமே.) பிறகு, சுவாஸத்தை மூக்கு மூலமாக மெள்ள உள்ளே இழுக்க வேண்டியது. முழுதும் இழுத்தவுடன், அப்படியே மெள்ள வெளியே விடவேண்டியது. மூக்கின் இரண்டு துவாரங்களில், வலத்திலிருந்து காற்றை உள்ளே யிழுத்து இடத்தின் வழிவெளிவிட்டும்; மாறியும்; அல்லது இரண்டு துவாரம் வழியாகவும் உள் இழுக்கிறதும் வெளி விடுகிறதும், செய்யலாம். கைவிரலை உபயோகப்படுத்தக்கூடாது? இப்படி ஐந்து நிமிஷம மெள்ள மெள்ளக் காற்றை முழுதும் உள்ளே யிழுத்து, முழுதும் வெளியே விடவேண்டியது. இது, முதல் அப்பியாசம். இரண்டாவது: இப்படி வழக்கமானபின் உள்ளே யிழுத்த காற்றைக் கொஞ்சநேரம் வயிற்றில் நிறுத்தவேண்டியது. கஷ்டப்படாமல் வழக்கப்படுத்தினால், உடனே பிராணவாயு உள் அடங்கும். இதற்குக் கும்பகம் என்று பெயர். உள்ளே போகிற காற்று ஆக்ஸிஜன், (oxygen), தத்வ சாஸ்திரிகள் சொல்லுகிற பிரகாரம், உள்ளே போய், எல்லா நரமபு ஸ்தானங்களையும் புஷ்டிபிக்கிறது. இது பிரத்தியக்ஷம். கும்பகம சம்பந்தமான பிராணாயாமம் ஐந்து நிமிஷம்வரை செய்யலாம். இவ்விதம் காலமேயும் சாயங்காலத்திலும் வெறும்வயிற்றில் பத்து தினங்கள் செய்தால்,உடனே சரீரத்திற்கு ஒருவிதமான கலகலப்பு உண்டாகும; இதை யாரும் பார்க்கலாம். மூன்றாவது—பிறகு, பஸ்ரு (Bhusra) வென்கிற துருத்தி மாதிரி அப்பியாசஞ் செய்யவும். இது ஐந்து முதல் பத்து நிமிஷம் வரை. அதாவது, வயிற்றைத் துருத்தி மாதிரி உள்ளே அமுக்கவும்; இதின் பலன் உடனே தெரியும. அதாவது, சிறு குடலில் (Smaller intestines) வாயு வேலை செய்கிறதினால், அதைச் சுத்திசெய்து, உள்ளே போகிற நலல ஆகாரத்தை ஜீரணமாக்கி, பெரிய குடலுக்கு அனுப்பி விடுகிறது. அப்பால், மனிதனுக்கு என்ன ஆகவேண்டியிருக்கிறது? ரத்த சுத்தி நன்றாகி, மலசுத்தியும் சரியாகி, சரீரம் முழுதும் பலமாகும். நல்ல ரத்த மில்லாததினால், கோபம், தாபம், வியாதி முதலானவை உண்டாகின்றன; வயதும் குறைகிறது. இந்த மேற்சொன்ன மூன்று விதத்தையும் அனுஷ்டிக்க, குரு வேண்டிய தில்லை. யாவரும் தம்யுக்திப்படி அப்பியாசஞ்

செய்யலாம். தப்பினாலும் கெடுதல் வராது. பஸ்ரு செய்தால் நன்றாய்ப் பசியுண்டாகும். வேதத்தில் பஸ்ரு செய்கிறவர்கள் வெகு பெரியவர் என்று கூறியிருக்கிறது. இந்த மூனறும், தினசரி காலமே தவறுமல ஒருமாதஞ் செய்தால், சுவாசக் குழல்கள் (Lungs) சுத்தமாகித் தொண்டை நன்றாக ஆகிறது. இந்த அனுஷ்டானம் குழந்தைகள், ஸ்திரீகள், வியாதிக்காரர்களும் செய்யலாம். பஸ்ரு, கர்ப்பமான ஸ்திரீகள் செய்யவேண்டாம். இதற்குமேல், குண்டலினீ என்கிற, ஜீவ சக்தியைக் கிளப்ப, ஒரு அப்பியாசமிருக்கிறது. அதுவும் பிராணாயாமத்தினால் ஆகவேண்டியது. அதற்கு மூலபந்தம், ஜாலந்திரம், ஒட்டியாணம் என்று சுவாஸ பந்தமிருக்கிறது. அது தியானஞ் செய்பவர்களுக்குத் தெரியவேண்டியது,

இந்தப் பிராணாயாமத்தை அப்பியசிக்கிற விபரத்தை இந்தப் பத்திரிகை மூலமாகத் விவரித்த காரணம், யாவரும் அனுஷ்டித்து நல்ல சரீரத்துடன் வாழவேண்டுமென்று ஈஸ்வரனைப்பிரார்த்தித்துக் கொண்டு, எழுதினதாகும் அப்படியே பிராணாயாமஞ் செய்கிறவர்கள், மொத்தம் 15, அல்லது 20 நிமிஷம் உட்காரும்பொழுது, தங்கள் இஷ்டதேவதையைக் குருவாகத் தியானஞ் செய்து, முன்சொன்னமூன்றுவிதப் பிராணாயாமத்தையும் அனுஷ்டித்து வந்தால், ஈசுவர கிருபை கிடைத்து, மரணம் வரை நோயற்ற வாழ்வாக வாழ்ந்து ஆனந்தமடைவார்கள்.

# காணுமற் போன மகன்

ஒரு சிறு கதை

சிவி. ல. சேஷாத்திரி நாதன், சைதாப்பேட்டை.

"காணவில்லை — கண்டு பிடிப்பவர்க்கு இனம்!

எனது மகன் ராமு என்னும் ராமஸ்வாமியை, சென்ற திங்கட்கிழமை முதற்கொண்டு காணவில்லை. வயது பதினாறு; பொன் நிறம்; நெற்றியின் இடது புறத்தில் ஒரு வடு. கண்டு பிடிப்பவர்கோ, இருக்கும் இடத்தைத் தெரியப் படுத்துபவர்கோ, தக்கவாறு இனம் அளிக்கப்படும்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர்,
மிராசுதாரர், மதுரை"

என்று, மூன்று தினங்கள் சென்னை 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பிரசுரமாயிற்று. பிரசுரித்தவர் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயர் என்பவர், மதுரையில் ஒரு செல்வாக்கு மிகுந்த மிராசுதாரர். அவருடைய ஒரே புதல்வன் ராமு, ஒருவாரமாகக் காணப்படவில்லை. ஸாயங்காலம் வைகைக் கரையில் உலாவப் போனவன் திரும்பி வரவில்லை. போன இடம் தெரியவில்லை. தாயாரும் தந்தையும் ஆற்றாத் துயரத்தில் மூழ்கினர்.

ஆனி மாதம். வெயிலின் கொடுமையோ பொறுக்க முடியவில்லை. சென்னையிலிருந்து 'போட்மெயில்' வர, மத்தியானம் ஒரு மணிக்குமேல் ஆகும். அதற்கு மேல் 'தபாலாபீஸி'னின்று அன்றைத் தினத் 'தபால்'களை எடுத்துக்கொண்டு புறப்படுவதற்கு, தபாற் சேவகனுக்கு மூன்று மணியாய்விடும். அவஸரமாய் விஷயம் அறிய விரும்புவோர், வெயிலையும் கவனியாது, தபால் ஸ்தலத்திற்கே வந்து காத்திருந்து, 'லெட்டர்'கள் பெற்றுச் செல்வர். சிலர் வெறுங் கையுடனாவர் திரும்புவர்.

ஒரு குடையுமின்றி, காலுக்குச் செருப்புமின்றி, மார்பு, முகத்தினின்றும் வியர்வை சொட்ட, வெயிலின் பிரகாசத்தினால் கண்கள் கூச, கிருஷ்ணஸ்வாமி ஐயர் வந்து சேர்ந்தார் தபால் ஸ்தலத்தில்; மணி ஒன்றரை இருக்கும். ''சாமீ! உங்களுக்கு ஒரு கடிதம் இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே, மகனை இழந்து அவஸ்தைப் படும் ஐயரிடம், ஒரு 'கவரை' தபாற் சேவகன் நீட்டினான்.

ஒருபுறம் கொஞ்சம் நிழலாய் இருக்கக்கண்டு, அவ்வோரமாய் ஒதுங்கி, அவஸரமாய் அந்தக் 'கவரை' உடைத்து, அதனுள்ளிருக்கும் லிகிதத்தைப் படிக்கலானார் :

''116, விக்டோரியா ஹாஸ்டல்,
திருவல்லிக்கேணி : 16-7-1925.

அன்புள்ள ஐயா,

இரண்டு மூன்று தினங்களாக 'சுதேசமித்ரனில்' வெளியாகும் பிரசுரத்தை நோக்கி மிக்க கவலை கொள்கிறேன். நானும் ராமுவும் சிறு வயது முதல் தோழராயிருப்பது நீர் நன்கு அறிந்த விஷயம். ஆதலின், ராமுவின் மனப்பான்மையை நன்கு அறிவேன். அவன் காணாமற் போனதற்குக் காரணம், அவன் S.S.L.C. பரீக்ஷையில் தேறாமல் இருந்தது அல்ல. கேவலம் பரீக்ஷை தேறாததற்கு ராமு இந்தக் காரியம் செய்யமாட்டான். அவன் காணாமற் போனதற்குக் காரணம், வேறொன்றுளது. நான் இத்துடன் அடக்கம் செய்திருக்கும் ராமுவுடைய கடிதம், அந்தக் காரணத்தை நன்கு விளக்கும். நீரே அவன் துன்பத்திற்குக் காரணம்! எங்கே சென்றானோ எனதருமை ராமு! அவன் பரீக்ஷையில் தேறாத போதே நான் துயரம் அடைந்தேன். எங்கள் நேசத்துக்குப் பிரிவு ஏற்பட்டுவிடுமே

யென்று அஞ்சினேன் பரீக்ஷையில் பிரிவு ஏற்பட்டது தவிர, தேகப் பிரிவுகூட ஏற்பட்டுவிட்டதே! என் செய்வேன், ஜகதீசா! நீயே அவனுக்குத் துணை!

ஐயா, நீர் அவனைக் குறித்து அதிகமாய் வருந்தவேண்டாம். ராமு உங்கள் மீது மிகுந்த பிரீதி கொண்டவன் என்று நான் சொல்லி நீர் அறியவேண்டியது இல்லை. தன் துயரம் நீங்கிய பின்பு, தானே தங்களிடம் திரும்பிவருவான். ஈசன் தங்கள் துயர்களை விரைவில் நீக்குவாராக!

நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள

ஸுப்ரஹமண்யன்."

ஐயர் படித்தார்; துக்கம் மேற்கொண்டார். "ராமு அவன் ஓடிப் போனதற்குக் காரணம்? இது என்ன? ராமுவுடைய கையெழுத்துப் போல் இருக்கிறதே. ஆம். ராமுவுடையதே! என் கண்மணி! என்னை ஏனடா இவ்வாறு துயரத்துக்கு ஆளாக்குகிறாய்? நீ என்ன எழுதுகிறாய் பார்ப்போம்" என்று, கண்ணீர் வடிய, ஸுப்ரஹ்மண்யன் அடக்கம்செய்துள்ள 'லட்டரை'ப் படிக்கலானார்.

"அன்புள்ள மணி!

சென்ற வாரம் நீ பட்டணத்துக்குச் செல்லும்போது, நான் எவ்வளவு துன்பப்பட்டேன் என்பதை நீ அறிவையோ?

நாமிருவரும் சிறு வயஸு முதல் ஆப்த ஸ்நேஹிதர்களாயிருந்தும், உன்னிடமிருந்து ஒரே ஒரு ரஹஸ்யத்தை மாத்திரம் ஒளித்திருக்கின்றேன்.

நான் சிறுவனாயிருக்கும்போது, எனது பக்கத்து வீட்டுப் பெண் லலிதாவுடன் விளையாடி மகிழ்வேன். எனது பெற்றோரும், அவளது பெற்றோரும் இதைக் கண்டு மகிழ்ந்து, நாங்களிருவருமே மணந்துகொள்ள வேண்டுமென்று கேலி செய்து மகிழுவர். இது என் இளமனதில் பதிந்து, வயஸாக ஆக, முழுக் காதலாகி முதிர்ந்தது.

லலிதாவுக்கு வயது பன்னிரண்டாயிற்று. எனக்குப் பதினாறு ஆகிறது. என் தகப்பனாரிடம் வந்து லலிதாவின் பெற்றோர் மணம் பேச யத்தனித்தனர். வரதக்ஷிணை ஐயாயிரத்துக்குக் குறைந்து வாங்கிக் கொள்ள மாட்டேன் என்றார், என் பிதா. லலிதாவின் தகப்பனோ ஏழை என் செய்வார் பாவம்!

மணம் நின்று விட்டது.

வேறு ஒரு ஏழைச் சிறுவனுக்கு லலிதா மணஞ் செய்து வைக்கப் பட்டாள். என் தலைமேல் ஒரு இடி விழுந்தது. என்னுடைமை லலிதாவை வேறொருவனன்றோ கொண்டுபோயினன்! இத் தருவாயில் எனக்குப் பரீக்ஷையும் தவறியது. அந்தோ! இக் கஷ்டம் என்னால் பொறுக்க முடியவில்லை. வெளியூர்களுக்கு ஓடிப்

போனலாவது எனது துரதிர்ஷ்டத்தை மறக்கக்கூடும். எங்கேயாவது ஓடிப்போய்விடுகிறேன்.

மன்னிப்பாயாக! மறப்பாயாக!
உன்னை மறவாத
ராமு''.

படித்தார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். ஆற்றொணுத் துயர் கொண்டார். தன்னையே நொந்து கொண்டார். ''அடே ராமு! உன்னை வீட்டை விட்டுத் துரத்திவிட்டேனே! என் கண்மணி! இனி என்றடா உன் சிரித்த முகத்தைக் காண்பேன்! நீ எங்கேயடா போய் விட்டாய்?'' என்று, கண்ணீர் வடிய, புலம்பிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தார்.

* * * *

ராமு காணமற் போய் நான்கு வருஷங்கள் ஆயின. ராமுவோ திரும்பி வரவில்லை. தன்னருமை மகனுக்குத் தீங்கிழைத்த தன்னை என்று யமன் கொண்டேகுவானே என்று, காலத்தைக் கடத்திக் கொண்டு வந்தார் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

* * * *

ஸுப்ரஹ்மண்யன் 'இண்டர் மீடியட்' பரீக்ஷையில் தேறி, சென்னை வைத்திய கலாசாலையில் மூன்றாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தான். அவன் இருப்பிடத்திற்கு, ஒரு நாள், காவி வஸ்திரம் பூண்டு முகம் சிரைக்கப் படாத ஓர் இருபது வயஸுள்ள வாலிபன் வந்து சேர்ந்தான். 'மணீ!' என்றழைத்தான். அக் குரல் உடனே மணிக்கு ஞாபகம் வந்து விட்டது. 'ராமு!' என்றான். இருவரும் கட்டி அணைந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

அவன் காவி வஸ்திரத்தைக் களைந்துவிட்டு ஸ்நானம் செய்வித்து, வேறு உடை கொடுத்து, சாப்பாடு செய்வித்த பின்பு, மணி ராமுவை விசாரிக்கலானான்.

''நான் உனக்கு எழுதியவாறு நயாசந் தாளாமல், வீட்டை விட்டு ஓடி வந்த பின்பு, 'பவதி பிக்ஷாந் தேஹி' என்பதே என் பிழைப்பாய்விட்டது. கால் நடையாகவே காசி, வங்காளம், காஷ்மீரம் முதலிய தேசங்களெல்லாம் சுற்றிவிட்டு வந்திருக்கிறேன். என்னே பாரத நாட்டின் வளமை! ஹிந்தி பாஷையிலும் பாண்டித்யம் அடைந்திருக்கிறேன். என் தாய் தந்தையரையும் உன்னையும் காண வேண்டுமென்ற அவா மேலிடவே, திரும்பி வந்தேன்.''

* * * *

பெற்றோரும் மைந்தனும் பழமையை மறந்து புதுமையை மகிழ்ந்து வாழலானார்கள். ராமஸ்வாமிக்கும் மதுரை 'ஹை ஸ்கூலில்' ஹிந்தி 'முன்ஷி' வேலை கிடைத்துச் சம்பளமும் பெறலானான்.

* * * *

லலிதா, தன்னை மணந்தவனிடம் பிரியம் செலுத்தக் கூட வில்லை. சிறு வயசு முதல் வேறு ஒருவனைக் காதலிக்கும் போது, எவ்வாறு தன்னை மணந்தவனை நேசிக்கக் கூடும்? ஏதோ அண்ண னும் தங்கையும் போல வாழ்ந்து வந்தனர். * * மஹாமாரி, ஜனங்களை மிகவும் கொடூரமாய்ப் பிடிக்கத் தொடங்கினாள். பலர் அவள் கொடுமைக்கு இரையாயினர். அவர்களுள் ஒருவன் லலிதா வின் கணவன். * * என் செய்வாள் பாவம்! துக்கங்கள் ஒன் றன் மேல் ஒன்று எய்தின! அன்புக் காதலனை யிழந்தாள்; மணந்த கணவனையும் இழந்தாள்: பதினெட்டாம் வயஸில் வைதவ்யம் வந் தெய்தியது. நாட்டாரோ குரூரமானவர்; மொட்டை யடித்தனர். வெள்ளை வஸ்திரம் கொடுத்தனர். மற்றும் வேறு துன்பங்களுக்கும் ஆளாக்கினர். * * ராமு இதை அறிந்தான். துயரங்கொண் டான் தன் காதலியின் துயரை நீக்க ஒரு மார்க்கம் தேடினன்.

மதுரை பிரஹ்ம ஸமாஜத்தின் ஆகரவின் கீழ், சிரஞ்சிவி ராமஸ்வாமிக்கும் ஸௌபாக்யவதி லலிதாவுக்கும், அக்னி முன்பாக, பல நண்பர்கள் கூடி சாஸ்திரோக்தமாக மணம் புரிவித்தனர்.

# விகட விநோதம்

## 5. வாக்கு சாதுரியம்.

அறிவாளர் சங்கத்தில் ஜமீன்தாரை யாரும் மதிக்கவில்லை. இடை யிடையே அவரும் பேசினர்; ஒருவரும் கவனிக்க வில்லை. பின்பு, நாய் களின் சுபாவத்தைப்பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. "சில நாய்களுக்குத் தங்கள் யஜமானரைவிட அதிகம் புத்தியுண்டு" என்றார் ஒருவர். உடனே ஜமீன் தார்: "ஆமாங்க; நிசம்தான்; நம்ம அரமனையிலேகூட அப்படி ஒரு நாய் இருக்குது" என்றார். எல்லோரும் சிரித்தார்கள்.

## 6. தந்த சுத்தி விசேஷம்

தளகர்த்தர், சிப்பாய்களின் உடுப்புக்கள் சாமான்களை யெல்லாம் தணிக் கை செய்துகொண்டு வருகையில், சிப்பாய் கண்ணனைப் பார்த்து, "உன்னு டைய பல் விளக்கும் பிரஷ் எங்கே?" என்று கேட்டார். "இதோ இருக் கிறது" என்று தன் கோட்டுப் பையிலிருந்து, கண்ணன், ஒரு பெரிய ப்ரஷை எடுத்துக் காட்டினன்.

தளகர்த்தர் — இது உன் வாய்க்குள் எப்படி நுழையும்?

கண்ணன் — இல்லே, ஸார் என் பற்களை வெளியே எடுத்து நான் சுத்தி செய்வது வழக்கம்!

---

* காதலன் காவியுடையும் காதலி வெள்ளாடையும் உடுத்தபின்பே அவர்கள் கன்னிக்காதல் நிறைவேறியது! இது காலத்தின் கோலமோ? நம்மவர் கொடுமையோ?—ப-ர், ப-ம்.

# சிசு மரணம்

## அதன் காரணங்களும் பரிகாரங்களும்

ஸ்ரீமதி Dr. S. முத்துலக்ஷ்மியம்மாள், M. B., & C. M.
சென்னை.

(232-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏழைகளின் விஷயமே இப்பொழுது நாம் கவனிக்தற்குரியது: அவர்களுக்கு நற்புத்தி சொல்லி, ஏற்றவாறு உதவிகள் ஏற்படுத்திவிட்டால் போதாது; அந்த உதவிகளை அவர்கள் அடைந்து, பயன் பெறும் வழிகளையும் உபாயங்களையும் தேடிக் கொடுக்கவும் வேண்டும்.

நகரங்களில் சிசுமரண விகிதத்தைக் குறைக்கும் முயற்சியில், குழந்தைகளின் ஆகார விஷயம் அதிமுக்கியமான தொன்று. தாய்ப்பாலுக்கு அடுத்தபடி பசுவின் பால்தான் என்று யாவரும் ஒப்புகின்றனர். சிசு வியாதிகளில் முக்கால் வாசிக்கு ஆகாரக் கோளாறே மூலகாரணம். குழந்தைகளுக்கு ஏற்ற ஆகாரத்தைக் கொடுப்பது. அல்லது அதை யடையும் வழியையேனும் ஜனங்களுக்குக் காட்டிக் கொடுப்பது, துரைத்தனத்தார் நகர பரிபாலன சபையார்களின் கடமை யாகும். அமெரிக்காவிலும் மற்ற நாகரிக நாடுகளிலும் இப்பொழுது நடைபெறும் முறைப்படி, சுகாதார மான பாற்பொருட் சாலைகள் (Sanitary Dairies) ஏற்படுத்துவது தான் ஒரே வழி. இச் சாலைகளில், எந்த வேளையிலும் எல்லா ஜனங்களுக்கும் சுத்தமான பால் கிடைக்க வேண்டும்; ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாய்க் கொடுக்கவேண்டும்.

குழந்தையின் வயிற்றினுட் போய்ச் சேருமுன், உஷ்ணமான நம் நாட்டிலே, பால் எவ்வளவு அசுத்த மடைகிற தென்று நான் விரித்துக்கூற வேண்டாமே. படிப்புள்ள நடுத்தர ஜனங்களுக்குமே சுத்தமான பால் கிடைப்பது அரிதாயிருக்கிறது; கையில் காசில்லாத ஏழை ஜனங்களின கஷ்டம் இன்னும் அதிகம்; இந்த விஷயம் நாம் உடனே கவனிக்க வேண்டியது. வீட்டில பால் இல்லாத போது, ஆகாரங் கொடுக்கும் ஒழுங்கையும், பாலைப் பரிசுத்தப் படுத்தும் முறைகளையும பற்றி, சுகசாரணர்கள் ஏழைகளுக்குப் பிரசங்கம் செய்வதால் என்ன பிரயோசனம்?

மருத்துவச்சிகளைப் பழக்கும் முறையைப்பற்றி, நான் ஒரு வார்த்தைகூற விரும்புகிறேன். என் அநுபவத்தில், இவர்களுக்குத் திறமை போதாது; வேண்டுமாயின் இவர்களை இரண்டு வருஷ காலம் படிப்பிக்க வேண்டும்; அப்படிப்பு அதிக முள்ளவர்களையே தேர்ந்தெடுத்து, மருத்துவத் தொழிலுக்குப் பழக்கவேண்டும்; ஏழைகளுக்குள் இவர்கள் செய்யும் வேலையை, பிரசவசாரணர்கள் மேற் பார்க்க வேண்டும்; திறமை குறைந்தவர்களை, இன்னும் பழகும்படி, பிரசவ ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்ப வேண்டும். சுக சாரணர்களைத் தெரிந்தெடுத்துப் பழக்குவதில், நாம் இதனினும் அதிகம் கவலை காட்டவேண்டும்; ஏனெனின், இவர்களுடைய அறிவும் அநுதாபமும் அன்புமே, ஏழைகள் வீடுகளில் பேருதவி யாவன. பெண்களுக் கென்றே ஒரு வைத்திய கலாசாலையை ஏற்படுத்தி, படித்த பெண்கள் பலரை மருத்தவச்சிகளாகவும் சுகசாரணாகளாகவும் பழக்குவதும்; "மருத்துவச்சிகள் சட்டம்" ஒன்றை ஏற்படுத்தி, மருத்தவ ஞான மில்லாத அம்பட்டச்சிகள் இத் தொழிலில் பிரவேசித்துத் தீங்கு விளையாது தடுப்பதும், அவசியமாகும்.

இவை எல்லாவற்றினும் அதி முக்கியமான விஷயம், பிரசவத்துக்கு முன் சூலிகளைப் பேணிப் பராமரிப்ப தாகும்: இனி அதைப் பற்றிப் பேசுவோம். நம்மிற் பலர் எண்ணுகிறபடி, உயிர் வாழ்க்கையின் ஆரம்பம், பிரசவ மன்று. தாயின் கருப்பப் பையில் ஜனித்த கணத்திலேயே, சிசுவின் வாழ்க்கை தொடங்கி விடுகிறது. அது முதலே, நாம் அதைப் பேணிக் காபபாற்ற வேண்டும்; தாய் தந்தையர்க் குரிய நோய்களாலும், வேறு தீங்குகளாலும் பீடிக்கப் படாமல், அதைப் பாதுகாக்கவேண்டும். இதைத்தான், பிரசவத்துக்கு முன் சூலிகளைப் பராமரித்தல் என்று சொன்னோம்.

ஒரு ஸ்திரீ கருத்தரித்திருப்பதை, அவளேனும், அவளைச் சேர்ந்தவர்களேனும், சுக சாரணர்களேனும் முன்னதாகவே தெரியப்படுத்த வேண்டு மென்று, ஒரு கட்டாயமான விதியை ஏற்படுத்த வேண்டும்; ஆனால் தான், சூலிக்குவேண்டிய சிகிச்சைகள் செய்து, கருச் சிதைவு, அகாலப் பிரசவங்கள் நேராமல் காக்கக்கூடும்; ஸ்திரீ ரோக விஷங்களால், அவள் பீடை யுறாமல் விலக்க முடியும்.

பூர்ணமான சுகப் பிரசவங்களைவிட, கருச் சிதைவுகளும், அகாலப் பிரசவமாகிச் சிசுக்கள் செத்துப் பிறப்பதும், நம் நாட்டில் அதிகம் நிகழ்கின்றன. என் அநுபவத்தில், உயர்தர ஸ்திரீகளில் பலர் வாழ்க்கையில, பிரசவங்களினும் அதிகம் "பிள்ளை விழுதல்" நிகழ்கின்றது. சரியான சிசுமரணக் கணக்கில், இவ்வாறு "பிள்ளை விழுதல்" களையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு பிரசவத்தையும் தெரியப்படுத்திப் பதிவு செய்ய வேண்டுமென்று ரூல் இருப்பதுபோல, பிள்ளை விழுதல், அகால பிரசவங்களையும் தெரியப்படுத்த வேண்டுமென்று ரூல் இருக்க வேண்டும். நோயைக் குணப்படுத்துவதைவிட, நேராமல் தடுத்து விலக்கவே நாம் முயலவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், பல சிசுக்களை அழித்தும், சிசுக்களை அங்கவீனர் பலவீனராக்கியும், பெருந்தீங்கு விளைத்துவரும் வெட்டை, மேகம் முதலிய ஸ்திரீ ரோகங்களைப்பற்றிப் பேசுவது அவசியமாகிறது. இந்நோய்கள் தாய்க்கோ, தகப்பனுக்கோ மட்டும் (இருவருக்குமோ) இருந்தாலும், இத தீங்குகள் விளையக் கூடும். இதன் பொருட்டு, இப்படிப்பட்ட நோயுள்ள ரூலிகளுக்கு இலவசமாகச் சிகிச்சை செய்யும்படி, ஸ்திரீரோக ஆசுபத்திரி ஒன்று ஸ்தாபிக்கவேண்டும். இநத ஆசுபத்திரியில், ஏழைகளுக்கு இலவசமாக, இரத்த பரிசோதனை முதலிய பரீக்ஷைகளை நடத்திப் பார்த்து, உள்ள நோய்களுக்கேற்ற சிகிச்சைகள் செய்யப்பட வேண்டும்.

மற்ற நாகரிக நாடுகளில் நடப்பதுபோல, ஏழைச் சூலிகளுக்குத் தினம் ஒரு போதேனும் சமர்த்தியான ஆகாரமும், குழந்தைகளுக்குப் பாலும், இனமாகக் கொடுக்கும்படி, தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்த வேண்டும். தனவான்களும் நகர பரிபாலன சபையாரும், இதைக் கவனிக்கவேண்டும்.

கவர்னரவர்களின் புண்ணியத்தால், சென்னையிலே ஒரு சிசு வைத்திய சாலை சீக்கிரம் ஏற்பட்டு விடும். இப்படியொரு ஆசுபத்திரியின்றி, இந்தியக் குழந்தைகளுக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்வது சாத்திய மன்று. இப்படி ஒரு ஆசுபத்திரி யில்லாமல், குழந்தைகள் நெடு நாளாய்க் கஷ்டப்பட்டு வந்திருக்கிறார்கள்; இன்னும் கஷ்டப்படுகிறார்கள். குழந்தை வைத்தியத்தில் தேர்ந்த நிபுணர் சென்னையில் இல்லை; இப்படி ஒரு ஆசுபத்திரி ஏற்பட்டால் தான், காமாலை, வயிற்றுக்கட்டி முதலிய சிசு ரோகங்களை ஆராய்ந்து பார்த்து, பரிகாரங்கள் கண்டு பிடிக்க முடியும். குழந்தைகளின் ஆகார விஷயத்தில் மேல் நாட்டார் முறைகளையே நாம் பின்பற்றி வருகிறோம். நம்முடைய நாட்டின் சீதோஷ்ண நிலைமைகளுக்கும் நம் குழந்தைகளுக்கும் ஏற்ற ஆகார முறையை, நாம் இன்னும் கண்டு பிடித்துக் கொள்ளவில்லை.

மற்ற நாகரிக நாடுகளிலே, சிசுபரிபாலன முயற்சியில, இராசாங்கத்தாரும் முனிஸிபாலிடிகளும் சமூகக் கடமைப்பற்றுள்ள தனவான்கள்தர்மிஷ்டர் படிப்பாளிகளும், ஒன்று கூடி ஒத்துழைக்கின்றனர். நம்ம நாட்டிலும் அப்படிச் செய்தால்தான் காரியம் கைகூடும்.

நமக்குள் படித்துள்ள ஸ்திரீகளும், கனம் லேடி வில்லிங்டன் அவர்களின் முன் மாதிரியைப் பார்த்து, தங்கள் ஏழைச் சகோதரிகளுக்கு, அவர்களின் ஏழைக் குழந்தைகளுக்கு நன்மை விளைக்கக்கூடிய பல வேறுபட்ட துறைகளில், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் மனமுவந்து உழைப்பார்களாக.

## தமிழ் நாவல்கள்

### (சில குறிப்புகள்)

ஸ்ரீமதி * * * * * அம்மாள், சென்னை.

தமிழ் நாட்டில் நன்னெறி போதிக்கும் உயர்ந்த தத்துவார்த்தத்தை விளக்குவதான நூல்கள், ஞானோதயம் பெற்ற மகான்களால் கோடானுகோடி இயற்றப்பட்டுள்ளவாயினும், இயற்கைக் கொட்டி, பலவகைப்படும் மனிதர்களின் மனோ நிலைமையை நன்குணர்த்திக் கூறுவதான "நாவல்" என்னும் புதிய வழியை யனுசரித்து எழுதப்பட்ட புத்தகங்கள், மிகச் சிலவே யுள்ளன. அவற்றிலும் பொருட்சுவை, நடையழகு, இயற்கை யனுபவம் இவை மூன்றும் சேர்ந்து காணப்படும் "நாவல்"கள், பின்னும் குறைவுபடும். இவ்வகையான புத்தகங்கள மற்றப் பாஷைகளில் விட ஆங்கிலத்தில் பெரும்பாலும் நாம காணலாம். இயல்புக்கு விரோதமாய் அதிசயோக்தி மிகுந்து நின்ற கவிகள், கதாசிரியர்கள், அப்போதைக்கப்போது தங்கள் குற்றம் குறைவுகள் வெளிப்படையாயெடுத்துப் பேசிக் கண்டனம செய்யப்படுகின்றமையால், உலக நீதி சற்றும் பிசகாமல், படிக்கப்படிக்க அதிக ஆச்சரியகரமான விஷயங்கள் புலப்படக்கூடியவண்ணம கதாரூபமாய் வெளியிட்ட நூல்கள், அங்கு அநேக மிருக்கின்றன. கேவலம் கற்பனா சக்தியின் மேன்மையினல் புனையப்பட்டுக் கட்டுக்கதைகளென வெளிவரும் புத்தகங்கள, ஜனங்களுக்கு நல்லறிவை யூட்டும் தெய்விகப் பான்மை யுள்ள அரிய கிரந்தங்களிற் சேர்ந்தனவாய் இலங்குவதில்லை. இயற்கையின் விசேஷங்களையும், வாழ்நாளி லுள்ள உண்

மையான அனுபவங்களையும், தமது சொல்வன்மையினால் கண்ணாடி கொண்டு காட்டுவதுபோல் எடுத்துரைக்க வல்லவரே, நூலாசிரிய ரென்னும் சிறந்த பெயருக் குரியவ ரென, அங்கு மதிக்கப்படுவர்.

நம்மைச் சுற்றிலும் நாம் தினசரி காணும் நிகழ்ச்சிகள், எவ்வளவு அற்பமாயும், விஷய மின்றியும் நம் புத்திக்குத் தோன்றுகின்றன! அவைகளையே இவ் வபூர்வமான மனோபாவம் படைத்த கல்வி யறிவாளர்கள், அவைகளினுள் பொதிந்து கிடக்கும் உண்மை விசேஷங்கள் விளங்குமாறு நமக்குத் திறமையுடன் எடுத்துரைக்கும் பொழுது, மிகச் சாதாரணமாய் முதலிற்பட்டது, பிறகு எவ்வித முக்கிய கருத்துக்க ளடங்கியனவாய், மனதிற்குத் தோன்ற, நாம் மட்டில்லா வியப்படைகின்றோம்! அப்படிப்பட்ட வோர் திறமை தானாகவே உண்டாவது, கடவுளின் அருட்பொழிவே யென்பதில் என்ன சந்தேகம்! இங்கிலாந்தில டிக்கன்ஸ் (Charles Dickens) என்னும் பெரிய நூலாசிரியரும், ப்ரான்சில் Victor Hugo)விக்டர் ஹ்யூகோ என்னும் கவிவாணரும், அவ்வூர்களில வறுமையால வருந்திய ஜனங்களின பரிதபிக்கத் தக்க நிலைமையையும், மதப பற்றுக்குறைவினால் மேற்பட்ட தீச்செயலகளையும், இழி தொழில்களையும் கண்ணுற்று, தாங்கொணாத் துயரமடைந்து, அவர்கள் முன்னேற்ற மடைய வேண்டுமென்றே, தாம் கண்ணாற் பார்த் துணர்ந்தவைகளைக் கதாரூபமாய் வெளியிட்டனர் என்று சொல்லுவார்கள். மற்றவர்களுக்கு வெகு சகஜமாய்க் காணும் விஷயங்களே, ஹிருதயத்தை ஊடுருவிச் சென்று புண்படுத்தக் கூடிய நுட்பமான மன உணர்ச்சியையும், ஜீவகாருண்யத்தையும் இம் மகான்களுக் குண்டாக்கின வென்றால், அவர்கள் உள்ளம் கசிந் துருகியவுடன், அவ் வுணர்வுக் கேற்ற சொற்றிறமையும் அவர்களுக் கியல்பாகவே உதித்த தென்பதில, நாம் வியப்படைய வேண்டுமா? நாம் எழுதத் தொடங்கும்பொழுது நமது கவலை, சிரமம் இவை சிறிது மின்றித் தானாகத் தோன்றுவதே, அசாமான்ய முள்ள நம்மன நிகழ்ச்சிகளை உற்றவாறு விவரிக்க வல்லதென்று, ஆங்கில சிரோமணிகள் பலர் எழுதி யிருக்கின்றார்கள். எக்காலத்திலும் தமிழ் மொழியிலே ஒரு சிறந்த நூலாய் மதிக்கப்பட்டு வரவேண்டிய புத்தக மென்றால், அதற்கென் னென்ன குணங்கள் அமைந்திருக்கவேண்டு மென்பதைச சற்று ஆராய்வோம

ஒரு கவியானவன், பிறக்கும்பொழுதே அவ்வித சக்தியுடன் பிறக்க வேண்டுமே யொழிய, பிறகு அவ்வாறு தேர்ந்தவனாவது அசாத்திய மென்பது. படித்தவர் எவரும் அறிந்ததே. தம்மனதிற்றோன்றிய சிறந்த எண்ணங்களை அவைகளுக் குரிய நடையில் சொல்லவும், எழுதவும் திறமை வாய்ந்தவர்கள், ஏக காலத்தில் பல பெய ரிருப்பது அரிது. ஏனெனில், மனோதர்மமும், கல்வி

யறிவுமே இயற்கையில் ஈசுவரனளிக்கும் வரன்களாயிருக்க, எதை யும் ஆழ்ந்து நோக்கும் தன்மையும், மெய் யன்புடன் உள்ளம் கனிந்து தோன்றும் கூரிய மன உணர்வும், யாவரும் எளிதில் பெற்றிருப்பது சாத்தியமா? ஒரு பிறவிக் கவியின் மனதானது, எப் பொருளைக் காணினும், எவ்விதக் காட்சியை நோக்கினும், மற்ற வர்களைப் போல ஸ்தூலமாய்ப் பாராமல், உடனே அதைப் பரிவுடன் உட்புகுந்து நோக்கி, தன் மயமாய்ப் பாவிக்கத் திறமை வாய்ந் திருப்பதனாலேயே, மற்றெவருக்கும் சாத்திய மல்லாத ஒரு பாஷைத் தேர்ச்சியையும், விவரித் தெடுத்துரைக்கக் கூடிய ஒரு இயற்கைச் சக்தியையும், அவன் பெறுகிறானென்பது திண்ணம். அப்போதைக்கப்போது மாறும் தன்மை யுள்ள உலக ரீதியையும், ஜனங்களின் பல வேறுபாடுள்ள மனப்போக்கையும், உள்ளபடி உணர்ந்து கவி கூறும்பொழுது, மகா ஞானம் படைத்த ஒரு தீர்க்கதரிசியோவென, சில சமயங்களில் நாம் வியப் பெய்துகிறோம். தன் காலத்தில் தன்னைச் சுற்றிலும் நிகழுபவைகள், அப்போதிய நிலைமை, இவைகளை எடுத்துக் காட்டுவது மாத்திர மல்ல, மற்று எக்காலத்தும் எத் தன்மையிலும் சிறந்திலகக் கூடிய சில உண் மை உயர்வுகளையும், தேர்ந் தறிவதான நுட்ப திருஷ்டியும், தெய் விகப் புலமை வாய்ந்த ஒரு மகானுக் கேற்பட்டிருக்கும் இயல் பிற்கு முற்றிலும் ஒட்டியிருப்பதா லன்றோ, பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும், ஷேக்ஸ்பியர், காளிதாசன், வால்மீகி, வியாசர், கம்பர் முதலிய மகா கவிகளியற்றிய நூல்கள், எந்நிலைமையிலும், எப்பாஷையிலும், எத்தேசத்திலும், ஒரேவித மனக்களிப்புடன் படித்துக் கொண்டாடப் பெற்று வருகின்றன! இதா நூல்களுக் கும் அவைகளுக்குமுள்ள வித்தியாசம், எவருக்கும் எளிதில் விளங்கக் கூடியதா யிருக்கின்றதல்லவா? அயோத்தியா காண்டத் தில், தந்தையின் உறுதி மொழியைக் காப்பாற்றுவதின் நிமித்தம் ஸ்ரீராமர் நகரை விட்டுக் கிளம்பும்பொழுது, அங்குள்ளோ ரனை வரும் பரிதபித்த நிலைமையைப் படித்த உடன், கண்ணீர் வடிக்கா தார் யார்? அச சோகரசத்தை அவ்விதம் மனதில் தைக்கச் செய்து, கண்முன் அப்பொழுது தான் நடப்பது போல் காட்டிய சக்தி, அம்மகா கவியினுடையதே யன்றோ! கவி கூறுபவற்றை ஊன்றிப் படிப்பவர்கள், உண்மையில நடப்பவைகள் போல் அனுப விப்பதே, எழுதுவதின் அபூர்வ திறமையாகும். இல்லாவிடில், ஜீவநதி போல் என்றும் வற்றாத இன்பச்சுவையை அவருடைய மொழிகளின் விருந்து நாம் எங்ஙனம் பருக முடியும்! உலகியல்பு எங்காவது சற்றுப் பிசகினும், வாசிப்பவர்கள் மனதில் உடனே அசட்டை யுண்டாவது முற்றிலும் திண்ணம். ஸ்வயமாகவே மிக வும் நுட்பமான உணர்ச்சிகளும், தெள்ளிய மனோபாவமும்

அடைந்து சிந்திக்கும் பாக்கியம் பெற்றாலன்றி, எந்நாளும் சிறந்த நாய் மதிப்புறக்கூடிய நூல்களியற்றுவது சாத்திய மல்ல. எது எப படியாயினும், நூலாசிரியனாக விரும்புவன், ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கித் தன்மனதிற்குப் பட்டபிறகே எழுதத் துவக்கவேண்டு மென்பதை, முதற் கோட்பாடகக் கொள்ளுவது முற்றிலும் அவசியமே.

மற்றொரு விஷயமும் கவனிக்கத் தக்கது. ஆங்கிலத்தில், பாஷையின நடையைப்பற்றி, வெகுவா யெடுதுப் பேசுவ துண்டு. அது மிகவும் முக்கியமான தென ஒவ்வொரு பாஷையின் சாகித்திய சிரோமணிகளும் ஒப்புக்கொள்ளத் தடை செய்யார்கள். "ஒருவன் எழுதும் ரீதியே அவனை நன்கு விளக்கா நிற்கும்" என்னும் கொள்கை, ஒரு பழமொழிபோல் மேல்நாட்டில் கற்றறிந்தவர்களுக்குள் வழங்குகின்றது. ஒவ்வொரு கவிக்கும், அவருடைய ஸ்பவபாவத்திற்கும மனபபோக்கிற்கும் எறறவாறு நடையமைந்திருககுமே யொழிய, ஒருவருடையது மற்றொருவருடையதுபோல் ஒருநாளும் இருக்க முடியாதெனவும்; அபபொழுதே, அவர்கள் தங்கள் உள் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் உள்ளபடி வெளியிடவும, படிப்பவர் அவைகளைத் தெளிவா யறிந்து கொள்ளவும் இயலு மெனவும், அங்கே கூறுகிறார்கள். அரிய பெரிய கருத்துக்களை வெளியிடுவதாயினும், பாஷையின போக்கானது அந்தந்தக் கவியின் இயல்பிற் குற்றவாறு பலதிறப்பட்டு விளங்கின், படிப்பவர்களுக்குச் சலிப்பை ஒருபோதும் உண்டாக்காமல், பின்னும் மனோற்சாகத்தையே எப்பொழுதும் அளிக்குமன்றோ! தமிழில் இவ் வித்தியாசத்தை, ராமலிங்கப்பிள்ளை, தாயுமான ஸ்வாமிகள், முதலிய பக்த சிகாமணிகளுடைய செய்யுட்களில், நாம அறியக் கூடுமாயினும், எளிய நடை யெனவும, அரிய கருத்துக்களடங்கிய கடின நடையெனவும், இம்முறையில் மட்டுமே நாம் பிரித்துச் சொல்லமுடியும். கவியினியல்பை அவன் எழுதும் ரீதியினின்றும் தெரிந்து கொள்ளக் கூடு மென்பது, படிப்போருக்கும் மிகவும் உவப்பையே தருது, அதை ஆராய்ச்சி செய்து பேசவும் எழுதவும் அவர்களைத் தூண்டுகினறது. இவ்விதம் மேன்மேலும் நுட்பமாய் விசாரணை செய்து விஷயங்களைக் கண்டறிவதனாலேயே, மேல் நாட்டில் சாகித்தியம் அளவு கடந்ததாயும், எல்லை யறற பெருமை யுற்றதாயும் விளங்குகிற தென, நாம திட்டமாய்க் கூறலாம். கவித்திறன் காலபங்கும் உழைப்பின் பெருமையே முக்கால் பங்கு மென்பது பொய் யில்லையாயின், தமது தாய்மொழி வளர்ந்தோங்கிச் சிறப்புற வேண்டுமெனத் தாம் உண்மையான ஆர்வமும் அவாவும் கொண்டவர்க ளென்பதை ரூபித்து, தமிழ் மக்களும் நற்பய னெய்த முயலுவது, எவ்விதத்திலும் மேன்மையே.

# நீதி மாலை

(248-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## 5. மாத்ரு ப்ரேமை.

ஒரிசா தேசத்தில், 1880-ம் வருஷம், ஒரு கொடிய பஞ்ச முண்டாயிற்று. அந்நாட்களில், நடுத்தர ஜனங்களுங் கூட, ஆகாரத்திற்கு வழியில்லாது பட்டினி கிடக்க வேண்டி வந்தது. எவ்வளவோ பெரிய பெரிய கீர்த்தி மிக்க குடும்பங்களைச் சேர்ந்தோரும், கையில் பிக்ஷா பாத்திரங்களை யேந்தி, ஒவ்வொரு வீடாய்ச் சென்று யாசிப்பது, பார்க்கப் பரிதாபமா யிருந்தது. அக்காலத்தில், இவ்வண்ணம் பிச்சை யெடுப்பவர்களுக்குப் பிச்சை போட யாரால் தான் முடியும்? ஒவ்வொருவருக்கும் ஒரு கைப்பிடி அரிசியே கொடுத்தாலும், ஒரு நாளுக்கு, குறைந்த பக்ஷம், ஒரு மூட்டை அரிசியாவது வேண்டியிருக்கும். இப்படித் தாராளமாய் எந்தப் பிரபு கொடுப்பான்? சாராம்சம் யாதெனில், பிச்சை யெடுத்தும் வயிற்றுக்கு நான்கு கவளச் சோறு கிடைப்பதும் அதிகக் கஷ்டமாயிருந்தது.

அப்பஞ்ச காலத்தில் ஒருநாள், பத்துப் பன்னிரண்டு பிராய முள்ள ஒரு சிறுவன், பிச்சைப் பெட்டியோடு ஒவ்வொரு வீடாய்ச் சென்று களைத்தானே யல்லாது, ஆகாரம் கொஞ்சமேனும் அகப்படவில்லை. கடைசியாக, சலித்துப்போய், அவன் களைப்பாறும் பொருட்டு, ஓர் அந்தணனது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். பசிப்பிணியா லுண்டான அவஸ்தையும், நிராசையா லுண்டான கஷ்டமும் குடிகொண்டிருந்த அச்சிறுவனது முகத்தைக் கண்டு, அப்பிராமணனுக்கு அவன்மேல் தயையுண்டாகவே, அவனை நோக்கி, “பையா! நானுனக்கு உண்ணக் கொடுக்கிறேன். அதை உண்டு இங்கேயே சௌஸ்தயாயிரு” என்றான்.

கண்களில் நீர் ததும்ப, அச்சிறுவன், “ஸ்வாமி! நீங்கள் எனக்கு ஒரு கவளம் கொடுத்தபோதிலும், அதை வீட்டிற்குக் கொண்டு போயே உண்பேன்.” என்றான்.

இதைக் கேட்ட பிராமணன், ‘ஏனடா! பசியால் நீ மிகவும் களைத்து வருந்திக் கொண்டிருக்கிறாய், ஏன் இங்கேயே உட்கார்ந்து

உன்னை மறுக்கின்றாய்? கொடுப்பதை வாங்கி வீட்டிற்குக் கொண்டு போவேனென்று சொல்லுவதன் அர்த்தமென்ன? உன் வீட்டில் யாரிருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

அப்பொழுது, அச்சிறுவன், நீர் நிறைந்த நேத்திரங்களோடு, ஒரு முறை பெருமூச்செறிந்து, "ஸ்வாமி! விதியின் செயலை என்னவென்று சொல்லுவேன்! என் தந்தை இப் பஞ்சம் ஆரம்பமானவுடன், குழந்தைகளின் வயிற்றை நிரப்பச் சக்தியற்று, எங்களை விடுத்து எங்கேயோ போய்விட்டார். அவர் இன்னும் உயிருடனிருக்கிறாரோ இல்லையோ வென்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. என்னுடன் பிறந்தவன், ஒருவனே யுண்டு. தந்தை காணாமற் போகவே, எங்கள் தாய், வீட்டிலுள்ள சாமான்களை விற்று, ஏழெட்டு நாட்கள் எங்கள் பசியைத் தணித்து வந்தாள். பிறகு, அவள்தான் என்ன செய்வாள்? கடைசியாகக் கையில் பிக்ஷா பாத்திரத்தை யேந்தி, நாங்களிருவரும் வெளிக் கிளம்பினோம். என்ன கிடைத்தபோதிலும் எங்களுக்குக் கொடுத்து விட்டு, மீதியுள்ள சொற்ப ஆகாரத்தையே அவள் உண்பாள். இப்படிச் சில நாட்களைக் கழித்தோம். பிறகு என் தாய் தேகஅசௌக்கிய மடையவே, என் தம்பியை அவள் சமீப மிருக்கச் செய்து, நான் தனியாய்ப் பிச்சை யெடுத்துத் திரிந்து வந்தேன். ஒருநாள் மாலை நான் வீட்டிற்குத் திரும்பிச் சென்று பார்க்க, என் தம்பியைக் காணவில்லை. எங்காவது சென்றிருப்பானென்று, நாலா பக்கங்களிற் சுற்றித் திரிந்தும், அவன் அகப்படவில்லை; அவன் இறந்திருக்கவேண்டும். என் தாயும் மூர்ச்சை யற்றுக் கிடந்தாள். துக்க மேலிட, நான் பேசாமல் அழுத வண்ண முட்கார்ந் திருந்தேன். என் தாய்க்கும் கொஞ்சம் ஞாபகம் வரவே, எனது தம்பியைக் குறித்து விசாரித்தாள். அவளைச் சமாதானஞ் செய்யும் பொருட்டு, ஒரு பெரிய தனவான் மனமிரங்கி அவனைக் காப்பாற்றுவதாகச் சொன்னதால், அவரது வீட்டிற்கு அனுப்பி விட்டேனென்று பொய் புகன்றேன். அவன் இறந்தானென அவளுக்குத் தெரிந்திருக்கும் பக்ஷத்தில், அவள் உயிரும் அப்பொழுதே போயிருக்கும். பிறகு நான் பிச்சை யெடுத்து வந்துள்ளதிலிருந்து அவளை உண்பிக்க, அவள் சிறிது களைப்பு நீங்கி, என்னைப் பார்த்து, "குழந்தாய்! நீ எனக்காக எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது! உன் தம்பியைக் காப்பாற்றும் உதார குணமுள்ள அச்சீமான் உன்னையும் ஆதரிக்கக் கூடாதா? நீங்கள் சௌக்கியமா யிருந்தால், எனக்கு மரணம் வந்தபோதிலும் சந்தோஷமாய் இறப்பேன்." என்றாள். அவள் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் எனக்குத் துக்க மேலிடவே, அவளைச் சமாதானப்படுத்தி, மறுபடியும் பிச்சை யெடுக்கப் புறப்பட்டேன்

இன்று இவ்வூர் முழுவதும் திரிந்தும், ஒரு கவளமேனும் அகப்படவில்லை. தாங்கள் தயவு செய்து என்ன கொடுத்தபோதிலும், முதலில் என் தாய்க்குக் கொடுத்த பின்பே நான் உண்பேன். நான் நேற்றுமுதல் பட்டினியென்பது வாஸ்தவமே. ஆனால், அவள் இதைவிட அதிக அவஸ்தைக்குள்ளாயிருக்கிறாள். இன்று அவளுக்கு உணவு ஒன்றும் அகப்படாத பக்ஷத்தில், நாளை உயிருடன் பார்ப்பது சந்தேகமே" என்று சொல்லி முடித்தவுடன், அச்சிறுவனது நேத்திரங்கள் மயங்கவே, கீழே தரையில்விழுந்து மூர்ச்சித்தான்.

—Zero.

# கம்ப ராமாயண இன்கவித் திரட்டு

(213 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., வெள்ளக்கால்

'இந்த மாளிகை இராவணன் மனைவியர் மாளிகைகளெல்லாவற்றினும் சிறந்திருக்கின்றது; இதிலேதான் அவன் சீதையை வைத்திருக்கின்றானோ'வென்று அநுமான் ஐயுற்றான்.

கருப்பையையும் கசப்பிக்கும் கனிமொழியாரான தேவமாதர்கள் கால்வருடியும் சாமரை இரட்டியும் செவிக்கினிமையாக யாழ்வாசித்தும் நாசிக்கு உவப்பாக கற்பக மலரை எதிரேந்தியும் பணிவிடை செய்யச், சூழ உள்ள இரத்தின தீபங்கள் சோபை குன்றும்படி தன் மேனியொளி சொலிக்கத் தூங்குகின்ற மண்டோதரியை அநுமான் கண்டு, தன் உள்ளத்துள்ளே இவள் சீதையோ வென்று ஐயங்கொண்டு, அதனால் அந்த உள்ளத்தோடு உயிரையும் உயிரோடு உடலையும் சுடும்படியான துன்பமுற்றுக 'கற்பு நீங்கிய இவள் சீதையாயின், இராமனுக்குச் சீதையை தேடிக் கொடுத்தலே பெரும்பயனென்றறிந்த யானா அதனை யிழக்கேனுவேன்; இராமன் புகழும் யானும் இவ் இலங்கையும் எல்லா இராக்கதரும் இன்றே இறந்தொழிவோம்' என்று கருதினான். பின்பு 'இவளிடத்துச் சீதையின் இலக்கணங்கள் சில காணப்படினும் இவள் அவை முழுதும் உடையாளல்லள். அவள் மானுட வடிவினள். இவள் அதற்கு மாறுபட்ட வடிவினள். இராமனைக் காதலித்த வஞ்சிமையாளெவரும் இரதிகேள்வனையும் எதிர்ப்படார். சந்தேகித்தது தவறு' என்று எண்ணினான்,

பின்பு மண்டோதரியின் மாளிகையை நீங்கி இராவணன் மாளிகையை அடைந்தான். அப்போது இராவணனுக்குக் கேடு விளைவதற்கு முற்குறிகளாகப் பற்பல உற்பாதங்கள் நிகழ்ந்தன. அநுமான் அவைகளைக் கண்டு 'அந்தோ! இப்பெரு நகரத்தின் செல்வம் அழியும். எவராயினும், அவர் செய்த பாவ புண்ணிய பலன்களை அநுபவித்தல் திண்ணம். இராவணன் நல்வினைப் பயனாந் வாழ்வு வந்தது போலத் தீவினைப் பயனாகக் கேடு சேரும் காலம் கிட்டியது' என்றெண்ணினான்.

மிகவும் விசாலமான வெள்ளிய மெல்லிய மலர்ப்பள்ளியில் இரத்தினாபரணங்கள் விளங்க இராவணன் சயனித்திருத்தல், வெண் பாற்கடல்மேல் இரத்தினங்கள் காணப்படும் கருங்கடல் கிடந்தாற் போன்றிருந்தது.

உதயகிரியிலே பால சூரியன் விளங்குதல் போலப் பத்துத் தலைகளில் ஒவ்வொன்றிலும் இரத்தின கிரீடங்கள் விளங்கின: அவ்விளக்கத்தோடு ஏனைய இரத்தினாபரணங்களின் விளக்கமும் சேர்ந்து பெரும் பிரகாசம் செய்தலால் இரவென்னும் பொருள் இறந்தொழிய, நரசிங்கமூர்த்தி பல கைகளும் தலைகளும் பரப்பி மேருமலையிற் பள்ளிகொண்டிருந்தாற் போலத் தன் சுவர்ண மாளிகையிலே இராவணன் படுத்திருந்தான்.

தேவமாதர் இருபக்கமும் வரிசையாக நின்று சாமரைகள் சுழற்ற உண்டாகிய இளங்காற்று, அவனது பள்ளியறையில் தொங்கும் கற்பக மலர் மாலைகளின் தேன் துளிகளை அவன் மேனி மேற் சிதறி விசுந்தோறும், சீதையை நினைந்து பெருமூச்செறிந்து உயிர்தேய்ந்து கொண்டிருந்தான்.

அவன் திக்கு விசயம் செய்த காலத்தில் அட்டதிக் கசங்களும் எதிர்த்து மார்பிற் பாய அவற்றின் கொம்புகள் புகுந்து முறிந்து பதிந்த பழம்புண் வடுக்களினிடையே மன்மத பாணங்கள் பாய்ந்த புதுப்புண்கள் இருந்தன.

மிக வெப்பம் தணியப் பூசிய செஞ்சந்தனத்தில் தென்றல் வீசுதல், சிவந்த உலைத்தீயை எழுப்பும் துருத்திக் காற்றுப்போன்று காமத் தீயைக் கதித்தெழச் செய்ய, மனம் முதலிய அந்தக் கரணங்கள் சீதைபாற் சென்றதனால், அவன் நெஞ்சு பாம்பு நீங்கிய பாழ்ங் குகை போலப் பாழ்பட்டிருந்தது.

25. கொண்டபே ரூக்கம் மூளத் திசையெலாம் குறித்து மேனாள்
*மண்டிய செருவில் வீரத் தோள்களால் வாரி வாரி [பாயும்
உண்டது தெவிட்டிப் பேழ்வாய்க் கடைகள்தோ றொழுகிப்
அண்டாதம் புகழின் தோன்றும் வெள்ளையிற் றமைந்தி யானை.

இ-ள், (இயற்கையாகப் பிறவியில்) கொண்டிருந்த பெருந் தைரியம் (செயற்கையாகத் தவஞ்செய்து பெற்ற வரபலத்தினால்)

விருத்தியாக (அதனால்) முன் காலத்தில் திசைகள் தோறும் (உள்ள வீரர்களை வெல்லக்) கருதிச் சென்று தாக்கிய யுத்தங்களில் (இருபது) வீரக்கைகளாலும் அள்ளி யள்ளி (ப்பத்து வாய்களால்) உண்டது (வயிறு நிறைந்து மேலெழுந்து வாயும்) நிறைந்து (இருபது) கடைவாய்கள் தோறும் ஒழுகி வழிகின்ற தேவர் புகழ் போலத் தோன்றும் வீரப்பற்கள் அமைந்திருந்தவனை (அநுமான்) கண்டான்.

மண்டிய-தாக்கிய (சங்க அகராதி); அட்டதுச் செய்த (புறநானூறு) தோள் – கை (சிந்தாமணி) பேழ் – பெருமை – பேழ்வாய் – பெரியவாய்.

“கீர்த்தியை வெண்ணிற முடையதென்று கூறும் கவிமரபும், ஒருவனது புகழை மற்றொருவன் வென்றொழித்தனனென்ற பொருளில் அதனை அவன் வாயிற்போட்டுக் கொண்டானென்று கூறும் உலகவழக்கும் இவ்வருணனைக்கு மூலம். தோள் வலியாற் புகழைக் கவர்ந்து கொண்டமை, கைகளால் வாரியுண்ட தெனப்பட்டது.

மனம் சீதையாகிய திருமகள் பால் செல்லுதலாலும் அந்தச் சீதை காதலால் உறக்கமின்றி அறிதுயிலாகப் பொய்த் தூக்கம் தூங்குதலாலும் திருமாலென்னும்படி இராவணன் பள்ளி கொண்டிருந்தான்.

பரந்த கருங்கடலிலே உயர்ந்த உதயகிரியிலே பேரொளியுடன் தோன்றும் சூரியன்போல, அவனுடைய பெரிய கரிய உடலிலே வளர்ந்த மார்பிலே இரத்தின மாலை விளங்கினது.

26. தோடுழுதண் தார்வண்டும் திசையானை மதந்துதைந்த வண்டும் சுற்றி
மாடுழுத நறுங்கலவை, மயக்களிற்றின் சிந்துரத்தை மாறு கொள்ளக்,
கோடுழுத மார்பானைக் கொலைஉழுத நெடுவேலின் கொற்றம் அஞ்சித்
தாடொழுத பகைவேந்தர் முடிஉழுத தழும்பிருந்த சரணத் தானை.

இ-ள். (தான் மார்பில் அணிந்த பூ) மாலையின் (மலர்களில் உள்ள தேனை உண்ண அம் மலர்களின்) இதழ்களை உழக்கிய வண்டுகளும் (தன் திக்கு விசயப்போரில் அவ்வத் திக்கில் தன்னை எதிர்த்துத் தாக்கிய) திசை யானைகளின் மத நீரில் மொய்த்த வண்டுகளும் சூழ்ந்து பக்கங்களில் உழக்கப்பட்ட கலவைச் சந்தனம் (அது இருந்த மார்பை யானை நெற்றிச் சிந்தூரத்துக்குக் கொடுத்து அந்தச்) சிந்தூர(ம் இருந்த இட)த்தை (அது கொடுத்த மார்பிடத்துக்கு) மாறாகக் கொள்ள, (அந்த யானைகளின்) கொம்புகள் (பாய்ந்து) உழக்கிய மார்பையும் (தன்னை யெதிர்த்தாரெவரையும் தவறாது) கொலை (செய்ய அவர்களை) உழக்கிய கூர்வேலின் (துணையால் தான் அடைந்துள்ள) செயத்தை (நினைந்து) பயந்து தன்னைத் தொழுத பகை அரசர் கிரீடங்கள் அழுந்தி(யதனால் உண்டாகி)ய தழும்புகள் தங்கிய தாள்களையும் உடையானை (அநுமான் கண்டான்.)

தோடு—பூ இதழ். உழுதல்—உழக்குதல்—கலக்குதல்—நிலை குலையச் செய்தல். தார்—மாலை. துதைதல்—நெருங்குதல்—மொய்த்தல். மாடு—பக்கம். நறுமை—வாசனை. கலவை கலவைச் சந்தனம். வயம்—வலி. மாறு கொள்ள—மாறுகக்கொள்ள—பரிவருதலை பண்ண. கோடு (யானைக்) கொம்பு. (யானைக் கொம்புகள் உண்மையில் கொம்புகளாயில்லாமல் வளர்ந்த பற்களாயிருப்பதும் அதனால் தந்தமென்று வழங்குவதும் அறியத் தக்கவை) கொலை உழுத—கொலை, (செய்யப்பாய்ந்து) கிளறிய. வடி—கூர்மை கொற்றம்—வெற்றி. பின்னிரண்டடிகளில் 'உழுத' என்பது 'உழுதலைச் செய்த' என நேரான பொருளை பயவாமல் 'பாய்ந்த' 'அழுந்திய' என்றதாற்பரியப் பொருள்கள் பயந்து நிற்றல் காண்க. ஒருவகை வனப்புத் தோன்றும்படி இப்பாட்டில 'உழுத' என்பது பலமுறை பிரயோகிக்கப்பட்டிருத்தலும் காண்க.

திசை யானைகள் இராவணனை எதிர்த்து முட்டியபோது அவன் மார்பின் மாலையில் இருந்த வண்டுகளும் யானைகளின் மத நீரை உண்டு கொண்டிருந்த வண்டுகளும் கலந்தன. கலந்தவை அவன் மார்பில் அணிந்திருந்த வாசகக் கலவைச் சந்தனத்தில் மொய்ப்பனவாயின. அப்படி மொய்த்தவை, யானை மதத்தால் தாக்குண்டு மூடப்பட்ட மத்திய பாகத்துச் சந்தனத்தை அணுகமாட்டாதனவாய் அதன் சுற்றுப் பக்கங்களில் மொய்த்ததமை குறிக்கச் 'சுற்றி மாடு உழுத' என்றார்.

[அநுமான், அவனைப் பத்துத் தலைகளாலும் இருபது கைகளாலும் இராவணனென்று தெரிந்தான். தெரிந்தவன் மனத்தில் அவனைக் கொல்லும்படி கோபம் தோன்றுமுன், கண்கள் அக்கினி கக்கின, (பெரியோரைக் காண்போர் அவரைத் தொழவேண்டுமென்ற நினைவு மனத்தில் தோன்றுமுன் கைகள் குவிபடுதல் போல்.)]

27\. தோள் ஆற்றல் என் ஆகும்? மேல்நிற்கும் சொல்என் ஆம!
வாள் ஆற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடி என்
தாள் ஆற்றலால் இடித்துத் தலைபத்தும் தகர்த்தென்றன்
ஆள் ஆற்றல் காட்டேனேல், அடியேனும் அடியேனே.

இ. ள். (இவனைக் கொல்லாது விட்டுச் செல்வேனானால், என்னுடைய) தோள் வலியால் யாது பயனாம்? (என்னைப்பற்றி) இனி நிலை நிற்கும் சொல் எத்தன்மையதாம? (பழிப்பானதாம்.) (இராமனுக்கு உரிமையான) சீதையை (அவனை எதிர்த்து வென்று கைப்பற்றாமல்) வஞ்சனை (யான் கவர்தல்) செய்த இவனுடைய இரத்தின கிரீடங்களை என் காலால் (உதைத்துப்) பொடிபடச் செய்து பத்துத் தலைகளையும் உடைத்து (யான் இராமனுக்கு) அடிமை (த்தொழில்) செய்தலைக் காட்டேனானால (அவனுக்கு) அடியேனாகேன் (என்றான் அநுமான்)

தோள் ஆற்றல்—தோட் பலம். வாள் ஆற்று—வாளை ஒத்திருக்கின்ற. ஆற்றல்—ஒத்திருத்தல். உம் செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்

வான்கழும் ஆற்றல் அரிது." ஆள்—அடிமை. ஆற்றல்—செய்தல். ஆள் ஆற்றல் - அடிமை (த் தொழில்) செய்தல். ஆண் (ஆண் மகன்) ஆற்றல், ஆண்மையுமாம். "முடிதல்—கருதிய பொருள்தரல். உ-ம் அவை தாம் முடிந்தாலும் பிழை தரும்' (வள். ௬௫௮)

(இவனது) புயங்களின் வலிமை யாது பயன் படும்! நெடுங்காலம் அழிவின்றி நிற்பதான இவனது புகழ்தான் யாது பயன்படும்!!" என்பது முந்திய உரை.

[என் எசமானனுக்குத் துரோகம் செய்தவன் என் கண்ணெதிர்ப்பட்ட பின்பும் பிழைத்திருக்கவிட்டால், என் அடிமை உண்மையானதாகாது. இவனை ஒழித்து இவ் வூரையும் தொலைப்பேன். பின்பு எனக்கு எத் தீங்கு நேரினும் நேருக என்று அநுமான் நினைந்தான்.]

28. என்றாக்கி எயிறுகடித் திருகரமும் பிசைந்தெழுந்து
நின்றாக்கி உணர்ந்துரைப்பான், "நேமியோன் பணி அன்றால்,
ஒன்றாக்கி ஒன்றிழைத்தல் உணர்வுடைமைக் குரித்தன்றால்,
பின் தூக்கின் இது சாலப் பிழையாகும்" எனப் பெயர்ந்தான்.

இ-ள். (மேற் கூறியவாறு) எண்ணி (ப் போர் செய்ய) உற்சாகங்கொண்டு (கோபத்தால்) பற்களைக் கடித்துக் கைகளைப் பிசைந்து (பிறர் காணாமைப் பொருட்டுக் குறுக்கியிருந்த மேனியைப் பெருக்கி) (உயர்ந்து செய்ய உன்னிய போரைச் செய்யாமல் சிறிது பொறுத்து) நின்று (முன்னினும் அதிகமாக மனம் முயன்று ஆலோசித்து (த் தனக்குள்ளே) சொல்லிக் கொள்வானாய் '(இவனைக் கொல்லுதல் இராமன் இட்ட கட்டளையன்று; (அல்லாமலும், சீதையைத் தேடிக் கண்டு பிடித்தலாகிய) ஒரு காரியத்தில் முயன்று (இராவண வதமாகிய) வேறொரு காரியத்தைச் செய்தல் அறிவுடைமைக்குரிய செயலுமன்று. பின் (வரும் பயனை) ஆராய்ந்தால், இச் செயல், மிகவும் குற்றமுடையதாகும்' என்று (இராவணனைக் கொல்லும் முயற்சியினின்று) பின் வாங்கினான்.

முதலாவது ஊக்குதல் உற்சாக முறுதலையும் இரண்டாவதும் மூன்றாவதும் முயலுதலையும் குறித்தன. நேமி - சக்கரம். நேமியோன், சக்கரத்தை யுடையோனான திருமாலின் அவதாரமான இராமனை உணர்த்தியது. தூக்குதல்- ஆராய்தல். 'ஊக்கமுடையான்' என்ற குறளில் வரும் பேர்தல் போலப் பெயர்தல் பின் வாங்குதலைக் குறித்தது.

['நல்லொழுக்க முள்ளார் எல்லாரும் எவ்வளவு வல்லமை யுடைத்திருந்தாலும் எக்காரியத்தையும் சீர்தூக்காது செய்யார். இப்போது போர் செய்ய எழுந்த பெருங்கோபம் பிறர் அறியப் படாமல் என்னுள்ளே அடங்கிடுக. இரகுவீரனது மனைவியைச் சிறை

வைத்தவனை ஒரு புன் குரங்கு கொன்றதென்றால், அது, அவ் வீர சிகாமணியின் வில்லாண்மைக்குப் பழியாம்.' என்று நினைந்து அநுமான் அடங்கினன்.

இவன் 'சயனத்தினிய மணி' என்னும் பெண்மணி யொருத்தியும் தன்னொடு சயனிக்காமல், தனியே தூங்குவானாய், ஒரு தலைக் காமவெப்பம் கனற்றப்பட்டு வருந்துதலால், சீதை கற்பு நிலையில் உள்ளாளென்று அநுமான் அநுமானித்தான்.

பின்பு சீதையை யெங்கும் காணவில்லையே யென்று வருந்தி அவளை இராவணன் கொன்றானோ, தின்றானோ, இலங்கைக்கப்பால் எங்காயினும் ஒளித்தானோ? யாதும் தெரிகிலேன். இனித் திரும்பிப் போய் என் சொல்வேன்? என் துன்பம் யான் செத்தாலன்றித் தீராது. இராமன், யான் சீதையைக் கண்டு வருவேனென்றிருப்பான்; சுக்கிரீவன், அவளைக் கொண்டு வருவேனென்றிருப்பான்; அவர்கள் அவ்வாறிருக்க, என் செயலோ பயனின்றி யிருக்கின்றது.

அங்கதனுடியர், சீதையைக் கண்டு பிடித்தற்குச் சுக்கிரீவன் குறித்த தவணை கடந்ததனால், இறந்தொழிவோ மென்றபோது, தவணை தவறினும் சீதையைக் கண்டு திரும்புவோமாயின், அவன் கோபியானென்று அவர்களுக்குக் கூறிவந்த யான் எண்ணியதை முடிக்காமையால் என்னுயிரை முடிக்காதொழியேன். அதன் முன் செய்யக் கூடியது யாதாயினுமுளதோ என ஆராய்வேனாக. இந்தப் பெரிய இலங்கை நகரில் உள்ள எண்ணிறந்த செல்லாரையும் விடாமற் பார்த்த யான் சீதை யொருத்தியை மட்டும் கண்டிலேன் கருங் கடலைக் கடந்த யான் கவலைக் கடலைக் கடக்க மாட்டாமல் அதில் சூழ்ந்து ஆழ்ந்து அழிந்தொழிவேனோ! இராவணனைப் பிடித்து இரத்தங் கக்க அடித்துச் சீதையைக் காட்ட செய்து காணேனோ! இராவணனுக்கு விரோதிகளாகிய தேவரைச் சீதை யெங்கிருக்கின்றாளென்று வினவித் தெரிவோமென்றால், அவன் உயிருள்ளளவும் சொல்லத் துணியார் அசுரர் முதலிய அவனைச் சார்ந்தோரும் சொல்லார். வேறு எவ்வாறு தெரிவேன். கழுகரசனாகிய சம்பாதி 'இராவணன் சீதையை இலங்கையிற் சிறை வைத்திருக்கிறான். அதோ! அவளைக் காண்கின்றேன்' என்றது பொய்யாய் விட்டதே! என்றெண்ணினன்.

பின்பு, அரக்கர் இருக்கும் இடங்கள் அனைத்தையும் பார்த்து விட்டோம். சோலைகளையும் பார்ப்போமென்று இராவணன் மாளிகையை விட்டுப் புறப்பட்ட அநுமான ஒரு சோலையைக் கண்டான்.

ஊர் தேடுபடலம் முற்றிற்று.

# பழைய தனிப்பாடல்

(சேது சமஸ்தான வித்துவான் பண்டிதர்
ரா. இராகவையங்கார் கூறக்கேட்டது)

"மங்கல மங்கையராய், மன்னவர் கன்னியராய்,
மைந்தர் வயிற்றினராய், வாழ்வினராய், அதிமேல
திங்கள் நிறைந்துவரும் சேயிழையார் நடைபோல்
தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்!
கங்கையின் நன்கொழுநா! காவிரியின் கணவா!
கன்னிதன் நாடுடையாய்! சென்னியின் நாயகமே!
எங்கள் இளங்கொடிதான் உங்கள் இளம்பிறையால்
இத்தனை கோடிஇரா இப்படி வாடுவதே!"


## சரோஜனி

தமிழ் உலகமே பிரமிக்கத் தக்க ஓர் அற்புதம் வாய்ந்த காதல் ரச ததும்பிய துப்பறியும் நாவல்.

அழகே ஓர் உருவெடுத்தாற்போல் அமைந்த 10–சித்திரப் படங்கள் அடங்கியது.

### விலை ரூபா இரண்டு

குறிப்பு:—மேற்கண்ட மனோரம்பியமான உன்னத நாவல் ஆகஸ்டு மாதம் கடைசியில் வெளிவரும். அதற்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஓர் கடிதம் எழுதி தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளுகிறவர்களுக்கு தபாற் செலவு இனாம.

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி.
புஸ்தக வியாபாரிகள், 64, மன்னார்சாமி கோயில் தெருவு,
இராயபுரம், மதராஸ்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

# இந்திய தேசியக் கல்வி

ஸ்ரீயுத லாலா லஜபதிராய்

(187-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## நான்காவது அதிகாரம்

## தேசியக் கல்விப் பிரசினை.

நமது பிரசினை இருதிறப்பட்டது: முதலாவது, இப்பொழுதுள்ள தேசியக் கிளர்ச்சி புதிதாய் முளைத்தெழு முன்பு, இந்தியர் மனத்தில் குடிகொண்டிருந்த ஏக்கத்துக்கும் கவலைக்கும்; உலகமே பயனற்றது, திருத்த முடியாதது என்ற நம்பிக்கைக்கும், மூல காரணங்களை விலக்கி, அப்படிப்பட்ட பலனைத் தரும் நச்சுமரங்களை யெல்லாம் பிடுங்கி யெறிந்து அழிக்கவேண்டும். இதன் பொருட்டு, நம்முடைய புராதன சரித்திரத்தையே புனர் நிருமாணஞ்செய்து, நாம் எதிர்பார்க்கும் பெரும்பதவிக்கு நாம் யோக்கியதை உள்ளவர்தான் என்பதைத் தகுந்த சாசனங்களால் ஸ்தாபிக்கவேண்டும். இதுகாறும் பிரசுரமான தொன்னூல்களைக் கொண்டே, சிந்தனை சக்தியிலாகட்டும், காரியசித்தி யிலாகட்டும், எந்த நாட்டினருக்குமே நாம் பிற்பட்டவரன்று, நமது விரோதிகள் நம்மைத் தூற்றுவதொன்றும் தகாது என்பதை, நிலை நாட்டக் கூடும். இதை ருசுப்படுத்துவதற்காக, தற்கால நாகரிகத்தைவிட நமது பழைய நாகரிகமே மேலான தென்றேனும், ஆத்ம தத்துவ பூதத்திலும் தெய்வீக ஞானத்திலும் நமது முன்னோர்கள் மாத்திரமே சிறந்து விளங்கினர் என்றேனும், வற்புறுத்த வேண்டுவதில்லை. கழிந்த இருநூறு ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில், எந்த அம்சத்திலும் மற்றெவர்க்குமே நாம் பிற்பட்டவரா யில்லை யென்பது போதும். நமது பழைய நாகரிகம் கௌரவமானது, மேம்பட்டது, மகத்தானது; மதவிஷயம், தத்துவ விசாரணை, நீதி சாஸ்திரம, சமூக சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரங்கள், கலைகள், இவற்றி லெல்லாம் நாம் அடைந்த தேர்ச்சியானது, உலகத்திலே பண்டைக்காலத்து வேறு எந்நாட்டினர் தேர்ச்சிக்குந் தாழ்ந்ததன்று; தற்காலத்து ஞானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கினுமே, அற்பமாகத் தோன்றாது. ஆகையால், நமது பழைய நாகரிகத்தைப்பற்றி நாம்

வெள்கித் தலை குனிய வேண்டுவ தில்லை; பெருமை பாராட்டுவது பொருந்தும்; ஆயின், நமது முன்னோர்கள் அறியாத விஷயம் எதுவுமே யில்லை என்பதன்று அதன் கருத்து.

மனிதவர்க்கம் மேற்சென்று கொண்டேயிருக்கிறது. மனிதர் அறிவு பெருகிக்கொண்டே வருகிறது. மனிதர் நாளுக்கு நாள், இயற்கையை மேன்மேலும் தம் சக்திக்குட்படுத்திக்கொண்டு வருகின்றனர். நாகரிக மாளிகையின் அஸ்திபாரத்தைப் பலமாக அமைத்து, சாரத்தை உறுதிபாகக் கட்டி, கீழ் மாடிகளைச் செவ்வையாய் நிருமாணித்தவர் நாமே: உலகமெல்லாம், அதற்காக நமக்குக் கடமைப்பட்டுள்ளது. புத்திகோசாத்திலேனும் கைத்திறமையிலேனும் நமது ஜனங்கள் மற்றெவர்க்கும் கீழானவரல்லர். ஏற்ற சமயமும் சௌகரியங்களும் வாய்த்தால், உலகவாழ்க்கைப் போட்டியில், மற்றெந்த ஜனங்களுக்கும் பின்னிடாமல், நமது ஜனங்கள் நிற்கவல்லவர். பிறருடன் ஒத்துழைத்து, மக்களின் முன்னேற்றத்துக்கு நாமும் பேருதவி செய்ய வல்லவரே. நமது ஜனங்களுக்கும், நம்மை நன்கு அறியாத பிற நாட்டாருக்கும், இவற்றை யெல்லாம் எடுத்துக்கூறி விளக்குவது நமது கடமையாகும்.

தம்மைப்பற்றி இழிவாய்த் தாமே எண்ணும்படி, நமது ஜனங்களை நாம் ஒருபொழுதும் விட்டுவிடக்கூடாது; இனவேற்றுமை பற்றிப் பிறர் நம்மைத் தூற்றி இகழவோ, நாம் கீழானவர் என்று கருதவோ, இடங்கொடுக்கவும் கூடாது. நமது தலைகள் எப்பொழுதும் நிமிர்ந்திருக்கவேண்டும்; நமது சிறுவர்கள் சிறுமிகள் மனங்களில், தன் மரியாதையும் தன்னம்பிக்கையும் தழைத்தோங்கும்படி செய்யவேண்டும். எவனொருவன் தன்னைத்தானே இழிவாக எண்ணத்தொடங்குகிறானோ, அவன் இழிவை யெய்துதல் திண்ணம். இந்த முகத்தில், 'இந்தியாவுக்காகப் பரிந்து பேசுவதும், இந்திய ஆசார அநுஷ்டானங்களை நியாய நிரூபணப் படுத்திக்காட்டி, அவைகளுக்காக மன்னிப்புவேண்டுவதும் கூடாது' என்று, பெஸண்டம்மையார் கூறுவதை, நான் மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறேன். நாம் எவருக்கும் நியாயங்கூற வேண்டுவது மில்லை. எவரிடத்தும் மன்னிப்புக் கேட்க வேண்டுவது மில்லை. நேச பாவத்தில், உண்மையாக, யாராவது நமது குற்றங்குறைகளை எடுத்துக்கூறினால், நாம் அதை உகந்தேற்போம்; சந்தோஷமாய், நம்மைத் திருத்திக்கொள்ள முயலுவோம். ஆனால், சீறிச் செருக்கினால், பொதுப்படையாக எவருமே நம்மைப் பழித்துத் தூற்றுவதைச் சகிக்கமாட்டோம்; இந்த விஷயத்தில், நாம் எவ்வளவு ரோஷமுள்ளவர்களா யிருந்தாலும் மிகையாகாது.

இங்ஙனமாயினும், தற்புகழ்ச்சி, இடம்பம், நாமே எவ்விதத்திலும் சிறந்தவர் என்ற மனத்திருப்தி, முதலிய துர்க்குணங்

களுக்கு இடங்கொடுத்து விட்டதபடி, நாம் வெகு கவலை யோடி ருக்கவேண்டும். நமக்குள்ள குறைகளையும், குற்றங்களையும், நமது சமூகத்தில் அவசியமாயுள்ள திருத்தங்களையும், நம்முடைய மதக் கோட்பாடுகளும் பழக்க வழக்கங்களும் சீர் குலைந்து, அவற் றிற் சில அநாகரிகமாயிருப்பதையும், நாம் மறந்தொழுகுவோ மானால், நமது அபிவிருத்திக்குப் பெருந்தடையாகும். அவற்றின் மூல காரணங்களை ஆராய்ந்தறிந்து, நோயை வேரோடு களைந்து நீக்கும் பரிகாரங்களைச் செய்ய வேண்டும். மற்ற நாகரிக நாட்டா ரின் முன் வரிசையை அடைந்து நாமும் நிற்குமாறு, நமது மேற் செலவுக்குத் தடையாகும் பலவற்றை அழித்துத் தள்ளி, அநுகூல மாகும் புதிய ஏற்பாடுகளை நாம் செய்துகொள்வது அவசியமாகும். புராதனமாயுள்ள யாவும் குற்றங்குறை நீங்கிச் சிறந்தவை என்று எண்ணுவது தகாது. நமது முன்னோர் கொண்டிருந்த அபிப் பிராயங்கள் சில தவறென்று ருசுவாகிவிட்டது; அவற்றை நாம் திருத்தி யமைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் சென்ற வழி கள், அப்பியசித்த முறைகள் சில, பிசகாயிருந்தன; அவற்றை நாம் செவ்வையாக்கிக் கொள்ளவேண்டும். அவர்கள் ஏற்பாடுகள் சில, அவர்கள் காலத்துக்கும் நிலைமைக்கும் ஏற்றனவாயினும், தற் காலத்துக்கும் நமது நிலைமைக்கும் பொருந்ாதனவா யிருக் கின்றன; அவற்றுக்குப் பதிலாக நாம் வேறு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும். நமது முன்னோர்களைப் போலவே, அவர் களுக்கு நகல்களாக, நாமும் இருந்தால் போதாது; அவர்களை விடச் சிறந்தவர்களா யிருப்பதே நமது கோரிக்கை. அதன் பொருட்டு, நமது முன் மாதிரிகளையும் மேல் நோக்கங்களையும் நாம் திருத்திக்கொள்ள வேண்டும். இதைச் செய்து முடிக்க, நமது ஆண்மைத் தனம் முழுதும், நமது மனோ தைரியம் அனைத் தும், அவசியமாகும். இது வன்றி, நமக்குள் ஒற்றுமையும் ஒத் துழைப்பும், பலர் ஏகோபித்து வேலை செய்வதும் அவசியம். மற்றெல்லாவற்றினும் மேலாக, தன்னம்பிக்கையும், தன் மனோ தர்மப்படி செய்து முடிக்கும் சக்தியும், ஒவ்வொருவருக்கும் தனி யாகவும், பலர் கூடிய ஜன சமூகத்துக்கும், இருக்கவேண்டுவது அவசியம். பிறர் உதவியை நாம் உகந்தேற்றுக் கொள்வோம்; ஆயின், மற்றொருவர் உதவியை எதிர் பார்த்துப் பிழைப்பதென்ப தின்றி, நமக்குத் துணை நாமேதான் என்றே வாழ்வோம். தேசி யக்கல்விப் பிரசினையை இந்த மனோபாவத்தோடு ஆராயவேண்டும். சோதனை யின்றி எதையும் ஒப்பவேண்டாம்; ஒவ்வொரு விஷ யத்தை நனகு பரீக்ஷித்துப் பார்ப்போம்; பிறநாட்டார் பிற நாடு களில் எப்படிச் செய்கிறார்கள், என்ன சொலகிறார்கள், கருது கிறார்கள், என்பதைக் கவனிப்போம்; அப்பால, நாம் என்ன

செய்யவா மென்று கூடி யோசித்துத் தீர்மானஞ் செய்வோம். ஆங்கிலேயராகவோ, ஜெர்மானியராகவோ, அமெரிக்கராகவோ, ஜப்பானியராகவோ, நாம் விரும்ப வில்லை; நாம் இந்தியரா யிருக்கவே விரும்புகிறோம்; ஆனால், நமது புராதனப் பயிற்சியில் கர்வங் கொண்டவராய், அதனினும் சிறந்த மகத்தான பதவியை அடையும் அவாவுடையோராய், தற்காலத்திலே எதிலினும் எவர்க்கும் பின் வாங்காதவராய், முன்னேக்கிச் செல்லும் இந்தியர்களாயிருப்பதே, நமது கோரிக்கை.

தேசியக் கல்விப் பயிற்சி என்றால் நம்முடைய கருத்தென்ன? அந்த அந்த ஊருக்கு, மாகாணத்துக்கு மட்டும், பொருத்தமான கல்விப் பயிற்சியல்ல என்பதா? அல்லது, அந்த அந்த மதத்துக்கு, சாதிப் பிரிவுக்கு, இயல்பான ஆசார அநுஷ்டானங்களைச் சார்ந்த கல்விப் பயிற்சியல்ல என்பதா? கல்விப் பயிற்சி எவ்வாறு தேசியத் தன்மையை அடைகின்றது? கல்வியைப் புகட்டும் பாஷையா, அதைப் பராமரித்துப் போதிக்கும் ஆசிரியரா, பாடப் புஸ்தகங்களா, அல்லது லக்ஷியங்களா, அதற்குத் தேசியத் தன்மையை அளிக்கின்றன?

உண்மை, ஓர் இடத்தையோ நாட்டையோ சாதியையோ பொறுத்ததன்று. உண்மை கேவலம் உண்மையே. பௌதிக சாஸ்திரங்களும் வேதாந்த சாஸ்திரமும் உண்மையை எடுத்தோதுகின்றன. இந்தச் சாஸ்திரிகள் மேல் நாடுகளிலே கண்டு பிடித்துக் கூறும் தத்துவங்களை, கூறுவோர் இந்தியரல்லாத மேல் நாட்டாரென்பதால், நாம் அங்கீகாரஞ் செய்யாது தள்ளிவிடப் போகின்றோமா? ஷேக்ஸ்பியர், பேக்கன், கீதே, ஷில்லர், எமர்ஸன், விட்மன் முதலியோரை, இவர் இந்தியரல்லர் என்று திரஸ்கரித்துவிடப் போகின்றோமா? இந்தியர் இயற்றியதை யெல்லாம் ஐரோப்பியர் அவ்வாறு புறக்கணித்தால், நமக்கு எப்படி யிருக்கும்? நம்முடைய பழைய கிரந்தங்களில் கூறியிருப்பதைவிட எவ்வளவோ இந நாளிலே அபிவிருத்தி யடைந்திருக்கும் மருத்துவம், ரணவைத்தியம், நோயறி சாஸ்திரம், சுகாதாரம், எஞ்சினீயரிங், பூமி சாஸ்திரம், தாவர சாஸ்திரம், மிருக சாஸ்திரம் முதலியவற்றை, மேல் நாட்டார் பயிலுவன என்று, நாம் பயிலாது கைவிடப் போகிறோமா? தற்காலத்திலே தழைத்தோங்கும் மாலுமி வித்தை, வாணிகம், பாங்கிங், இன்ஷூரன்ஸ் முதலிய விஷயங்களில், நம்து உத்தேசமென்ன? நவ நாகரிக அபிவிருத்திகளைப் புறக்கணித்துப் பழைய முறைகளையே நாம் கையாளப் போகிறோமா? கடைசியாக ஆனால் அதிமுக்யமான விஷயமிது—அரசியல், குடியியல், நாகரிக சமுதாய வாழ்க்கை, இவற்றைப்பற்றி என்ன? நமது "தேசிய" துரைத்தன முறை யாது? சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமா யன்றி

தற்காலத்துக் கேற்ற புதுமுறைகளைவிட்டு, பழைய முறைகளை நிலை நாட்ட முயலுதல், காலவியர்த்தமே யாம். உதாரணமாக, தற்காலத்து அங்க கணிதம், க்ஷேத்ர கணிதம், திரிகோண கணிதம் முதலியவற்றைக் கைவிட்டு, ஸம்ஸ்கிருதத்தி லுள்ள லீலாவதி முதலிய நூல்களைப் பயிலுவது, முழு மூடத்தனமாகும். நமது அர்த்த சாஸ்திரம் முன் காலத்துக்கு ஏற்றதா யிருந்திருக்கலாம்; இக் காலத்து முறைகளோடு ஒப்பிட்டு நோக்கும் பொருட்டு, அதைப் படிப்பதும் பொருந்தும்; அதில் ஏற்றனவாய்க் காணும் முறைகளை மட்டும் சேர்த்துக் கொள்ளவுஞ் செய்யலாம்; ஆயின், உலகத்தில் ஓங்கி நடைபெறும் நவநாகரிகச் செல்வ விருத்தி முறைகளை யெல்லாம் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு, பண்டைக்காலத்து முறைகளையே இப்பொழுதும் ஸ்தாபிப்பது, முகத்தைக் கெடுக்க வெண்ணி மூக்கை யறுத்துக்கொள்வது போலாகு மன்றி வேறில்லை. ஏனெனின்,

> "பழையன கழிதலும் புதியன புகுதலும
> வழுவல கால வகையினானே."

புராதன ஆயுர்வேத சாஸ்திரம், யூநாநி வைத்திய முறைகளை மீண்டும் உயிர்ப்பித்துத் தழைக்கச் செய்ய வேண்டு மென்று, இப்பொழுது ஒரு பிரசாரம் நடக்கிறது. இந்த விஷயத்தில் எனக்கும் அநுதாப முண்டு. எனினும், தற்காலத்து வைத்திய ரணசிகிச்சை முறைகளைக் கைவிட்டு, பழைய 'ஜர்ராகி' முறையையே கையாள வேண்டும் என்பதாயின், இந்தியாவைக் கடவுளே காப்பாற்ற வேண்டும்! தற்காலத்துப் பிரசவ வைத்தியமும் சிசுபோஷணை முறைகளும் நமக்குத் தெரியாததால், ஆண்டு தோறும் குழந்தைகளும் தாய்மாரும் லக்ஷக்கணக்காய் மடிகிறார்கள். இந்த அறிவைப் பரவச் செய்யவேண்டும். உண்மையான 'தேசிய முறை' என்று சொல்லிக்கொண்டு, முற்காலத்திற் போல சிசுக்கள் ஆயிரக்கணக்காய்ப் பிறப்பதும் நூற்றுக்கணக்காய் மடிவதும், இனி நிகழ விடக் கூடாது. நமது தர்ம சாஸ்திரங்களை நாம் படித்து அறிய வேண்டியதுதான்; ஆனால் இப்பொழுது வழங்கும் பதிப்புக்களில் ஒன்றோ டொன்று பொருந்தாத, விபரீதமான, அயுக்தமான விஷயங்கள், எவ்வளவோ இருக்கின்றன. இவற்றை யெல்லாம் களைந்து நீக்கினா லன்றி, மநு, நாரதர், ஆபஸ்தம்பர் பேர்களால் வழங்கும் தர்ம சாஸ்திரங்களை, நமது சிறுவர் சிறுமிகள் வாசிக்க வொண்ணாது. இவற்றின் சாராம்சத்தைத் தெளிவா யறிந்து, அந்த ஞானத்தை அடிப்படையாக் கொண்டே, நமது புதிய ஜனசமூக வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். இதனால், இப்பொழுது இந்தியாவில் நடைபெறும் சட்டதிட்டங்களையும் பிறநாடுகளில் வழங்கும் சட்டங்களை

யும் படித்தறியவேண்டாம் என்பதில்லை. உலகத்திலே நவநாகரிக நாடுகள் பலவற்றிலும் தற்காலத்தில் காணும சட்ட திட்டங்களை யும், பொருளபிவிருத்தி, அரசியல் முறைகளையும் படித்தறிவது, நாம் நல்வழியில் முன்னேற்றம் அடைவதற்கு இன்றியமையாத தாகும். இந்த விஷயங்களை ஒவ்வொரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலேயே போதிக்கவேண்டும். இந்த அறிவு பெரும்பாடியாய்ப் பரவினால்தான், நமக்குள் தீவிரமான தேசிய வுணர்ச்சியும் சுறுசுறுப்பும் உண்டாகும். இந்த அறிவு தான் நமது ராஜீய முயற்சிகளுக்கு ஊக்கமளித்து, வழியே யுள்ள படுகுழிகளில் நாம் விழுந்து விடாமல் காத்து, நமது பொருள் வருவாய்களைப் பெருக்கி, வரவு செலவுகளை ஏற்றவாறு சம்மாளித்துக்கொள்ளும் வழியை நமக்குக் காட்டியுதவும். தவிர, தற்காலத்துப படைப்பயிற்சி, யுத்த தந்திர முறைகள் விஷயத்தில், நாம் என்ன, முன்போல் வில் அம்புகளையும் வாள் ஈட்டிகளையும் அல்லது கருநாடகத் துப்பாக்கிகளையுந் தான் கையாளப் போகின் றோமா? அங்ஙனமாயின், நாம் பாழாவது திண்ணம்.

இவற்றையெல்லாம் பற்றி நான் பேசுவதேன் எனின், இந்தி யா ஒதுங்கித் தனித்து உள்ளடங்கி வாழவேண்டு மென்று விரும் பும் சாதுக்கள் சிலர் இனனும் நமக்குள் இருக்கின்றனர். முற் காலமே நற்காலமென் றெண்ணி, இவர்கள் மீண்டும் அது நிகழ் வதை நாடி ஏங்குகின்றனர். இப்படிப்பட்ட மௌட்டியமான வெற்றுரைகள் நிரம்பிய புஸ்தகங்களை விறறு வருகின்றனர். இவ் வாறான மனோபாவம் நிகழும் கவிகளையும் கீர்த்தனங்களையும் பாடு கின்றனர். [கவி இரவீந்தரநாத தாகூர் இப்படிப்பட்டவ ரில்லை] இவர்கள் மூடர்களோ, அல்லது தேசத் துரோகிகளோ, நான் அறி யேன். இவர்களையும் இவாகள் எழுதும் நூல்களையும்பற்றி,நம்மவர் கள் விழிப்பாயிருககவேண்டும். எவ்வளவு வேண்டு மென்று விரும் பினும், எந்த நாடும், இக்காலத்தில் ஒதுங்கித் தனித்துவாழ முடி யாது. நாம் தனிமையை நாடினும், உலகம் நம்மைத தனிக்க விடாது. ஏறத்தாழ இருபதுலக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமும், உல கததின் ஜனசங்கைமொத்தத்தில் ஐந்தில் ஒருபங்கு ஜனத்தொகை யுமுள்ள ஒரு நாடு (இந்தியா) தனித்து வாழமுடியாது; பிறநாடு களும் தனிக்கும்படி விடா. நாட்டிற் பிறந்தவரே தம் தாய்நாட் டையும் அந்நாட்டின் வளங்களையும் அபிவிருத்தி செய்யத் தவறி னால், பிறநாட்டார் உட்புகுந்து அப்படிச் செய்வர். நம் நாடு நமக் கும் நம்மக்களுக்குமே சொந்தமாயிருக்கவேண்டின், பிறநாட்டார் வந்து கொள்ளையடியாமல அதைக் காக்கவேண்டின், ராஜீயத் துறைகளிலும் செல்வவிருத்தித் துறைகளிலும் மாத்திரமன்று, மனோவிருத்தியிலும் சமூக வாழ்க்கையிலுங்கூட, மற்றெந்த நவ

நாகரிக நாட்டிற்கும் இந்தியா பிற்பட்டதா யிருக்கக்கூடாது. இந்தியா; இங்கிலாந்தோ பிரான்ஸோ ஜப்பானோ அமெரிக்காவோ ஆகவேண்டாம்; இந்தியாவாகவே இருக்கவேண்டும் என்பது மெய்யே; ஆயினும், தற்கால நிலைமையில், நீராவி மின்சார சக்தி இயந்திரங்கள் இயங்கும் இந்நாட்களில், இந்நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் முன்போல அதிக வேறறுமை யிருக்க முடியா தென்பதை நாம் அறியவேண்டும். உலகமெல்லாம ஓரே குடும்ப மாகிவிட முயன்றுவரும் நாளிது. இதைத் தடுக்க எண்ணுவோர், தம் நாட்டுக்கும் மனுஷவர்க்கத்துக்குமே துரோகிகளாவர். உடல் வலியும் மூளைவலியும் ஊக்கமும் சாமர்த்தியமு முள்ள ஜனங்கள் எவரும், இந்த இயக்கம் எவ்வாறு முடியுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை; பலவீனமும் பின்னோக்கமும ஆண்மைக் குறை வும் சோர்வும் காலத்துக்குக் கேற்க நடந்து கொள்ளும் திறமை யின்மையும் வாய்ந்த ஜனங்களோ, ஒன்று நசித்து போவர், அல்லது பிறர் கொள்ளைக் குள்ளாகித் தவிப்பர்.

மனித சுபாவம் உலகமெங்கும் வேரில் ஒவறுதான். ஆசார அநுஷ்டானங்களும் பாஷையும சீதோஷ்ண ஸ்திதியுமே பேதங்க ளின் முக்கிய காரணம். இரத்த சம்பந்தமான, ஜாதி பற்றிய பேதங்கள் முக்கிய மல்ல. பாஷையினாலும் சீதோஷ்ண ஸ்திதியி னாலும் மனிதர்களுக்குள் உண்டாகும் வித்தியாசங்கள் நீங்காதி ருக்குமாயினும், பழக்க வழக்கங்களினாலும், அரசியல் செல்வ விருத்தி முறைகளினாலும் ஏற்படும் வேற்றுமைகள், நாளுக்கு நாள் குறைவது திண்ணம். மக்கள் எல்லோரும் ஓரே வர்க்கமாத லால், சமீபகாலத்தில், உலகமெல்லாம் ஐக்கியப்பட்டு, நாகரிக ஒற் றுமை ஏற்படு மென்பது, பல நாடுகளில் பிரயாணஞ் செய்வோருக் குத் தெளிவாய் விளங்குகின்றது நியூயார்க் லண்டன் பாரிஸ் பெர்லின் டோக்கியோ சிக்காக்கோ முதலிய நகரங்கள் ஒவ்வொன்றும், தம்மில்தாமே ஒரு சிற்றுலகம் போன்று காண்கின்றன. எல்லாச் சாதியினரையும் எல்லா நாட்டின ரையும் எல்லா மொழியாளரையும் பல்வேறு பயிற்சியினரையும் இந்த நகரங்களில் சேர்ந்து காணலாம். மேல்தோலின் நிற மட்டும் அதிகம் மாறிக் காணாதவரையில், இந்நகரங்களின் வீதிக ளில் காணும் மனிதன் ஒருவன், எந்நாட்டினன் எச்சாதியி னன் எம்மொழியாளன் என்பது மேற்பார்வைக்குத் தெரிவதில்லை. முகலக்ஷணங்களைக்கொண்டு, சீனத்தானை, ஜப்பானியனை, ஒருவேளை கண்டு பிடித்து விடலாம்; இதிலுங்கூடத் தவறுகள் நேர்ந்து விடு கிறது. ஐரோபபியரினின்றும் வித்தியாசமாய்த் தோன்றாத, ஐரோப்பிய உடைதரித்த, சீனத்தார் ஜப்பானியர்களை, நான் அமெ ரிக்காவில் கண்டிருக்கிறேன். ஜப்பான் தேசம் எவ்வளவு விரை

வில் ஐரோப்பர்வைப் போலாகிவிட்டது என்பதை நினைத்தால், ஆச்சரியமுண்டாகிறது. ஐரோப்பியரது நடை உடை பாவனைகளைத் தழுவி வரும் ஜப்பானியர்களை நாம் குறை கூறலாம்; ஆயினும் விஷயத்தை மறுக்க வொண்ணாது; எங்குமே இப்படித்தான் மாறி வருகிறது.

ஒரே மாதிரியான உலகம், பார்க்க விகாரமாயிருக்குமென்பது மெய்யே; எனினும், இன்னும் இரண்டு நூற்றாண்டுகளில், மனிதர்க்குள் இப்பொழுது வெளிப்படையாய்க் காணும் வேற்றுமைகள் மிகக்குறைந்து விடுமென்பது திண்ணம். வெளித்தோற்றத்தில் மாத்திரமன்று, மனோவிருத்தியிலும் வாழ்க்கையிலுங் கூட, மனிதர்க்குள் பேதங்கள் குறைந்தே தீரும். இவ்வண்ணம வேற்றுமைகள் குன்றி, ஒற்றுமையும் பரஸ்பர அந்நியோந்நியமும் மிகுவதுதான் உத்தமம் என்பதே, என் அபிப்பிராயம். ஐரோப்பாவிலே இப்பொழுது காணும் பலதிறப்பட்ட நாகரிகங்களும், ஒன்றோடொன்று கைகுலுக்கி, ஒருமுகப்பட்டுவிடு மென்பது தேற்றம். ஆசியாவுக்கும் இது பொருந்தும்: அராபியர்களும் பாரசிகர்களும் ஹிந்துக்களும் சீனர்களும் ஜப்பானியரும், தமக்குள் உள்ள வேற்றுமைகளைவிட்டு, ஒற்றுமைகளைப்பற்றியே அதிகம் அளவளாவிப் பேசும் நாள் நெருங்கிவிட்டது. நான் கூறுவது விந்தையாய்த் தோற்றலாம், இளப்பமாய்த் தோற்றலாம் ஆயினும், ஆசியாவின் இப்படிப்பட்ட ஒற்றுமை, ஐரோப்பாவினால், ஐரோப்பிய பயிற்சி மூலமாய்த்தான். ஏற்படப் போகிறது, ஐரோப்பாவை அஞ்சியே ஆசியா ஒன்றுகூடும்; அப்பால், ஆசியாவை அஞ்சி, ஐரோப்பாவும ஆசியாவும் ஒருப்படவே, உலகமே ஒன்று பட்டதாம். ஐரோப்பாவின் குழந்தையே அமெரிக்கா; ஆசியாவின் குழவியே ஆபிரிக்கா; அவ்விரு கண்டங்களும், இவ்வண்ணம் உலகம் ஐக்கியப்படும் முயற்சியில், தத்தம் வழியில் துணை நின்றுதவும். உலக யுத்தத்திலிருந்து, அல்லது யுத்தங்களிலிருந்து, உலக ஒற்றுமை விளையப் போகிறது.

ஐரோப்பிய பாஷைகள் இலக்கியங்கள் சாஸ்திரங்கள், இவற்றின் பயிற்சியையும், இவை பரவுதலையும் இந்தியாவில் குறைப்பது, மூடத்தனமும் பைத்தியமுமாகும் என்பது என் துணிவு. உண்மையில், நாம் இதுவரை அடைந்துள்ள அப்பயிற்சியும் அறிவும் போதாது. சில காரணங்களால் இதுவரை நாம் விலகி நின்று விட்டோம். இந்தியன் ஒவ்வொருவனும் ஓர் ஐரோப்பிய பாஷையேனும் அறிந்து, ஐரோப்பியக் கருவிகளைக் கையாண்டு, ஐரோப்பிய இயந்திரங்களைச் சுலபமாய் நடத்தும்படி நம்மால் வியன்றமட்டும் முயன்று, அதற்காகப் பாடுபடவேண்டும். ஐரோப்பாவும் உலகமும்நம்மிடம் எவ்வளவோ கற்றுள்

என ; அவர்கள் அறிவைப் பெருக்கி, பிறர்க்கு நாம் அதைப் புகட்டுமாறு, அவர்களிடம் முதலில நாம் சில விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் நமக்கு எவ்வித அவமானமும் மில்லை.

(தொடரும்)

# பலதுறைப் பொறுக்குமணிகள்

(245-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## I. மதவிஷயக் குறிப்புக்கள்

8. தீண்டாச் சாதியாரும் கிறிஸ்துமதமும்.—நம்ம சென்னை மாகாணத்தில், தோர்ணக்கல் பிஷப்பின் மதப்பிரசாரத்துக் குட்பட்ட எல்லையில் மாத்திரம், 1,20,00, (தீண்டாச்சாதி) கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர்; இவர்கள் தொகை, ஆண்டுதோறும் பன்னீராயிரம் விகிதம் அதிகரித்து வருகின்றது. ஆரம்பக் கல்வி புகட்டும் பள்ளிகள் ஓராயிரமும், மாணவர் வசதிப் பள்ளிகள் (Boarding Schools) பதின்மூன்றும், இரண்டு ஹைஸ்கூல்களும், ஒரு காலேஜூம், 24,000 வித்தியார்த்திகளுக்குக் கல்வி புகட்டி வருகின்றன; இவைகளில், உபாத்திமார் 1000 பேர். இவர்கள் அனைவரும் தீண்டாச் சாதியினரே. அதே வகுப்பினைச் சேர்ந்த 80 மதபோதகர்கள், இக்கூட்டத்தாரின் மோக்ஷ விஷயத்தைப் பரிபாலித்து வருகின்றனர்; இவர்கள் எல்லோர்க்கும் அத்தியக்ஷராய் விளங்கும் பிஷப்பும், ஓர் இந்தியரே. இதைக் கண்டு ஹிந்து மதஸ்தர்கள் பொறாமை கொள்ளக்கூடும், ஏனெனில், இவர்கள் எல்லோரும் ஆதியில் ஹிந்துக்களாயிருந்தவரே. இவர்கள் கிறிஸ்தவரானது குற்றமெனின், யார் குற்றம்?

9. ஹிந்துக்களும் முஸ்லிம்களும்.—அலிகர் நகரத்து முகம்மதிய கலாசாலையின் தலைவரா யிலங்கின ஸர் தியோடோர் மாரிஸன் என்னும் ஆங்கிலேய மேதாவி, இப்பொழுது இந்திய சுயராஜ்யத்துக்கும், இந்தியர்களுள் ஒற்றுமைக்கும் முக்கியமான பெருந் தடையா யிருக்கும் ஹிந்து-முஸ்லீம் மனஸ்தாபமானது, மொகலாயர் ஆட்சி தொட்டு வருவ தென்று அபிப்பிராயப்படுகிறார். ஆக்பர், ஜிஹாங்கிர், ஷாஜிஹான் சக்கரவர்த்திகளின் மனத்தாராளமும், ராஜ்ய தந்திரமும் மாறி, ஔரங்கஜீப் சக்கரவர்த்தி ஹிந்துக்களை இமிசிக்கத் தொடங்கியதே, இந்த மனஸ்தாபத்தின் அடிவேராகும். தேசிய உணர்ச்சியின் அடிப்படை, ஒரு சமூகத்தார் எல்லோரும் ஒத்துப் பகிர்ந்து அநுபவித்த சுகதுக்கங்களின், வெற்றி தோல்விகளின், ஞாபகமேயெனின், ஹிந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் பொதுவான அப்படிப்பட்ட

ஞாபக மொன்றும் இந்திய சரித்திரத்தில் காணப்பட வில்லை ஆதலால், இவவிரு வகுப்பினரும் ஒன்று சேர்வது கஷ்டமாயும், பொறாமை கொண்டு ஒருவரை யொருவர் துவேஷிப்பது இயல்பாயு மிருக்கிறது. ஔரங்கஜீப் மூட்டிய தீ, இன்னும் புகைந்து கொண்டேயிருக்கிறது ; பின் வந்தவர்கள் எவரும் அந்தத் தீயை மீண்டும் ஊதிவிட வில்லை, அதன் மீது நீரைப்போல எண்ணெயை ஊற்ற வில்லை யென்றும், சொல்ல முடியாது. ஹிந்துக்களும் முஸ்லீம்களும், தங்கள் பொது நலத்தைத் தாமே யுணர்ந்து, ஒன்று சேர்ந் துழைத்தா லன்றி, இருவருமே அடிமைகளாய்த்தான் இருப்பர்.

## III. சொற்பொழிவுகள்

8. இந்தியா மந்திரியின் சரித்திர ஞானம்–"இந்தியன் ஸோஷ்யல் ரிபார் மர்" பத்திரிகை எழுதுவதன் சாராம்சம் :—பெர்கன்ஹெட் பிரபு மதுவிலக் குச் சங்கத்தைச் சேர்ந்தவ ரில்லை; எனவே, இந்திய விஷயங்களைப்பற்றிக் கடைசி முறை ஒரு விருந்துண்டு அவர் பேசியபோது கூறியவற்றை, மித மிஞ்சி உண்டு (குடித்த) ஒருவன் பிதற்றலாகத் தள்ளி விடுவதே சரியெனத் தோற்றுகிறது. படிப்பும் சுயபுத்தியு முள்ள ஆங்கிலேயன் எவனுமே, இந்தியா மந்திரி சொன்னதுபோல, "இந்தியாவின் நாகரிகத்தை அழித்து விடக்கூடிய பெருங்குழப்பத தறுவாயில், நமது கூரிய வாளால் அதைக்காப் பாற்றும் பொருட்டே, சில, நூற்றாண்டுகளுக்குமுன் நாம் (ஆங்கிலேயர்) இந்தியாவுக்குச் சென்றோம்" என்று கூறியிருக்கமாட்டான். இது சரித்திர மன்று, பொய்க் கதை என்பது தெளிவு ; ஆதலால், பெர்கன் ஹெட் பிரபு இப்படிச் சொல்லி யிருந்தால், அவர் தன்னினைவு தப்பியே பேசியிருக்க வேண்டும். ஆங்கிலேயர், இந்திய நாகரிக சமரக்ஷணையின் பொருட் டன்றி, வியாபார நிமித்தமே வநதவர் என்பதை, ஒவ்வொரு பள்ளிப்பையனும் அறிவான் இந்தியாவிலே ஆங்கிலேயர் ஒரு சக்கராதிபத்தியத்தை நிலை நாட்டியது, தஙகள் வாள் வலியினு லன்று, இந்தியர் வாள்வலியின் உதவி யினுல் தான். அதே இந்தியர் வாள் வலியைக் கொண்டுதான் இன் றும் அதை ஆண்டு வருகின்றனர். அந்த வாளை இந்தியாவே வீசத் தொடங்கும் போது, இந்தியாவின் உடைமையைத் திருப்பிக் கொடுத்து விட மாட்டேன் என்று மறுததுவிட, பெர்கன்ஹெட் பிரபு துணிய மாட்டார், அவரால் மறுக்கவும் முடியாது. ஆகையால், அஹிம்சை வழியில் தான் சுயராஜ்யத்தை நாடவேண்டு மென்று இந்நாட்டில் எண்ணி யொழுகு வோர்களைக் கேலிபண்ணி அதட்டுவது போலவே, பிரபுவின் பேச்சைக் கருத வேண்டும். ராஜீயகுழப்பத்தைவிடப் பெரிய கேடுகளும் ஒரு நாட்டு க்கு நேரக்கூடுமாதலால், இவ்வண்ணம் லண்டனிலிருந்து, (பெர்கன்ஹெட் பிரபுவைப் போன்ற) ராஜ தந்திர விநோதர்கள் ஒருவர் பின் ஒருவராய் இந்தி யாவை ஆள்வாராயின், இந்தியரின் பொறுமையும் விரைவில் அற்றுப்போய் விடும் அவமானமான, இறுமாப்பு மிகக, பொய்யான இந்த வார்த்தை களைப் பேசும்போது, பெர்கன்ஹெட் பிரபு சுயபுததியி லிருந்தாலுமே சரி, சிறிது உன் மதத தசையி லிருந்தாலுமே சரி, இதனால இந்தியரின் மதிப்பை அவர் முழுதும் இழந்து விட்டார். ஆகையால், பிரிட்டன்இந்தியா என்னும் இருநாடுகளின் க்ஷேமலாபங்களையும் கருதி,இப்படிப் பேசக்கூடிய பிரபுவை, வேறொரு உத்தியோகத்துக்கு அனுப்பி விடுவதே, பிரதம மந் திரி பால்ட்வினின் கடமையாகும். சீனு எகிப்து இந்தியா, இம் மூன்று

நாடுகளிலும் மாணவர்களே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் முக்கிய விரோதிக ளென்று, பெர்கன்ஹெட் பிரபு கூறினார்; மாணவர்களை எதிர்த்துப் போராட இவர் விரும்புகிறார் போலும்-பிராசீன நாகரிகப் பிரதேசங்களான இம்மூன்று நாடுகளிலு முள்ள யௌவன மலர்கள் (மாணவர்கள்) இவ் வண்ணம் வெறுக்கும் சக்கிராதிபத்தியத்தில், எல்லாம் சரியாயிருக்க முடி யாது, ஏதாவது கெட்டிருக்க வேண்டு மென்பது நிச்சயம்.

## V. சில்லறைக் கலம்பகம்.

18. கடல் கொண்ட கதைகள்—பூமி முழுதையும், அல்லது பூமியிற் சில பாகங்களைக் கடல் கொண்ட கதைகளைப் பழைய நாகரிக வரலாறுகள் பலவற்றில் காணலாம். பைபிளிலே வரும் நோவா காலத்துப் பிரளயக்கதை பிரசித்தி பெற்றது; ஆரியர்களின் யுகாந்தகாலப் பிரளயங்களை யன்றி, குமரிக்குத் தெற்கே யிருந்த ஒரு பெரிய கண்டத்தைக் கடல் கொண்ட கதையும், பூம்புகாரைக் கடல் கொண்ட கதையும், சங்க நூல்களில் காணலாம். இப்பொழுது, தென் அமெரிக்காவில் யுகட்டான் என்ற பிரதேசத்திலே அகப்பட்ட சாஸனங்களி லிருந்து, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் முன்பு ஒரு மிகப் பெரிய கண்டமிருந்து கடல்கொள்ளப் பட்டதாகத் தெரியவருகிறது. இது நிகழ்ந்தது, பதினோராயிரம் ஆண்டுகளுக்கு முன் என்பர். இந்த யுகட்டான் பிரதேசத்திலே, ஐம்பதினா யிரம் ஜனங்கள் வரை வாழ்ந்து வந்து, பின்பு சிதைவுற்றுப் புதையுண்டு மறைந்து போன 172 நகரங்களின் பாழிடங்கள் அகப்பட்டிருக்கின்றன.

19. கடியாரங்கள்—பிரான்ஸ் தேசத்திலே ரூவன் நகரத்தில் இன்று வரை ஒழுங்காய்த் தவறாமல் மணிகாட்டிக் கொண்டு வரும் ஒரு கடியாரம், ஜகான்டி பெலோ என்பவனால், 1389-ம் வருஷத்தில்—அதாவது, 536 ஆண்டுகளுக்கு முன்—செய்யப்பட்டது. 1714-ம் வருஷத்தில், அதற்கு ஒரு தொங்கட்டம் சேர்க்கப்பட்டது. இந்தக் கடியார மகரிஷி, மணி, அரைமணி, கால் மணிகள், தவறாமல் அடித்துக்கொண்டு வருகிறது!

20. உணவுக் கேற்ற மீன்கள்—600 அடி ஆழத்திலும் கீழாக வாழ்வ தில்லை என்று துலங்குகிறது.

21. மரம் வெட்டுவோர்—டென் மார்க் தேசத்துக் காடுகளி லுள்ள மரங்களை வெட்டுவோர், அதே விஸ்தீரணத்துக்கு மீண்டும் மரங்கள் நட்டுப் பயிராக்க வேண்டு மென்பது சட்டம்.

22. வளர்ச்சியில் வேகமானது—120 அடி உயரம் வரை ஓங்கி வளரும் ராக்ஷஸ மூங்கில, நாள் தோறும் ஓரடி விகிதம் வளருகிறது.

23. நத்தை முட்டைகள்—முதிர்ந்து வளர்ந்த ஒரு நத்தை (Oyster) 90 லக்ஷம் முட்டையிடும்.

24. குப்பை, கூளம், அழுக்குகள்—இவற்றைச் சேர்த்துக்கூட்டி வேண்டியபடி விநியோகஞ் செய்வதில், இங்கிலாந்திலுள்ள ஸ்தல ஸ்தாபனங் கள் (முனிஸிபாலிடிகள் முதலியன), ஆண்டு தோறும், 80 லக்ஷம் பவுன் வரை செல விடுகின்றன; இதில, வீதிகளைச் சுத்தஞ் செய்து தண்ணீர் துளிக்கமட்டும் 40 லக்ஷம் பவுன் செலவாகிறது.

25. பூனைகள்—நம்மை ஆண்டுவரும் பிரித்தானியர் நாட்டிலே, மொத்தம் 7 லக்ஷம் பூனைகள் இருக்கின்றனவாம். நம்ம நாட்டிலோ, 32 கோடி (இருகால்) பூனைக ளுண்டு. நாமே பெரியவர்!

26. வெள்ளிப்பாத்திரங்களை விளக்க—காகிதத்தை வெள்ளைச்சாம் பலாகும்படி பொசுக்கி, அந்தச் சாம்பலைக்கொண்டு துணியினால் துடைத் தால், வெள்ளி பளபளப்புறும். பித்தளை பளபளப்பு நீங்காம லிருக்க, துலக்கிய பின்பு தோல் சீவிய பச்சை உருளைக்கிழங்கை மேலே தேய்க்க வும்.

27. மேலையர் நாகரிகம்—ருஷிய—ஜப்பானிய யுத்தம் முடிந்து, ஜப் பான் வெற்றி பெற்றவுடன், பிரான்ஸ் தேசத்து மந்திரியானவர் ஜப்பானிய கான்ஸல் மோடோனோ பிரபுவிடம் முகமன் கூறிப் புகழ்ந்தனராம். அப் பொழுது ஜப்பானியப் பிரபு பதில் சொன்னதாவது: "எங்கள் நாகரிகப் பயிற்சியிலே ஈடுபட்டு, ஞானிகளையும் கவிவாணர்களையும் சிற்பிகள் ஓவியர் களையும் மாத்திரம் உற்பவித்து வரும வரையில், நீங்கள் (மேலையர்) எங்களைக் காட்டு மனிதராகவே கருதி வந்தீர்கள்; இப்பொழுது நாமகளும் கொலைத் தொழிலைக் கற்றுக்கொண்டவுடன், எங்களை 'நாகரிகர் என்று புகழ்ந்து போற்றுகிறீர்கள்'"

28. மேலையர் சீலமும் நியாய உணர்ச்சியும்—குடியாட்சிக்கும் சகோதர பாவத்துக்கும் குருபீடமாய் விளங்கும் அமெரிக்க ஐக்கிய மாகா ணங்களிலே, சென்ற 30 ஆண்டுகளில், 480 நீகரவர் (கறுப்பர்) வரையில், வெள்ளைப் பெண்களைக் கற்பழித்ததற்காக, நியாயசபையின் தண்டனைப்படி யன்றி, ஊர்ப் பொது வெள்ளை ஜனங்களாலேயே குரூரமாய் இமிசித்துக் கொல்லப்பட்டனராம் நீகரவர் காமப் பிரமத ரென்று எண்ண வேண்டா. அதே மாகாணங்களில் ஒரு பட்டணமான ந்யூயார்க்கில் மாத்திரம், இரண்டு வருஷங்களில் மட்டும், 480 வெள்ளையர்கள், பெண்களைப் பலாத்காரமாய்க் கற்பழித்த குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர், இவர்களுக்கு அப்படிப் பட்ட தண்டனையில்லை; நியாயப்படி, சிறையோ அபராதமோதான் விதிக்கப் பட்டது.

29. இடி முழக்கம்—பூமண்டல மெங்கும் சீதோஷ்ண ஸ்திதியும் பரு வங்களும் ஒரே மாதிரி யில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். ஒரு பிர தேசத்தில் மழைக்காலமா யிருக்கும்போது, வேறோரிடத்தில் கொடிய வெய்யிலும், மற்றோரிடத்தில் சூறைக்காற்றும், பிறிதோரிடத்தில் கடுக் கும் பனியுமா யிருக்கிறது. மின்னலோடுகூடிய இடிமுழக்கத்தைப் பற்றிப் பேசுமிடத்து, வெவ்வேறான மூவாயிரம் ஊர்களில் இதைக் கவனித்துக் கணக்குவைக்கும் ஆராய்ச்சி நடந்து வருகிறது. இப்படி யாராய்ந்து பார்த்த தில், பூமி முழுமையும் எடுத்துக்கொண்டால், பூமியிலே, நொடிக்கு நூறு விகிதம், மணிக்கு 360 000 மின்னல்கள் எப்பொழுதும் மின்னிக்கொண்டி ருக்கின்றன. ஒவ்வொரு நாளும், சராசரி, 44,000 இடிமுழக்கங்கள், பூமியில் நிகழ்கின்றனவாம்; ஒவ்வொரு வருஷமும் 160 லக்ஷத்துக்குக் குறைவில்லை. சாவகத்தீவு தான் (ஜாவா) பூமியிலே இடிமுழக்கம் அதிகமாய் நேரும் பிர தேசம்

30 பாப்பி அல்லது கசகசாச் செடி— இதிலிருந்துதான் அபினி உண்டாக்கப்படுகின்றது. இந்தியா மொத்தம், 1922-ம் வருஷத்திலே, இந் தச் செடி, 205,000 ஏகரா பூமியில் பயிர் செய்யப்பட்டது. இந்தியாவில் செலவாவதுபோக, அந்நிய நாடுகளுக்கு ஒராண்டிலே ஏற்றுமதியாகும் அபினிமட்டுமே, சுமார் 268 லக்ஷ ரூபா விலைமதிக்கப்படுகிறது.

31. ஜப்பானின் துரைத்தன அதிகாரிகள்—ஜப்பானிய உத்தியோ கஸ்தர், துரைத்தனத்தில் சம்பளம் பெறுவதன்றி, சக்கரவர்த்தி (மிக்காடோ)

யின் அரமனைப் பொக்கிஷத்திலிருந்து, சம்பளத்துக்குச் சமமான உபயம் பெறுகின்றனர். ஆயினும் என்ன? இவவிரு வரும்படியும் சேர்ந்து, நம் இந்தியாவில் உத்தியோகஸ்தர் பெறும் சம்பளத்துக்கு உறையிடவுங் காணாது. உதாரணமாக, பிரித்தன், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற முதல்தரச் சுயாதிகார நாடான ஜப்பான்தேசத்து முதல் மந்திரி (உத்தியோக வர்க்கத்தின் தலைவர்) யானவர், சம்பளமும் ராஜ உபயமுமாகக்கூடி, மாதம் மூவாயிரம் ரூபாதான் பெறுகிறார். சென்னை மாகாணத்தில் மட்டும், மூவாயிரத்துக்கு மேற்பட்ட சம்பளகாரரை டஜன் கணக்காய் எண்ணலாம். நாம் எவ்வளவு மேற்பட்டவர்கள் என்பதை இது நன்கு விளக்க வில்லையா?

# மாதர் பகுதி

## ஹிந்து ஸ்திரீகள்

(252-ம் பக்கத்தின் தொடர்ச்சி - ஓர் இந்திய ஸ்திரீ எழுதியது)

சிலர் இராத்திரியில் எல்லா வேலையுமாகவிட்டு, படுக்கைக்குப் போகும்பொழுது, தங்கள் பெண்டாட்டிகளுக்குத் தாங்களே படிப்புச் சொல்லிக் கொடுத்தும்; தங்கள் பெண் குழந்தைகளுக்கு வாத்தியார் வைத்துப் படிப்பித்தும் வந்தார்கள். நெடுநாளாக ஸ்திரீகளை அடிமைகள் போல் நினைத்து நடத்தி வந்த புருஷர்களுக்கெல்லாம், இதைப் பார்த்து ஆக்கிரகம பொங்கிற்று. 'இந்த மாதிரி அநியாயமுண்டா! பெண்கள் என்றால் அடங்கி ஒடுங்கிப் பெரியவர்கள் சொற்கேட்டு, வீட்டிலுள்ள வேலைகளைச் செய்து கொண்டிருப்பதுதான் அவர்கள் கடமை' என்றும்; 'பெண்களைப் படிக்கச் சொல்கிறவர்கள் நீசபாஷையைக் கற்றதனால் வந்த அனர்த்தம் இது' என்றும; 'பெண்கள படித்தால் வியபசாரிகளாகி விடுவார்கள்' என்றும்; 'படித்திருந்தால் கள்ளப் புருஷர்களுக்குக் கடிதம் எழுதத் தெரிந்துவிடும்' என்றும்; 'பெண்கள் படித்து உத்தியோகம் பண்ண, புருஷர்கள் அடுப்பூதப் போகிறார்கள்' என்றும்; 'எல்லாம் கலிகாலம், கலிமுற்றிவிட்டது, அதனாலதான் பெண்கள் வெட்கம் காணமில்லாமல் படிக்கத் தலைப்பட்டு விட்டார்கள்' என்றும், வாயில் வந்தபடி, பலர் பலவிதமாய்ப் பேச ஆரம்பித்தார்கள்.

புருஷர்களே இப்படித் தூற்றவே, மௌட்டியமும் பொறுமையு முள்ள மாமிமார்களைப் பற்றிக் கேட்பானேன். 'எங்

கள் பிள்ளைகள் பெண்டாட்டிகளைப் படிப்பித்து, உத்தியோகத்துக்கு அனுப்பப் போகிறார்கள்' என்று சிலரும்; 'இவர்களுக்குத்தான் கலெக்டர் வேலை வைத்திருக்கிறதாம்; அதற்குப் போவார்கள்' என்று சிலரும்; சிலர், 'பெண்டுகள் படித்து உத்தியோகத்துக்குப் போகவிட்டு விட்டு, புருஷர்கள் அடுப்பூதிச் சமைப்பார்கள்' என்றும்; சிலர், 'இப்பொழுதே பெண்கள் ஆமுடையான் உத்தியோகத்துக்கு வந்தது தங்கள் அதிர்ஷ்டந்தானென்று நினைத்து, மாமிமார்களை மதியாமல், கர்வமடைந்து, தலைகால் தெரியாமல் நடக்கிறார்கள்; இவர்கள் படிக்கவுஞ் செய்து விட்டால், வேறு வினை வேண்டியதில்லை; நாம்தான் அவர்கள் சொலபடி கேட்க வேண்டும்' என்றும், எல்லாரும் கூடிக்கூடி, ஆற்றிலுங் குளத்திலும் வம்பளந்தார்கள். பெண்களைப் படிப்பித்து, அவர்களுடைய அறியாமை என்னும் இருளைப்போக்கி, நம்மைப்போலாக்கவேணுமென்று முயற்சித்த புருஷர்கள், யார் எபபடி வம்பளந்த போதிலும் காதில் வாங்காமல்; பகலில் தாங்கள் வேலைசெய்து இரவில் இளைப்பாயிருக்கும்பொழுதுகூட, தங்கள் சிரமத்தைப் பார்க்காமல் விழித்திருந்து, தங்கள் பெண்டாட்டி படுக்க வரவிட்டு அவளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து விட்டுத்தான் தாங்கள் தூங்குவது என்று, ஒரு கடமையாக ஏற்படுத்திக்கொண்டார்கள். படிப்பில்லாப் பெண்டாட்டியுடன் எப்படி, எத்தனை நாளைக்குத் சந்தோஷமாய் வாழமுடியுமென்று வற்புறுத்திப் படிப்புச் சொல்லிக் கொடுத்தார்கள். பெண்களும், தங்களுக்காகப் படிப்பதில் சிரத்தையும் ஆசையுமில்லாவிட்டாலும், தங்கள் கணவனிஷ்டத்தை நிறைவேற்ற எண்ணி, பகலெல்லாம் வேலைசெய்து, இராத்திரியில் ஒருத்தருக்குந் தெரியாமல், தன் கணவனிடத்தில் படிக்கும்பொழுதுகூட யாருக்கு எங்கே தெரிந்து விடுமோ என்று பயந்து, படித்து வந்தார்கள். அதுகூட வீட்டிலுள்ளவர்களுக்குப் பெரிய குற்றமாகி, கண்ட கண்ட இடமெல்லாம் இதே பேச்சாக வம்பளந்தார்கள். இரவில் படித்ததை மறுநாள் இரவில் ஒப்பிக்க மத்தியானத்தில் படிப்பதோ பெரிய குறறம்; படியாவிட்டாலோ, இரவில் கணவன் கேட்டதற்குப் பதில் சொல்லத் தெரியாமல், ஆவுக்கும் காவுக்கும் வித்தியாசக் தெரியாமல் விழிக்கவேண்டியதாயிற்று. இப்படி, உரலுக்கு ஒரு பக்கத்தில் இடி, மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி என்பதுபோல், வீட்டில் எல்லாருடைய கேலிக்கும் ஊர் வம்புக்கும் பயந்து படியாதிருந்தால், புருஷன், 'என் சிரமத்தைக் கூடப் பார்க்காமல். படிப்பிலுள்ள ஆசையினாலும், ஸ்திரிகளுக்குள்ள மௌட்டியத்தைபபோக்கி புத்தியுடனிருக்கவேணுமென்று பார்த்தால், அதற்கு இஷ்டமில்லாமல், அவள் அப்படிக் கேலிபண்ணுகிறாள், இவளிப்படி வம்பளந்தாளென்று சாக்குச் சொல்கிறாய்; உனக்கு

இஷ்டமும், என் ஆசையைத் தீர்க்கவேணு மென்ற எண்ணமு மிருந்தால், யார் எப்படி வேணுமோ சொல்லிக்கொண்டிருக்கட்டு மென்று, படித்தால்தான் படிப்புவரும். ஸ்திரீகளும் படித்து, எங்கள் கூடச் சேர்ந்து வாசிக்கும்படி யிருந்தால், ஸ்திரீ புருஷன் இருவரும் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கலாம்' என்று சொல்லி, வருத்தப்பட்டுக்கொள்கிறுன்.

தினமுள்ள வேலைகளைச் செய்துவிட்டு, இதற்கு முன் தினம் தூங்குகிற நேரத்தில், ஒருவருக்குத் தெரியாமல், புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தால் போதும்; உடனே மாமிக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் எப்படித்தான் தெரியுமோ; உடனே அவளிடத்தில்போய், சர்வ ஆஸ்தியும் கொள்ளை போனது போல் ஆங்காரம் பொங்கியோ, 'அந்த வற்றலை உலர்த்த வேணு மென்று சொன்னேனே, சிரகத்தில கல்லிருக்கிறது பொறுக்க வேணு மென்று சொன்னேனே, அதொன்றுஞ் செய்யவில்லை, படிக்க வந்து உட்கார்ந்தாய் விட்டது! இப்படித்தான் வீட்டுவேலைகளெல்லாம; விளங்கிப்போய் விடும், இப்படி யிருந்தால்! உத்தியோகங்களெல்லாம் இவர்களுக்குத்தான் வைத்திருக்கிறது'என்று, வாயில் வந்தபடி சொல்வதனுல், இனிமேல் சென்மத்துக்கும் புஸ்தகத்தைக் கையிலெடுக்கவேண்டாம், வீட்டிலுள்ள வேலை எல்லாஞ் செய்துவிட்டு, வெறுமெனே யிருந்தால்கூட, ஒரு அறையில் தூங்கவாவது செய்யவேணு மென்று தோணும்படி, செய்து விடுவார்கள். இந்த ஸ்திதியில், படிப்பவர்களுக்குள் சில பேர்களுக்கு, இந்த வார்த்தை கேட்டுக்கொண்டதுதான் கிடைத்தது; படிப்பில் ஒரு பிரயோசனமு மில்லை. சில ஸ்திரீகள், யார் எப்படிச் சொன்னலும் கவனியாமல், தைரியமாய்ப் படித்ததினுல், அவர்களுக்குப் புருஷர்களைவிட நன்ருய்ப் படிப்பு வருகிறது, என்று சொல்லும்படி படித்து, புருஷர்களுடன் சேர்ந்து கதைகள் கவிகள் வாசிக்கும்படி, படிப்பில் தேறினுர்கள்.

(தொடரும்)

# இயற்கை ஆராய்ச்சி

1. புருக்கள்—பலவகைப் படும்; பறக்கும் சக்தியும் ஞாபக சக்தியும் அதிகமுண்டு. நாலுமாதக் குஞ்சா யிருக்கும்பொழுது ஒரு புருவை விலைக்கு வாங்கி, அறிமுக மில்லாப் புதிய பிரதேசத்துக்குக் கொண்டுபோய், மூன்றுமாத காலம்வரை அடைத்து

வைத்திருந்து, பிறகு திறந்து விட்டவுடனே, தான் ஆதியில் பிறந்து வளர்ந்த இடத்துக்கு ஓடிப்போய், தன் கூட்டிற்காக, அப்பொழுது அங்கிருந்த வேறு புறாவுடன் சண்டை போட்டதாம்! சில புறாக்கள் இருபது வருஷங்கள் வரையில் உயிரோடிருந்ததுண்டு. மூன்று மாதப் புறாக் குஞ்சு, ஆறு மைலுக்குமேல் பறக்க வல்லது. நல்ல பிராயத்தில் (மூன்றாவது வயதில்) சில புறாக்கள் 400 மைல்வரை, சாதாரணமாய்ப் பறக்கும். வழியில் தங்கித் தங்கி, 1182 மைல்வரை புறாக்கள் பறந்திருப்பதுண்டு. புறாக்கள் இரவில் பறப்பதில்லை. மணிக்கு 35 மைல் வீதம், 10 மணி நேரம, பகலில் ஒரே ஓட்டமாய்ப் பறந்ததுண்டு. பந்தயப் புறாக்களில் சிறந்தவை, பெல்ஜியம் நாட்டில் இருக்கின்றன. பூர்வத்தில் இவை பெர்ஷியாதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டனவாம். கண்ணைமறைத்துக் கட்டிவிட்டு, 60—70 மைல் தூரம் கொண்டுபோய், பின்பு கண்ணைத் திறந்து பறக்கவிட்டாலும், தான் இருந்த இடத்துக்குத் திரும்பி வந்துவிடும். இற்றைக்கு 3300 ஆண்டுகளுக்கு முன், எகிப்தியர்கள் புறாக்களை வளர்த்துப் பழக்கித் தூதனுப்பியதற்கு ஆதாரமுண்டு. புறாக்களின் மூலமாய்ச் செய்தியனுப்புவது, தொன்று தொட்டு வரும் வழக்கம். கடைசியாய் நிகழ்ந்த ஐரோப்பிய மஹாயுத்தத்திலும் இது நடந்தது. பீரங்கியதிர்ச்சியினால் ஆகாசத் தந்தி யனுப்புவது கஷ்டமானபோது, அமெரிக்கப் படைவீரர், புறாக்களை அனுப்பினர். 1918ஆம் செப்டம்பர் 18உ காலை, போமாண்டுப் போர்முகத்துக்கு, "மாக்கா" (பரிகசிப்போன் என்பது பொருள்) என்ற புறாக் கொண்டுவந்த செய்தியினால், ஒரு பெருஞ் சைனியம் உயிர்தப்பியது; வரும் வழியிலே பட்ட குண்டுகளால் வலது கண்ணை இழந்து, தலை முழுதும் ரத்தக்குழப்பமாயிருந்தும், 'மாக்கர்' தைரியமாய் வந்து சேர்ந்தது. பிரான்சியர்கள், 1916-ம் ஆண்டிலே, புறாக்களின் மார்பிலே சிறிய இலேசான புகைப்படப்பெட்டிகளைக் கட்டிப் பறக்கவிட்டு, அவற்றின் மூலமாய், எதிரிகளின் அணிவகுப்பைப் படம் பிடித்துத் தெரிந்து கொண்டனராம். இப்படி வரும் புறாக்களைக் கொல்ல, ஜெர்மானியர் கௌதாரிகளை அனுப்பினர். அப்பொழுது, பிரான்சியர்கள், புறாக்களின் வால்களில் சிறு ஊதுகுழல்களைக் கட்டிவிட, பறக்கும்போது அடிக்கும் காற்றினால் இவை ஊத, கௌதாரிகள் பயந்து, புறாக்களை அணுகவில்லை. ஆதிகாலத்து சேனைப்படைகளும் புறாக்களைப் பழக்கிச் செய்தியனுப்பி வந்தன. சில பந்தயப் புறாக்கள் நிமிஷத்துக்கு ஒரு மைல் வேகம் ஓடும். (கிறிஸ்தவர்கள் ஒருவரை யொருவர் கொல்லும்) யுத்தத்திலே இவ்வளவு உதவிபுரியும் புறாக்களை, பெரிகிரீன், கௌதாரி முதலிய பறவைகள் கொல்வதால், அந்தக் கொலைகாரப் பறவைகளைக் கொன்று, புறாக்களைக் காப்பாற்றுதற்கென்றே,

பிரிட்டிஷார் பாராளுமன்றத்திலே, ஒரு சட்டம் ஏற்படுத்துகின்றனர். வளர் புறாக்களுக்குக் காலில் மோதிரம் பூட்டி வைப்பதுண்டு. ஆணும் பெண்ணுமாக ஒருஜோடி 'பெரிகிரீன்' பறவைகள் வாழ்ந்துவந்த ஒரு கூட்டிலே, அவை கொன்றுதின்ற புறாக்களின் சங்கைக்கு அறிகுறியாக, இப்படிப்பட்ட கால் வளையங்கள் 1028 அகப்பட்டனவாம்!

2. தேனீக்கள்—"ஓய்வொழிவின்றி உழைக்கும் தேனீ" ("Busy bee") என்று சொல்வதுண்டு. இது பொய்யாம்; மனிதரைப் போலவே, ஏதாவது செய்தற்குரிய வேலையிருந்தாலன்றி, மற்ற நேரங்களில், தேனீக்களும், சோம்பிச் சும்மா இருக்கின்றனவாம். ஒரு ஜெர்மன் இயற்கையறிஞர், தேனீக்களின் பாஷையைக் கண்டுபிடித்திருக்கிறார். அது, ஒலிகள் அடங்கியதன்று; பாத சாஸ்திரம் என்னலாம். ஏனெனின், தேனீக்களுக்குள், தேனைக் கண்டுபிடித்த ஈ ஆடும் நடனம், மகரந்தப் பொடியைக் கண்டு பிடித்த ஈ ஆடும் நடனம், என்று, வெவ்வேறு நடனங்களுண்டு. தேனீக்களின் வாசனையுணர்ச்சியும் அதிநுட்பமானது, பலமானது. "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!" என்ற பழைய வாக்கு, முற்றிலும் பொருந்தும். தேனீக்களுக்கு, சிவப்பு நிறம் கறுப்பாய்த் தோன்றுகிறது; மனிதர் கண்ணுககுப் புலப்படாத அதிக ஊதாநிறம் அவைகளுக்குத் தெரிகின்றது. நீலமும் மஞ்சளும்தான், தேனீக்கள் தெளிவாய் அறியும் நிறங்கள். —மா.

# தானே தானும் தக்கடி தங்கம்

(200-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## 5. மகா மூட யாகக் கதை

கஞ்சனூர் அம்பலத்திலே சபை கூடிற்று. செட்டியார், அவர் மகன், வண்டிக்காரர், பண்ணையாட்கள், இனத்தார்கள், ஊரிலுள்ள மற்றவர்கள் ஆகமொத்தம், ஆணும் பெண்ணும் குஞ்சும் கிழமுமாக, நூறுபேருக்குக் குறைவில்லை கூட்டம். செட்டியாரும் வேறு சில பேரும் உட்கார்ந்திருந்தார்கள்; மற்றப்பேரெல்லாம்சூழநின்றார்கள். பப்புசாத்திரியார் முதலிலே வந்துவிட்டார். "இம்! இவனு நம்மை

எதிர்க்கிறவன்? வரட்டும் அந்தப் பயல்; ஒருகை பார்த்து விடுகிறேன்!" என்று வீம்புபேசி உறுமிக் கொண்டிருந்தார்.

காசிவாசியைக் கண்டவுடனே, ஆட்கள் விலகி வழிவிட, அவரும் சாத்திரியாருக்கு எதிராக வந்து உட்கார்ந்தார். "வாருங்க, சாமி, இங்கேர பாச்சுதா! நம்ம சாத்திரியார் அப்பமே வந்து காத்திருக்காகளே. சரி, இன்னும் வீண் போது போகாமே, வர்தம் நடக்கட்டும்" என்றார் ரெட்டியார். அப்பொழுது சாத்திரியாரைப் பார்த்துக் காசிவாசி, "கிம்?" (என்ன?) என்றார்.

சாத்திரி— கிம்? கிம்? கிம்? கிம்? கிம்?

ரெட்டியார்—அப்படிப் போடுங்க, ஒருபோடு!

காசிவாசி—கிம் ஹாஸ்யம்? (அந்த வார்த்தை சாத்திரியாருக்கு விளங்க வில்லை; 'ஆலஸ்யம்' என்று காது கேட்டது.)

சாத்திரி—கிம் அரசஸ்யம்? கிம் புளியஸ்யம? கிம வேம்பஸ்யம்? கிம் மாவஸ்யம்? கிம் பனையஸ்யம? கிம் கமுகஸ்யம்?

ரெட்டியார்—போதும், போதும! காசிவாசி சாமி, அடியேன் பேச்சைக் கேளுங்க: உங்க பூச்சு நமம சாத்திரியாரிடத்திலே பலியாது; வந்த வழியைப பாத்து நடங்க; இவ்வளவு அவமானம் போதாதா?" பார்த்தார் காசிவாசி, எதிரியையும் சபையோரையும, அவர்கள் எல்லோரும் தன்னைக் கேலி பண்ணிச் சிரிப்பதையும். ஒரு யுக்தி பண்ணினார். அப்பேன்! என்ன யுக்தி தெரியுமா?"

நான்—தெரியாது, தக்கடி; நீதான் சொல்லவேண்டும்.

தக்கடி—பொருக்கென எழுந்திருந்தார்; தோள் வேட்டியை எடுத்து இடுப்பிலே கட்டினார்; கையைக் கூப்பிக்கொண்டு சாத்திரியாரை மூன்றுதரம சுற்றி வந்தார் பிறகு, "தாங்கள் மகானுபாவர்! அடியேன் தெரியாமல் செய்ததையும் சொன்னதையும் சமித்தருளவேணும." என்று சொல்லிக்கொண்டே, கீழே விழுந்து சாட்டாங்கமாய் நமக்காரம் பண்ணினார்.

சாத்திரி.—இப்பொழுதாவது புத்தி வந்ததா? சரி: எழுந்திரும்." (அப்பால் காசிவாசி எழுந்து, சாத்திரியார் கிட்டப்போய், வெகு மரியாதையோடு, "கேசப் பிரசாதம் கிருபை செய்ய வேண்டும்?" என்று சொல்லிக்கொண்டே, சாத்திரியார் தலைக் குடுமியிலிருந்து மூன்று மயிர்களை இழுத்துப் பிடுங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, மடியில் வைத்துக்கொண்டார்.

ரெட்டி.—அதென்ன, சாமி, ஏன் இப்படிச் செய்தீர்கள்?

காசிவாசி—இவாளுடைய மகத்துவம் தெரியாமல் நான் மௌட்டியமாய் அலக்ஷியம் செய்துவிட்டேன் இவாளுடைய ரோமத்திலே இரண்டொன்றை எடுத்துக் கங்கணமாகவோ, கணையாழியாகவோ தரித்துக்கொண்டால், ஸாவ ரோக ரக்ஷையது; பேய்பிசாசுகள் ஒன்றும் கிட்ட அணுகாது; ஆயுஸ் வருத்தியும் உண்டாகும்."

"ஆகா! அப்படிய !" என்று செட்டியார் எழுந்தார்; ஊரார்களும் சாத்திரியாரை நெருங்கினார்கள்; ஐந்து நிமிடத்துக்குள்ளே ஒருவர்மேல் ஒருவராக விழுந்து, சாத்திரியார் தலை ரத்த வெள்ளமாக, ஆமையோடு போலப் பொட்டலாகச் செய்துவிட்டார்கள். காசிவாசி அந்தச் சந்தடியில் மெள்ள நழுவி, ஓடிப்போய் விட்டார்.

'சாத்திரியாருக்கு இசிவெடுத்துச் சுரங்கண்டு, உடம்பு குணப்பட ஒருமாதமாச்சுது. இதுதான், அப்பேன், மகாமூடயாகக் கதை!"

## சட்ட விஷயம்

சென்னை ஹைகோர்ட்—26—6—1925

(கனம் ஜஸ்டிஸ் வேங்கட சுப்பாராவ் முன்பாக)

5. தஞ்சாவூர் ஜில்லா நாகூரிலுள்ள சங்கரய்யர் என்பவர், 8 வயதும், 6வயது முள்ள தன் பெண்கள் இருவரை, பணம் பேசி வாங்கிக் கொண்டு, குண்டூர் ஜில்லாவிலுள்ள தெலுங்கப் பிராமணர்களான வேங்கடப்பையா (வயது 30 இருக்கும்), புல்லையா (வயது 45 இருக்கும்) என்பவர்களுக்கு, அக்கினி சாக்ஷியாகக் கலியாணம் செய்துகொடுத்து, குழந்தைகளையும், பர்த்தாக்களுடன், அறிமுகமும் பேச்சும் தெரியாத, தெலுங்கு நாட்டுக்கு அனுப்பி விட்டார். பின்பு, தங்கள் பத்தினிமார்களை அந்த பர்த்தாக்கள் குரூரமாய் நடத்துவதாகத் தெரிந்து, பெண்கள் தெருண்டு பெரியவராகும் வரை தன்னிடம் விட்டுவைக்கும்படி, கேஸ் கொண்டுவந்தார். அப்படியே, குழந்தைகளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பும்படி உத்திரவு செய்கையில், நியாயாதிபதி, தன் குழந்தைகளை அடிமைக்கு விற்ற தகப்பனைப்பற்றிக் கூறியிருக்கும் சில வார்த்தைகள், யாவரும் படித்துச் சிந்திக்கத் தக்கனவாம்:—

'இந்தப் பெண்களின் தகப்பன், ஏலத்தில் அதிகத் தொகைக்குத் தன் பெண்களை விற்றுப் பணம் சம்பாதிக்கத் தீர்மானித்து விட்ட, ஒரு முழு அயோக்கியனாகக் காண்கிறான். பேரம்பேசித் தன் பெண்களை முதலில் விற்றான்; வாங்கின பணத்தோடு திருப்தியாக வில்லை என்று தோன்றுகிறது... இந்தக் கலியாணம் வியாபார முறையில் நடந்தது. தகப்பன் பெண்களை விற்கவும், புருஷர்கள் விலைக்கு வாங்கவும் ஆத்திரமாயிருந்து, இதை முடித்தார்கள். குழந்தைகள் பரிதாபகரமாய்த் தவித்து அழுகின்றனர். தங்கள் தாய் வீட்டுக்குப்போக விரும்புகின்றனர். பெற்ற பெண்கள் என்ற வாஞ்சையும், மனுஷத்தனமும், கொஞ்சமேனும் இந்தத் தகப்பனுக்கு இன்னும் இருக்குமென்று நம்பி, பெண்கள் பிறந்த வீடு செல்லும்படி நான் கட்டளையிடுகிறேன். இப்படிப்பட்ட மானக்கேடான நடத்தையை அனுமதித்துப் பார்த்துக்கொண்டிருக்கும் (ஹிந்து) சமூகத்துக்காகப் பரிதபித்து வருந்துவதன்றி, நாம் வேறென்ன செய்யக்கூடும்?"

இந்த மாதிரி கேஸ்கள் அபூர்வ மென்று நினைக்கிறேன்; எனினும்,இப்படி ஒரு கேஸாயினும் நடக்கக்கூடுமோனால், பிராமணரைப்பற்றி என்ன சொல்வது? இந்த விஷயம் பிரசுரமான தேதிப் பேப்பரில் தானே,திருச்சிராப்பள்ளி ஸ்ரீமான் F G. நடேசையரின் மாப்பிள்ளை, ஸ்ரீ இராமஸ்வாமி ஐயரென்பவர், ஒருகாலத்தில் கிறிஸ்தவராயிருந்தவரின் மகளை விவாகஞ் செய்து கொண்டிருப்பதால், பிற்பாடு ஹிந்துக்களாகி எல்லாரும் ஹிந்துக்களாகவே இப்பொழுது வாழ்ந்து வருவதையும் பொருட்படுத்தாது, இராமஸ்வாமி ஐயர் பிதாவின் சிரார்த்தத்துக்குப் புரோகிதம்பண்ணிவைப்பதில்லையென்று, ஷிம்லாவிலே புரோகிதர் மறுத்துவிட்ட செய்தியும் பிரசுரமாயிருக்கிறது. முன் கேஸில் சம்மந்தப்பட்ட சங்கரையர் பிராமணோத்தமர்; அவர் பெண்களின் விக்கிரயம் விவாக ஸம்ஸ்காரம்; இராமஸ்வாமி ஐயர் மட்டும் பிராமண சமூகத்துக்கு அருகரல்லர் என்றால், இந்தப் பிராமணச் சாதியும் புரோகிதர்களும் இருந்தென்ன, வேரோடு தொலைந்தென்ன ?

இக்காலத்துப் பிராமணர் செய்யும் மாய்மாலங்களையும் அழிம்புகளையும் பற்றி எழுதும் பேனா வறண்டு காகிதத்தைக் கிழிக்க, நினைக்கும் நெஞ்சம் வெதும்பி நொந்து புகைகின்றதே!

6. சிசு ஹத்தியும் கொலையும் – (247-ம் பக்கத்தின் தொடர்ச்சி) பம்பாய் மாகாண கவர்ன்மெண்டார், தமக்கு வழிதப்பிப் பிறக்கும் சிசுக்களைக் கொல்லும் விதவைகளுக்கு நியாயாதிபதிகள் சட்டப்படி விதிக்கும் 'மரணம்' 'தீவாந்தரம்' முதலிய தண்டனைகளை, இரண்டு வருஷம் சிறைக்காவலாக மாற்றி வருகிறார்களாம் இதுவுமன்றி, இந்த இரண்டு ஆண்டுகளை ஜெயிலில் வேலை செய்து கழியாமல், பம்பாய் பிரார்த்தனை சமாஜத்தார் பராமரிப்பிலே நடைபெற்றுவரும் பண்டாரிபுரம் அனாதைகள் ஆசிரமத்தில், அனாதைக் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில், தண்டனையுற்ற குற்றவாளிகளான விதவைகள் கழிக்கலாம்; இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு, ஆசிரமத் தலைவரின் அநுமதி யின்றி வெளியே போகக் கூடாதென்ற நிபந்தனையைத் தவிர, வேறு கட்டுப்பாடுகளில்லை. இம்மட்டோ : இவ்வாறு முறைதப்பிப் பெற்ற குழந்தையைக் கொன்றதற்காகத் தண்டனையடைந்து, அந்தக் காலத்தை ஆசிரமத்தில் சிசுபோஷணையில் கழித்து வரும் விதவையை, ஒருவன் மறுவிவாகம் செய்துகொள்ள முன் வந்தால், கழிய வேண்டிய பாக்கிக் காலமும் மன்னிக்கப்பட்டு, உடனே விடுதலை பெற்று, அவள், சுவாதீனத்தை யடைந்து, விவாகஞ்செய்துகொள்ளலாம் நியாயமும் காருண்யமும் கலந்த இம்முறையை, நமது சென்னைத் துரைத்தனத்தாரும் கையாளக்கடவர், இந்தச் சந்தர்ப்பத்தில், திருவாங்கூர் ஸம்ஸ்தானம் சொன்னூரா என்னும் ஊரில் ஒரு பிராமண விதவை ஆயுள் முழுதும் சிறை விதிக்கப்பெற்று, திருவனந்தபுரம் சிறைச்சாலையிலிருப்பதாகத் தெரியவருகிறது. கருணையுள்ள ரீஜண்டு மகாராணியார் இதைக் கவனித்து, பம்பாய் துரைத்தனத்தாரின் முறைப்படி நியாயஞ் செய்தல் தகும். கர்ப்ப சீமாட்டியான அரசியேயாயினும், பெண்பாலாரின் கஷ்ட நிஷ்டூரங்களை ஆண் மக்களினும் எத்தனையோ மடங்கு ஆழ்ந்து உணரக் கூடுமாதலின், 'பெண்மலையாளம்'' என்று புகழப்பெறும் பிரதேசத்திலே, இப்படிப்பட்ட கொடுந்தண்டனைகள் விதித்தல் பொருந்தாது.

7. சிறுவர் துற்றம்—விவரந்தெரியாத சிறுவர் சிறுமிகள் குற்றஞ் செய்தால் யார் பொறுப்பாளி? சீனாவிலே, ஒரு சிறு பையன் தன் தந்தையையே கொன்று விட்டான்; அந்தக் குற்றத்துக்காக, அவனையும், அவன் (வளர்த்து வந்த) மாமனையும் சிரச்சேதம் செய்ததுமன்றி, அவன் பள்ளிக்கூடவாத்தியார் 2000 மைலுக்கப்பாலும், அவன் வீட்டின் இருபுறத்து அயலாரும் 1000 மைலுக்கப்பாலும், ஊரைவிட்டுத் துரத்தப்பட்டனராம். இவர்கள் எல்லோரும் அவன் குற்றத்துக்குப் பொறுப்பாளிகளாய் மதிக்கப் பட்டனர்.


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

## தட்சிண சரித்திர வீரர்

144-பக்கங்கள். 11-படங்கள்.

பண்டிதர்களும் சரித்திராசிரியர்களும் மெச்சும் நூல்! தேச பக்தியை வளர்ப்பது!

விலை 0—10—0; தபாற்கூலி 0—2—0;

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,
மயிலாப்பூர் - சென்னை.

## "தாருல் இஸ்லாம்"

சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த
செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாமத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

# பத்திராதிபர் குறிப்புகள்

(256-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

14. "தமிழர் சூத்திரர்களா?":- இந்தத் தலைப்பின் கீழ், "திராவிடன்" ஆசிரியர் எழுதியுள்ள கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். அவர் கூறும் நியாயங்களிற் சில, சரித்திர ஆராய்ச்சி முறைக்கு ஒவ்வாவாயினும்; காரண காரியத் தொடர்ச்சி சில விடங்களில் முறிபட்டுக் காண்கின்றதாயினும், "புருஷ சூக்த"த்திலே காணும் "சூத்திரர்" என்ற பதம் தமிழருக்குப் பொருந்தாது என்ற முடிபு, சரியெனவே தோன்றுகின்றது. அந்த முடிவை நிலை நாட்டுவதோடு கட்டுரையை நிறுத்திவிடாமல், "சூத்திரர்" என்ற பெயருக்குப் பிராமணரே உரியவர்கள் என்று நிலைநாட்டவும் முயன்றிருக்கிறார். படைப்போரிற் போல் சொற்போரிலும், இதுவும் ஒரு நல்ல யுக்திதான். இது நிற்க: "திராவிடன்" ஆசிரியர் துணிவின் படி உண்மையில் சூத்திராரும் பிராமணரும், தமிழரும, இந்நாளிலே கவனித்தற்குரிய பேருண்மை, வேறொன்றாகும்: அஃதாவது, பிறர் ஏவும் பணிசெய்து, பிறர்க்காக உழைப்போரே சூத்திரர் எனின், இந்தியர் எல்லோரும் இன்று சூத்திரரேயன்றி, வேறல்லர். ஆராய்ச்சி, விவாதம் ஒன்றும் வேண்டாத, பிரத்தியக்ஷப் பிரமாணமான உண்மை இது. இந்த இழிவை நீக்கிச் சுயாதீனத்தை அடைந்து, பிறர் தம்மை ஏவாது உண்ணும் பெருமையைப் பெறும் வரை, எவர் பிராமணர், எவர் க்ஷத்திரியர், எவர் வைசியர், எவர் சூத்திரர், எவர் தீண்டாதார் என்பதைப்பற்றி வாதங்களுக்கும் சந்தேகங்களுக்கும் இடமிருப்பினும், இவ்வாறு தம்முள் மூரணிச் சண்டையிடும் இந்தியர் எல்லோரும் முழுமூடர்களே என்பது, வழுக்கற்ற, சந்தேகமற்ற உண்மையாகும். இந்த உண்மையை, நமது சென்னை மாகாண வாசிகளே மற்றவரினும் அதிகம் மறந்து வாழுகின்றனர். இதை ஜனங்களுக்கு நினைப்பூட்டுவதே எல்லாப் பத்திராசியர்கட்கும் முதற் கடமையாகும்.

15. தேவஸ்தானங்களும் கல்வி யபிவிருத்தியும்:— திருப்பதி தேவஸ்தானச் சொத்தில் மிகுந்துள்ள பணத்தையும் கல்வி யபிவிருத்தியில் செலவிடக்கூடாதென்று சிலர் ஆக்ஷேபித்திருக்கின்றனர். இப்படிச் செலவு செய்வதன் நியாயத்தை நான் இதற்கு முன்னமே விளக்கிக் காட்டியிருக்கிறேன். (254-255-ம் பக்கங்களைப் பார்க்க).

மற்ற நாடுகளிலும் மடாலயங்களின் சொத்துக்கள் கல்வி யபிவிருத்தியில் செலவிடப்பட்டு வருவது, இந்தக் காசில் ஸயாம் நாட்டைப்பற்றிய கட்டுரையைப் படிப்போர்க்கு விளங்கும். சீன தேசத்திலும் இவ்வாறே நடந்து வருகின்றது. கல்வி யபிவிருத்தியானது ஆத்ம ஞானத்துக்கு அவசியமில்லை என்றெண்ணும் மூடக்கொள்கையினர்தான் இதைத் தடுக்க முயலுவர்.

16. கொலையும் சிசுஹத்தியும்:—(இதைப்பற்றி 316-ம் பக்கத்தைப் பார்க்க) முறை தவறித் தாங்கள் பெறும் குழந்தைகளை மானத்துக் கஞ்சிக் கொன்று விடும் தாய்மார்களுக்கு விதிக்கப்படும் தண்டனையை, இரண்டு வருஷம் சிறைக்காவலாக மாற்றி விடுவதுமன்றி, அந்த இரண்டு வருஷங்களையும் அநாதத் தாய்மார்கள், மற்றக் குற்றவாளிகளுடன் ஜெயில்களில் கழியாமல், அனாதைச் சிசுக்களைப் பேணி வளர்க்கும் பண்டாரி புரத்திலுள்ள (Pandharpur) ஆசிரமத்திலே கழிக்கும்படி, பம்பாய் மாகாண கவர்ன்மெண்டார் விட்டு விடுகிறார்களாம். இதுவுமன்றி, தண்டனைக் காலம் முழுதும் கழியுமுன் அப்படிப்பட்ட (சிசுஹத்தி செய்த) தாயை எவனாவது ஒரு புருஷன் விவாகம் செய்து கொள்ள உடம்பட்டு அந்தத் தாயும் அதை விரும்பினால், தண்டனையை ரத்து செய்து, கலியாணஞ் செய்து கொண்டு சுகமாய் வாழும்படி வெளியே விட்டு விடுகிறார்களாம். இதுதான் இரக்கத்தோடும் தீர்க்காலோசனையோடும் கூடிய நியாயமாகும். இதை யறிந்தவுடன், அதே மாதிரி சென்னை கவர்ன்மெண்டாரும் செய்தல் உசிதமாகுமென்று, கனம். ஸர். வி. பி. இராமஸ்வாமி ஐயரவர்களுக்கு நான் எழுதினேன். சென்னை துரைத்தனத்தாரும் அவ்வாறே தண்டனையைக் குறைத்து வருவதாக, அவர்கள் உடனே பதிலெழுதினார்கள். ஆனால், சென்னை மாகாணத்திலே பண்டாரிபுரம் ஆசிரமத்தைப் போன்ற அநாத சிசு போஷணாசிரமம் ஒன்றில்லாமையால், குற்றவாளித் தாய்மாரை ஆசிரமத்துக்கனுப்பாமல், சிறைச்சாலைக்கே அனுப்பவேண்டி யிருக்கிறது. பண்டாரிபுரம் ஆசிரமத்தாரோ இதர மாகாணங்களி லிருந்து அனுப்பப்படும் குற்றவாளித் தாய்மாரையும் மேற்பார்க்கச் சித்தமாயிருக்கிறார்கள். ஆதலால், நம்ம மாகாணத்தில் அப்படிப்பட்ட ஆசிரமம் ஒன்றை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்வதுடன், அதுவரை, அப்படிப்பட்ட குற்றவாளிகளை பண்டாரிபுரம் ஆசிரமத்துக்கு அனுப்பிவிடுவதே உத்தமமாகும்.

17. நூல்சந்தா:—இதைக் காங்கிரஸில் புகுத்தி, ராஜீய விஷயமாக்குவ தன்றி, கட்டாயமாக்கித் தேசத்தொண்டர்களை வீணே வருத்துவது தகாது, பயன்படாது, உசிதமன்று என்று, இந்தப் பத்திரிகையில் (முதல் மாலை—264—265 பக்கம்) இதற்கு முன்பே எழுதியிருக்கிறேன். இந்தப் பிரசாரத்தின் பலனாக, கத்தர் உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்திருப்பது

மெய்யெனினும், உண்மையான ராஜீயத்துறையில் முயற்சியும் ஊக்கமும் குன்றி, கட்சிகள் பலத்து, இந்தியா எல்லோரும் சுயராஜ்யத்தை நாடி யுழைக்க ஒன்று சேராமைக்கு, இதுவும் ஒரு காரணமாய் இருந்து வந்தது. இப்பொழுதேனும் மகாத்மாகாந்தி விட்டுக்கொடுத்து, இந்த நிர்ப்பந்தத்தை நீக்கியது, இந்தியாவின் நல்ல காலந்தான். இதனால் வீணாந்த அபிப்பிராய பேதங்களும் மனஸ்தாபங்களும் ஒழிந்து, காங்கிரஸ், முன் போலப் பலப்பட்டு, பல்வேறு கட்சியினரும் கூடியுழைக்கும் சுயராஜ்யப் போர்க்களமாகவேண்டும். சமீப நிகழ்ச்சிகளும பேச்சுக்களும் நடவடிக்கைகளும், இந்தியர்கள் பரிபூரண ஒற்றுமையில்லாத வரை, சுயராஜ்யம் கிட்டா தென்பதைத் தெளிவாய் விளக்குகின்றன. ஜன நாயகர்களும் அதைக் கவனித்து வருகின்றனர். தன் சொந்த அபிப்பிராயங்களின் நிமித்தமேனும், வேறு அற்ப காரணத்தினாலேனும், நாட்டுக்காகச் சேர்ந்துழைப்பதைவிட்டு விலகி நிற்பவன் இனித், துரோகியே யாவன்.

அ. மாதவையர்.

# புராதனகாலத்து வித்தியார்த்திகள்

(264-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேற் கொண்டவர்கள் 'திடகாத்திர சரீரர்களாயும்' ரோகமில்லாதவர்களாயும், சத்திய சீலஸம்பன்னராயும், பூர்ணாயுளுள்ளவர்களாயும், ஆசாரியனைப்போலும் அவருக்கு மேலும் புத்திவன்மையில் தீக்ஷிண்யமுள்ளவராயும் இருந்ததாகக் காண்கிறோம். இப்படிப்பட்ட புண்ணிய புருஷர்கள் அரசாங்கத்தில் பூர்வ காலத்திலிருந்து பெருங் காரியங்கள் செய்தாரகள் என்று பிரசித்தியாய்ச் சொல்லுவதிலிருந்து, இவர்கள் பிரமசரிய ஆசிரமத்தில் பெற்ற பயிற்சி இத்தன்மைத்தெனபது தெளிவாய் அறியக் கிடக்கின்றது. இப்படிப்பட்ட பிரமசரிய ஆசிரமத்தைக் கிரமமாய்க் காப்பாற்றி உலகத்திற்குபயோகமாக்குவதைக் காட்டிலும் சிறந்ததொன்றுமில்லை. வாலிப சாரணர்கள் போன்ற பூர்வ குருகுலவாஸத்திற் பயின்ற பிரமசாரிகளே உலகத்திற்குப் பலவிதத்திலும் வழிகாட்டிகளாக வேண்டும். இந்த வகைபபட்ட பிரமசாரிகளே, அஸ்பர்சித்துவம் என்ற தீண்டாமையை யொழித்து வருஞ்சந்ததியார்கள் சௌக்கியமாய் வாழ வழிதேடவேண்டும். பூர்வ காலத்து மாணவர்களும் மாணவிகளும் பூர்வ காலத்தில் தமக்கேற்பட்ட குருகுலத்தில் மேற் கூறியவாறு நன்கு பயின்று மேம்பட்டு விளங்கினார்கள் எனறறிகிறோம்.